1124

REGD. No. M. 2913.

ஆர்யதர்மம்

சந்தா விபரம்.
[தபால் சிலவுள்பட]

ஜீவிய சந்தா	...	ரூ. 50
ஒரு வருஷ சந்தா	...	ரூ. 2¼
ஆறுமாத சந்தா	...	ரூ. 1¼

தனிப்பிரதி முக்காலணு
மாதிரிப்பிரதிக்கு எழுதவும்

வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

விளம்பர விகிதம்.

ஒரு முழுப்பக்கம் ஒரு தடவை	ரூ. 20
அரைப்பக்கம் ஒரு தடவை	ரூ. 12
ஒருபத்தி ஒரு தடவை	ரூ. 8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு ஒரு தடவை	அணு 8

நீண்டகால விளம்பரங்களுக்கு
தனி சார்ஜ்.

பு-26 | கும்பகோணம் விக்ரம-ஸூ மாசி-மீ 9௳ 1941- ஸூ பிப்ரவரி-மீ 20௳ | ஸ- 7

வாரக் குறிப்புகள்

ஸ்ரீவத்ஸ வே. ஸோ. சர்மா

ஸ்ரீ மௌனஸ்வாமி விஜயம்!! சென்னை நகர் செய்த பாக்யத்தால் குற்றாலம் ஸ்ரீஸ்வாமிகள் நெல்லூர் சென்று இங்கு விஜயம் செய்திருக்கிறார்கள். பல பக்தர்கள் தர்சித்து வருகின்றனர். சிவராத்ரிக்கு ஸ்ரீ காளஹஸ்தி விஜயம் செய்வார். ஆர்யதர்மம் [illegible]பர் தர்சித்து ஆலயப்ரவேச விஷயமாக [illegible] போது "எனது சிஷ்யர்கள் கூட [illegible]விட்டதை எவ்வளவு தூரம் போ[illegible] ஆர்யதர்மம் போன்ற பத்ரிகையும் நிருபர் போன்ற பிரசாரகரும் வேலை செய்தால் விரைவில் ஜயம் என எழுதி அனுக்ரஹித்தார்கள்.

காந்திஜிக்கு தந்தி!! நமது ஆர்யதர்மம் நிருபரும், அ. க. வி. ஸபை தலைவரும் திருவையாற்றில் அவர் சீடர், பிராமண சிறுவர்களுக்கும் தர்மத்திற்கும் செய்யும் தீங்கை கவனித்து திருத்தும்படி தந்தி அடித்திருக்கிறார்! பதிலைப்பார்ப்போம்!!

குரங்கு கை பூமாலை!! மந்திரிவேலைமுதல் பஞ்சாயத்வரை காங்க்ரஸ் ஆக்ஷி அனுபவம் ஏற்பட்டு, அது இத்தகையதென பொது மக்களுக்கு நன்றாக தெரிந்துவிட்டது. பலர் கூறியும் கேளாமல் பிராமணப் பிள்ளைகளை பட்டினி போட்டு சீர்திருத்தத்தை ஸ்தாபிக்க முயல்வது பலாத்காரமல்லவா? ஹிம்ஸையல்லவா? இனி எந்த முகத்துடன் பொது மக்களை ஓட்டு கேட்பது?

மதுரையா? பஞ்சாபா? ஹிந்து மா ஸபை நடந்த பின் மதுரை இத்தகைய நிலைக்கு வந்து விட்டது! கத்திக்குத்து! கொலை! சண்டை!! கலஹம்!! தெருவில் நடமாட அச்சம்! ஆஹாபோதுமா? அந்தோ! பாபம் பாபம்!

தலைவர்களெங்கே? எங்கே? சபைநடத்திய தலைவர்கள் எங்கே? பறந்தோடி சமாதானம் நாளைவிக்க வேண்டாமா? ஏழை இந்தியரைக் காக்கவேண்டாமா? இதுவரை இத்தகைய சண்டை மதுரையிலுண்டா?

நம் தலைவரின் பெருமை!! கல்கத்தா கூட்டத்திற்கு தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட பிர்மஸ்ரீ ராஜமான்யராவ்ஸாஹெப் நடேசய்யர்வாளுக்கு அங்கு நடந்தவரவேற்பும் கௌரவமும் எங்கும் வேறுஎவருக்கும் நடந்திராதென கல்கத்தாவில் பார்த்த நண்பர் கூறுகிறார். தார்மிகர் வாழி.

[illegible]க்ராதிகாரிகள் கவனிக்க.? ஸ்ரீ பகவத் பாதாள் [illegible] தேவாக்ஞை; வேதாக்ஞை! எண்ணி ஏகாதசிகதை முதலியவைகளை விடாமல் நடத்துங்கள்! உபன்யாசம் செய்ய பண்டிதர் கிடைக்காவிடில், தமிழில் வெளிவந்த பாரதராமாயணாதிகளையேனும் படித்து ஒருவர் கூறல் நலம்!

அடியேனது கைங்கர்யம்!! 25 ஏகாதசி மஹிமை! 18 கீதாத்யாய மஹிமைகளை விளக்கும் பாத்மம் பிரும்ம வைவர்த்தம் பிரும்மம் மார்க்கண்டேயம் கூர்மம் வாமநம் ஆகிய யான் வெளியிட்ட புராணங்களை ஏகாதசி கதை நடத்தும் முத்ராதிகாரிகளுக்கு பாதி விலைக்கு 154 தம்பு செட்டி வீதி சென்னையிலிருந்துமாத்ரம் அனுப்புகிறேன். பாதிவிலை 6 ரூ. 1—11—0 தபால் வேறு

குறும்பா? பொறுப்பின்மையா? திருக்கோவிலூர் பிரபல வக்கீலான ஸ்ரீ வி. ஜி. ராமசந்திரய்யரெனும் கனவான் வைதிக தர்மாபிமானி, கோவில் தர்மகர்த்தா, உத்ஸவத்தில் உபன்யாஸாதிகளை நடத்துகிறார். அவர் சிறை சென்றதாக அவ்வூர் நிருபர் எழுதியது மிகவும் கண்டிக்கத்தக்கதாம். அவர் நண்பர்களும் பந்துக்களும் திடுக்கிட்டனர். அதை நம்பவுமில்லை!

ஸ்ரீ காஞ்சீ காமகோடிபீடாதிப [illegible]
[illegible]

புதுக்கோட்டை [illegible]
[illegible]

[illegible]

[illegible]

மத்யஸ்தர்களின் முயற்சி! இந்திய அரசாங்கத்திற்கும் காங்கிரஸுக்கும் ஸந்தி செய்யும் முயற்சி செய்யப்படுகிறது. உலகில் கிளர்ச்சி நின்று சாந்தியே விரும்பப்படுகிறது.

மாவையும் கண்டபாலையும் போட்டி
குழந்தையின் குடலைக்கெடுக்காதீர்.
தாய்ப் பால்தான்
குழந்தைக்குச் சரியான உணவு.

பயஸ்யா (Regd)
தாய்ப்பாலை விசேஷமாய்வளர்க்கும்
திவ்ய ரஸாயனம்
விலை ரூ. 2—4—0
(Packing & Postge extra)

Address:—
"ஆத்ரேய"
ஆயுர்வேதிக் ஒர்க்ஸ் தென்னூர் ரோடு, திருச்சினுப்பள்ளி.
ப்ரோப்ரைடர்: V. B. நடராஜசாஸ்திரி
ஆயுர்வேதாசார்யா

வித்யாஸ்தான விவேகம்

(ஆத்ம வித்யா பூஷணம் V. ஜகதீச்வர சாஸ்திரிகள்)

சப்தராசி ஸமூக வடிவமான வேதங்களுக்கு அதிஷ்டான தேவதைகளிருக்கின்றன. சைதந்யசக்தி வேதங்களில் வியாபித்துக்கொண்டிருப்பதாக வார்த்திகம் முதலிய கிரந்தங்களால் புலனாகிறது. ஸ்மார்த்த மந்திரங்களை ஜபம் செய்வதைக் காட்டிலும் வேத மந்த்ர ஜபம் செய்வதே ச்ரேஷ்டமானது. நமக்கு வேதங்களே மூலக்ரந்தமாயிருப்பினும், வித்யாஸ்தனங்கள் அதன் ரக்ஷணத்தின் பொருட்டு வியாக்யான ரூபமாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளன. வித்யாஸ்தானமென்றால் வித்யோத்பத்திஸ்தானமென்று அர்த்தம். அது 18 விதம். அதாவது, ருக், யஜுஸ், ஸாமம், அதர்வம் என்ற வேதங்கள் நாலு. சிக்ஷை, கல்பம், வியாகரணம், நிருக்தம், சந்தஸ், ஜ்யோதிஷம் என்ற ஆறு அங்கங்கள். புராணம், நியாயம், மீமாம்ஸை, தர்ம சாஸ்திரங்கள், ஆயுர்வேதம், தனுர்வேதம், காந்தர்வ வேதம், அர்த்தசாஸ்திர ரூபங்களான நான்கு உபவேதங்கள். ஆக 18 வித்யாஸ்தானங்கள். இவற்றைத்தவிர, ஸாங்க்யம், யோகம், ந்யாயம், வைசேஷிகம், பூர்வமீமாம்ஸை, உத்தரமீமாம்ஸை, உபபுராணங்கள் 18. இதிஹாஸம், ஆகமம், தந்த்ரம், பாரதம் ராமரயணம் முதலிய சாஸ்திரங்கள் சாகோபசாகமாக விருத்தியடைந்திருக்கின்றன. அவற்றையெல்லாம் மேற்கண்ட 18 வித்யாஸ்தானங்களுக்குள் அடக்கம் செய்து விடலாம். புராணங்களில் உபபுராணங்களையும் [illegible]த்தை நியாயத்திலும் மீமாம்ஸையில் உத்தரமீமாம்ஸையையும் ஆகமம் முதலிய மற்ற சாஸ்திரங்களையெல்லாம் உசிதப்படி தர்ம சாஸ்திரத்திலும் அடக்கிவிடுவது சுலபம். இந்த 18 வித்யாஸ்தானங்களையும் ஜீவராசிகளிடத்தில் கிருபையால் பகவானே வெளியிட்டார்.

தக்ஷ, நாரத, வஸிஷ்ட, மனு, யாக்ஞவல்க்யர் முதலிய மகரிஷிகள் அவ்வித்யாஸ்தானங்களை பிரசாரமடையும்படி செய்தார்கள். பகவத் கடாக்ஷத்தால் அவ்வித சக்திவிசேஷம் அம்மஹரிஷிகளிடம்யமையப்பெற்றுள்ளன. வேதவியாஸ பகவான் அகண்டசப்தராசி ரூபமான வேதங்களை நான்காக வகுத்துச் சீர்படுத்தியது போலவே புராணோபபுராணங்களையும் 18 ஆக வகுத்தாரே ஒழிய ஸ்வதந்த்ரமாய் செய்ததாய் சொல்வது சரியல்ல. நமது மகரிஷிகளெல்லோரும் மேற்கண்ட வித்யாஸ்தானங்களைப் பிரசாரம் செய்யும் வேலையில் அத்யாபகர்களாக பகவானால் நியமிக்கப்பட்டவர்கள், இப்பிரபஞ்சத்திற்கு ஆதிகர்த்தாவான பகவானால் மகரிஷிகளும் ஸிருஷ்டிக்கப்பட்டிருப்பதால் மகரிஷிகளின் சாமர்த்திய சக்திக்கெல்லாம் பகாவானின் அனுக்ரஹந்தான் காரணம். பகவானும் கூட ஒரு அத்யாபகர் தான். ஆனால் அவருக்கு அத்யாபகர் வேறொருவர் இல்லை. ஆகவே அவர் ஆதிகர்த்தா, ஆதிகுரு ஆதி கவியுமாவார். கவியென்றால் த்ரிகாலக்ஞானியென்று அர்த்தம். ஸர்வக்ஞனான பகவானுக்குத்தான் கவியென்ற பதம் முக்யார்த்த்முள்ளதாகும். மற்ற கவிகள் பூர்வ கவிகளின் வர்ணன வழியைப் பின்பற்றிக் காவ்யம் முதலியவற்றை எழுதுவதால் கவி பதம் முக்யமாக அவர்களிடம் பொருந்தாது.

'कविर्मनीषि' 'कविंकवीनां' 'कविं संम्राजं' परमं कवीनां' 'कवितमं कवीनां'

என்ற சுருதிகளெல்லாம் பகவானை ஸர்வோத்கிருஷ்டகவியாக ஸ்தோத்திரம் செய்திருக்கிறது. தார்க்கிகரென்றோ, ஸாங்க்யரென்றோ ஸ்தோத்திரம் செய்யவில்லை. மற்ற கவிகள் பூர்வ கவி கற்பனையையனுசரித்து காவ்ய ச்லோகங்களை வெளியிடுவதற்கும் பூர்வ கல்பங்களையனுசரித்து வித்யாஸ்தானங்களைப் பகவான் பிரகாசப்படுத்துவதற்கும் வித்யாசமுண்டு. மற்றவர் ஞானசக்தி குறைவால் பூர்வகவி மார்க்கானுசாரிகளாகயிருக்கிறார்கள். பகவான் அப்படியல்ல. பகவான் பூர்வக்ரமத்தையனுசரித்து வித்யாஸ்தானங்களை வெளியிடுதல் கர்மோபாஸனாதிகளால் தன்னை உபாஸித்து ஜீவராசிகள் ச்ரேயஸ்ஸையடைய வேண்டியேயொழிய ஞானசக்திக்குறைவால் பூர்வக்ரமத்தை மற்ற கவிகளைப்போல் அபேக்ஷிப்பதில்லை.

பிரளயத்தில் பகவான் ஒருவரைத்தவிர மற்ற பிரபஞ்சமோ, வித்யைகளோ கிடையாது. ஸகலமும் பகவானிடத்தில் பிரளயத்தில் அரக்கு உருண்டையில் தங்கத்தாள் போல் ஒட்டி ஒடுங்கியிருக்கிறது. பகவான் கால பரிச்சின்னரல்ல. பூர்வ கல்ப விருத்தாந்தத்தையெல்லாம் அறியும் சர்வக்ஞான சக்தி சுபாவமுள்ளவர். ஸர்வானுக்ராஹக சுபாவம் வாய்ந்தவர். கர்மோபாஸனாதிகளின் ச்வரூபம் தெரிவதன் பொருட்டு பகவானுக்குப் பூர்வ ஸிருஷ்டியைக்கவனிக்க வேண்டியதவச்யமாயிருக்கிறது. ஆகவே கர்மோபாஸனாதிகளைத் தெரிவிப்பது மூலமாக நான்கு வேதங்களும் பகவத்ச்வரூபத்தையே வர்ணிக்கின்றன. வேதங்களுக்கு முக்யதாத்பர்யம் பகவத்ஸ்வரூப வர்ணனத் [illegible]லோ, ஸ்வர்க்கம் முதலிய லோகங்களிலோ, வேதங்களுக்கு முக்ய லக்ஷ்யமில்லை. பகவானை கர்மோபாஸனாதிகளால் ஆராதனம் செய்தால் அவருடைய அநுக்ரஹம் ஏற்படும். அதனால் அனாதி ஸம்ஸ்ாரபந்தம் அற்றுப் போகும். பகவத் ஸாம்யமும் ஸித்திக்கும்

கர்மாவோ, உபாஸனமோ முன்ஸிருஷ்டியில் வேறுவிதம். இந்தஸிருஷ்டியில் வேறுவிதம் எனச் சொல்வது அயுக்தம்.

பூர்வ ஸிருஷ்டியில் மனுஷ்யர்களுக்கு நான்கு கால்கள். இந்த ஸிருஷ்டியில் இரு கால்கள் என்று சொல்வது யுக்தமாகுமா? ஆகவே வேதம் கொஞ்சம் மாறிவிடும் பக்ஷத்தில் இவ்வுலகமே அடியோடு மாறிவிடும். இதனால்தான் பகவான் பூர்வக்ரமத்தையநுசரித்து இந்த ச்ருஷ்டியில் வேதாதிகளை பிரசாரப்படுத்துவதாகச் சொன்னோம்.

வேதங்களை புருஷரூபமாக சரணவ்யூகம் முதலியக்ரந்தங்களில் வர்ணித்திருக்கிறது. கோத்ரஸூத்ராதிகளும் ஒவ்வொரு வேதத்திற்குமுண்டு. ருக்வேதத்திற்கு ஆயுர் வேதம் உபவேதமாகும். அத்ரிகோத்ரம்வெளுப்புவர்ணம். யஜுசுக்கு தநுர்வேதம் உபவேதம். கர்ச்யப கோத்திரம் தாம்ர வர்ணம். சாம வேதத்திற்கு காந்தர் வேதம் உபவேதம். பாரத்வாஜ கோத்ரம். அனேக வர்ணம் அர்த்தசாத்திரம் உபவேதம் வைகானச கோத்ரம், நீலவர்ணம்.

ஈதி, த்ருதி, சிவா, சக்தி, என நான்கு பார்யைகளும் கிரமமாய் நான்கு வேதங்களுக்குமிருப்பதாகத் தெரிகிறது. வேதங்களுக்கு சிக்ஷை மூக்கு, முகம் வியாகரணம் ஜ்யோதிஷம் கண், நிருக்தம் காது. கல்பம் கைகள் சந்தஸ் பாதம். இதனாலேயே இவ்வாறுகளுக்கும் வேதாங்கங்களென்று பெயர்.

(தொடரும்)

ராஜபுத்ரக்கதைகள்

(சென்ற வாரத்தொடர்ச்சி)

மிலேச்சர்களின் ஆக்கிரமிப்பைப் தடுப்பதிலும் அவர்களை வென்று அவர்கள் நாடு வரையில் விரட்டிச்சென்று விட்டு திரும்பியவருமான பப்பாராவல் ம்லேச்ச ஸம்பந்தத்தை நாடியிருக்க முடியாது. சித்தூர் காட், ஏகலிங்க, அசேலேச்வர கல்வெட்டுக்களிலிருந்தும் இது புலப்படுகிறது.

हारितराशिवचनाद्वरमिन्दुमौले रासाद्य सद्विजवरो नृपतिर्बभूव । पर्यगृहीन्नृपसुताः शतशः स्वशक्त्याऽजषीच्चराजकमिलां सकलां बुभोज ॥

दत्वा महीमच्छगुणाय सूनवे नवेन्दुमौलिं हृदि भावयन्नृपः । जगाम बाप्पः परमैश्वरं महो महोदयं योगयुजां असंशयम् ॥

यद्वंशोगुहिलस्य राजभगवन्नारयणः कीर्त्यते तत्सत्यं कथमन्यधा नृपतयस्तं संश्रयन्ते तरां । मुक्तेः कल्पित वेतसः करतलव्यासक्तदण्डोज्ज्वलाः प्राणत्राणधियः श्रियस्समुदयैर्न्यस्ताषहस्ताः सदा । एतेऽद्यापि महीभुजः क्षितितले तद्वंशसंभूतयः शोभन्ते सुतरा मुपात्तवपुषः क्षात्रा हि घर्मा इव ॥

பாப்பா ராவல் காலத்துக்கு முன்பே தொடங்கிவிட்டது துருஷ்கர்களின் தொந்திரவு. எவ்வளவோ அரசர்கள் தனித்தனியாக நின்று போராடி மாண்டனர்.

ரோஷன் ஆலி என்ற மஹமதியத் துறவி நாடுசுற்றி வருகையில் ஆஜ்மேரையும் அடைந்தான். அரசனுக்கு என்று வைத்திருந்த தயிர் பாண்டத்தில் கையைவிட்டான். [illegible] யைத்துணித்தான் அரசன். அலறிக்[illegible] மெக்காவுக்குத் திரும்பினான் க[illegible] [illegible]தான் காலிபா வியாபாரிகள் வேஷம் அணிந்த ஓர் துருஷ்க குதிரைப்படை புறப்பட்டுவிட்டது கடல்மார்க்கமாக வந்த அப்படையை கரை ஏறவொட்டாது தடுத்தான் அஜய பாலன். போர்மூண்டது. அஜயபாலன் சளைத்து விழுந்தான். அவன் விழுந்த இடத்தில் கட்டப்பட்ட கோபுரம் தன் கடமையை செய்துகொண்டே மாண்ட இவ்விஜய பாலனை இன்றும் ஞாபகமுறுத்திக் கொண்டிருக்கிறது. "அஜயபால மேளா" என்று பிரதிவருஷமும் கூடும் யாத்ரீகர்களின் கூட்டமும் அழியாச் சின்னமாக விளங்கிவருகிறது.

ஆயினும் என்ன? துருஷ்கப்படை முன்னேறிவிட்டது. கொத்தளத்து மீது விளையாடிக்கொண்டிருந்த அரசகுமாரனைக் கண்ணுற்ற ஓர் துருஷ்கன் அக்குழந்தைமீது தன் அம்பை எய்துமாய்த்தான். ஒருநாளும் இல்லாது அன்று தன் காலில் வெள்ளி பாதஸரம் அணிந்திருந்தது அக்குழந்தை, அப்படியே விழுந்து இறந்தது. அதுமுதல் வெள்ளியை காலில் அணிவதை ஒழித்தனர். அக்குலத்தோர் அக்குழந்தையையும் பித்ருக்களில் ஒருவராக கொண்டாடி வருகின்றனர்.

காலிபா ஓமார் காலத்திலேயே இந்தியாவுடன் போக்குவரத்து ஆரம்பமாகிவிட்டது கூர்ஜரதேசத்திலிருந்தும் ஸிந்து பிரதேசத்திலிருந்தும் வியாபாரம் தன்நாட்டுக்குள் புக வேண்டுமென்றே பஸ்ஸோரா துறைமுகத்தை ஏற்படுத்திக்கொண்டார் ஓமார். அவருக்கு பின் காலிபாக வந்த ஊஸ்மான் இந்தியாவை படையெடுக்க தானே நேரில் வருவதென்று தீர்மானித்துக்கொண்டு முன்னதாக ஓர் சைன்யத்தை அனுப்பினான். காலீப் வாலித்காலத்தில் தான் ஓர் பெரும்படை

(தொடர்ச்சி 3ம் பக்கம்)

ஸமபந்தி போஜன உத்திரவு

காங்கிரஸ்காரர்களின் ஹடம்.

ஆஸ்திகர்கள் விலகுவதே நலம்.

திருவாதி ஸம்ஸ்கிருத காலேஜில் ஜாதி பேதமின்றி ஒரே சமையலும் ஒரே இடத்தில் போஜனம் நடக்க வேண்டுமென்ற கட்டாயத்தை உண்டு பண்ணியிருக்கும் தீர்மானத்தை, தஞ்சை ஜில்லா போர்ட்டார் நிறைவேற்றியிருப்பதைப்பற்றி ஆஸ்திகர்கள் நடந்துகொள்ள வேண்டிய வழி தெளிவாயிருக்கிறது. இது ஸம்பந்தமான ஜில்லா போர்ட் நடவடிக்கை விவரத்தையும், உபதலைவரின் அறிக்கைகளையும் கவனித்தால் வேண்டுமென்றே இந்த ஹடத்தைச் செய்திருக்கிறார்கள் என்பது விளங்கும். அந்த நடவடிக்கை விவரம் வேறு பத்தியில் பிரசுரமாகியிருப்பதை நேயர்கள் கவனிக்கவேணும். அந்தக் கூட்டத்தில் 31 பிரம்மணரல்லாத மெம்பர்கள் ஆஜரிலிருந்தார்கள். பிராம்மண மெம்பர் இருவரே. அவர்களும் காங்கிரஸ் வாதிகள். மேலும் ஒரு பந்தி போஜனத்தீர்மானமானது முன்னறிவிப்புடன் விஷய சூசிகையில் சேர்க்கப்படவுமில்லை.

கூட்டம் முடியும் தருவாயில் அத் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருப்பதுடன் அதை உடனேயே அமுலுக்கு கொண்டு வரவேணுமென்றும் தடபுடலாய்த் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. தீர்மானம் எவர் [illegible]சேபமின்றியும் நிறைவேறியிருக்கிறது. [illegible]ட்டியிலிருக்கும் காங்கிரஸ்காரர்கள் [illegible]ப்பாரிடம் கொண்டிருக்கிற த்வேஷத்தால் தூண்டப்பட்டு இந்த அநீதியைச் செய்திருக்கிறார்கள். இத்தகைய விபரீத புத்திப்போக்குள்ளவர்களிடம் நமது ஆஸ்திக சமூகத்தினர் பரிஹாரம் கேட்பது பலிக்கக்கூடியதா? நாம் அவர்களிடம் கெஞ்சுவதில் காரியம் உண்டா? காங்கிரஸ்காரர்கள் பிறர் உரிமைகளை மதித்து காப்பாற்றக்கூடிய நற்புத்தி படைத்தவர்களல்லவென்பதும் அநுபவத்தில் பல தடவை தெரிந்தவிஷயம். தாமாக அவர்கள் நியாயவாதங்களை அஹம்பாவத்துடன் அலக்ஷ்யம்செய்து நடப்பதும் அவர்களது ஸ்பாவகுணம். இப்படி நீதி உணர்ச்சி இல்லாதவர்களிடம் ஆஸ்திகர்கள் பரிஹாரம் பெற முயற்சிப்பது பைத்தியக்காரத்தனமாகும்.

மேலும் இப்போதுள்ள கவர்ன்மெண்டின் போக்கும் ஆஸ்திகர்களுக்கு அநுகூலமாயிராது. ஆலயப்பிரவேச சட்ட விஷயத்தில் இதை நாம் நன்கு அறிந்து கொண்டிருக்கிறோம்.

ஆதலால் எற்கனவே ஆர்யதர்மம் தலையங்கமொன்றில் குறிப்பிட்டிருப்பதுபோல் ஆஸ்திக சமூகத்தினர் இத்தகைய விபரீதங்களிலிருந்து விலகியிருப்பதே புத்திசாலித்தனமாகும். பிராம்மண மாணவர்கள் காலேஜிலிருந்து வெளிவந்துவிடுவதே மேலான கார்யம். அவர்களுடைய ஸம்ஸ்கிருத வித்யாப்யாஸத்திற்கு எவ்வித குந்தகமும் ஏற்பட நியாயமில்லை. உபாத்யாயர்களும் அந்த காலேஜில் நடக்கும் ஜாதி தர்மப் புரட்சி கார்யங்களுக்கு உட்பட்டு இருப்பதைவிட அதிலிருந்து விலகிவிடுவதே யுக்தமாகும். ஊர் ஊராகக் கூட்டம் போட்டு கண்டிப்பதில் பிரயோஜனமில்லை. ஸமபந்தி போஜன உத்திரவை நம்மவர்கள் சட்டை பண்ணி அதைக் கண்டிக்க முன்வருவது இளப்பமான கார்யமாகும்.

ஓர் ஆஸ்திகன்.

திருவிடைமருதூர்

ஸ்ரீ ஜோதிர்மய மஹாலிங்க சுவாமி நியமாத்யயன வேத பாடசாலையின் ஏழாவது வருஷப்பூர்த்திக் கொண்டாட்டம்.

மேற்படி பாடசாலையின் 7வது வருஷக் கொண்டாட்டமானது விக்ரமஹூ தைமீ 27ம் தேதி ஞாயிற்றுக்கிழமை, மாலை 6 மணிக்கு திப்பிராஜபுரம் ஸ்ரீ டி. எஸ். வெங்கட்டராமய்யர் அவர்களின் அக்ராசனத்தின் கீழ் நடைபெற்றது.

அவ்வமயம் சுமார் 200 பேர்கள் வரையில் வந்திருந்தார்கள். வரகூர் ப்ரும்மஸ்ரீ சுப்ரமண்ய சாஸ்திரிகள் 'வித்தையும் விநய ஸம்பத்தும்' என்பதைப்பற்றி விரிவாக உபன்யஸித்தார்.

பிறகு திருக்கருகாவூர் ப்ரும்மஸ்ரீ டி. எல். சுப்பைய்யர் அவர்கள் 'பரதர்மத்தை' அவலம்பிப்பதில் உள்ள சிரமத்தையும், அதனால் ஏற்படும் தேஹமனோபாதைகளையும் ஸ்வதர்மத்தை அனுஷ்டிப்பதிலுள்ள சுகத்தையும், அதனால் சரீரத்திற்கும் மனதிற்கும் உள்ள நிம்மதியையும் சுகத்தையும் பற்றி மிக விரி, வாக எடுத்துரைத்தார்.

பிறகு அக்ராசனர் அவர்களால், ப்ரும்மஸ்ரீ ராமசுவாமி ச்ரௌதிகளால் விசேஷமான அன்னதானத்துடன் நடத்தப்பட்டு வரும் வேதபாராயணத்தையும், அதில் அவர்களுக்குள்ள ஊக்கத்தையும், மேலும் அதையாதரித்துவரும் எல்லோர்க்கும் சர்வாபீஷ்டமும் பரமேச்வரனின் கிருபையால் ஏற்படும்படி கூறப்பட்டு— சந்தன தாம்பூலாதிகள் வழங்கப்பெற்று, ஷை பாடசாலையின் 7வது வருஷ பூர்த்திக் கொண்டாட்டமானது இனிது நடந்தேறிற்று.

N. நாகராஜன்.

சேலம் செய்திகள்

உபந்நியாசம் ஆஞ்சனேய ஸமாஜத்தின் ஆதரவில் 9-2-41ல் பிரம்மஸ்ரீ சேங்காலிபுரம் அனந்தராம தீக்ஷிதரவர்களால் ஸ்ரீகிருஷ்ணதூது, என்ற விஷயம் உபந்நியஸிக்கப்பட்டது.

பகவத்கீதா உபந்நியாஸம் சேலம் டாக்டர் ராமஸ்வாமி அய்யர் கிருஹத்தில் சேங்காலிபுரம் பிரம்மஸ்ரீ வைதிக தர்மஸம்ரக்ஷக அனந்தராமதீக்ஷிதர் அவர்கள் பிரதி தினமும் காலை 7 மணிக்கு பகவத்கீதை உபந்நியஸித்து வருகிறார். அனேக பிரமுகர்களும் ஸ்திரீகள் பாலர் ஆகியோரும் மிகுந்த உத்ஸாஹத்துடனும் சிரத்தையுடனும் கேட்டு ஆனந்தித்து வருகிறார்கள்

ஸ்ரீ வியாஸராஜமடத்தில் பிரஸங்கம்:— சேலத்திற்கு விஜயம் செய்திருக்கும் ஸ்ரீ வியாஸராஜஸ்வாமி ஸ்ரீ மடாதிபதிகளின் ஸ்ரீமுகத்தை ஏற்று பிரம்ம ஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர் அவர்கள் ஷை மடத்தில் ஸ்ரீ ஸ்வாமிகளின் முன்னிலையில் ஏராளமான ஜனங்கள் மத்தியில் ஒரு பிரஸங்கம் செய்தார். ஸ்ரீ மடாதிபதி மிகவும் வியந்துகொண்டாடினார்

ந. நி

ஏகாதசி உபந்யாஸம்

8—2—41 சனிக்கிழமை ஸர்வஏகாதசி கும்பகோணம் மஹாமஹக் குளத்தெரு காசி விசுவநாதஸ்வாமி ஸன்னதியில் ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதிகளான ஸ்ரீ சங்கராசாரியர் ஸன்னிதானத்தின் ஆக்ஞைப்படி வலயபேட்டை அககிரகாரம் பிரும்மஸ்ரீ ராமஸ்வாமி பாகவதவர்களால் தக்க பக்க வாத்தியங்களுடன் ஸ்ரீவள்ளி பரிணயம் என்ற ஸத்கதா காலக்ஷேபமும் 8-2-41 சனி வாரதினம் வழக்கம் போல் ஹாலாஸ்ய மஹாத்மியபடனமும் செய்யப்பட்டது ஏராளமாக ஜனங்கள் வந்து இருந்தார்கள்

என். எஸ். ராஜப்பய்யர்,
முத்ராதிகாரி

மேட்டுத்தெருவில் ஏகாதசி உபன்யாசம்

சென்ற 8—2—1941உ சனிக்கிழமை மாலை 4 மணிக்கு கும்பகோணம் மேட்டு தெரு ஸ்ரீ செங்கழனீர் விநாயகர் ஆலயத்தில் ஸ்ரீ சங்கர பகவத்பாதாளின் ஆக்ஞை பிரகாரம் டவுன் ஹைஸ்கூல் தலைமை தமிழ் பண்டிதர் பிரும்மஸ்ரீ ஊ. சா. வெங்கிட்டராமய்யர் அவர்களால் பரமசிவன் மாமனாக வந்த திருவிளையாடல் படலத்தை வெகு தெளிவாக உபன்யஸிக்கப்பட்டது.

மாம்பலம்

ஸ்ரீ சங்கர ஸித்தார்த்த ஸபை

இச்சபையின் ஆதரவில் மாம்பலம் ஏரிக்கரை வெங்கடாசலபுரத்தில் சுமார் 3மாத காலமாய் ஸ்ரீ வெங்கத்தூர் சுப்பிரமணிய சாஸ்திரியாரால் உபன்யஸிக்கப்பட்ட ஸ்ரீமத் ராமாயணத்தில் சென்ற தைமீ 27 தேதி இரவு ஸ்ரீராம பட்டாபிஷேக வைபவ கட்டம் உபன்யஸிக்கப்பட்டது அச்சமயம் ஸ்ரீராமபிரான் விக்கிரகத்திற்கு அலங்காரம் செய்து வீதி பிரதக்ஷிணம் நடந்தது. ஏராளமாய் ஆஸ்திகர்கள் சிரவணம் செய்தார்கள். செ. ந. கிருஷ்ணபட்டாசாரியர்.

திருவேடகம் வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கம்

பௌர்ணமி ஸபை,

11—2—41ல் ராத்திரி 8-மணி முதல் 10 மணி வரை சோழவந்தான் ப்ரம்மஸ்ரீ சங்கர் சாஸ்திரியளவர்கள் தலைமையில் வழக்கம் போல் ஸபை கூடியது.

ஷை ஸபையில் 8—2—41ல் கல்கத்தாவில் நடந்த அகில இந்தியாவர்ணாசிரம ஸ்வராஜ் சங்கம் வருஷாந்திர ஸபையில் தலைமை வகித்த ஸ்ரீமான் ராவ்சாஹிப் என். நடேசய்யரவர்களால் சொற்பொழிவாற்றப்பட்ட முகவுரை இங்கிலீஷ் புக்கிலிருக்கும் விஷயங்கள் ஷை அக்கிராஸனவர்களால் சுருக்கமாய் எடுத்துரைக்கப்பட்டது.

தஞ்சை ஜில்லா போட்டாரால் செய்யப்பட்ட திருவையார் ஸம்ஸ்கிருத காலேஜ் ஸமபந்திபோஜன உத்திரவானது சாஸ்திர விரோதமாயும் பழக்க வழக்கங்களுக்கும் தர்மம் ஏற்படுத்தின ராஜாக்களுடைய ஸங்கல்பத்திற்கும் நேர்விரோதமாயிருப்பதால் ஷை உத்திரவானது இச்சபையினால் மிகவும் கண்டிக்கப்பட்டது.

பிறகு நாகேசுவர சர்மாவால் அக்கிராஸனருக்கு வந்தனோபசாரமளிக்கப்பட்டு சபை இனிது கலைந்தது. ந. நி.

T. R. GANAPATHIRAMA IYER, B.A., B.L.
Advocate, Tinnevelly Jn.

1 Condensed Bagavatham Tamil. Rs. 2 0 0
2 Do with Slokas and English. ,, 2 0 0
3 Life after Death Part I The Hindu view and Part II Conquest of Deaths its fears by Yogic methods. ,, 2 8 0

Copies can be had of :—
THE ARYA DHARMAM OFFICE,
T. H. S. Road, Kumbakonam.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்
விக்ரம-ஹூ மாசி-மீ 9உ

காங்கிரஸ் மதஸ்தாபனமல்ல.

சமீபத்தில் காந்திஜியின் அஹிம்சைக் கொள்கையைப்பற்றித் தாக்கி, பம்பாய் "டைம்ஸ் ஆப் இந்தியா" பத்திரிகை எழுதியிருந்தது. காந்திஜி அதற்கு பதில் எழுதினார். அந்த பதிலில் காந்திஜி சொன்னதாவது, ',யுத்தம் நடக்கும் வரையில் காங்கிரஸுக்கும் கவன்மெண்டுக்கும் சமாதானம் ஏற்படமுடியாது. சமாதானம் ஏற்றுக்கொண்டால், மனிதர், பொருள்கள் உதவி, பூர்ணமாக காங்கிரஸ் யுத்தத்துக்கு ஸஹாயம் செய்யவேண்டிவரும். அப்படிச்செய்தால், காங்கிரஸ் சென்ற இருபது வருஷமாக நம்பி அநுஷ்டித்துவரும் அஹிம்ஸைக் கொள்கையை மாற்றினதாகும்." அதாவது, காங்கிரஸ் கேட்பதற்கு கவர்ன்மெண்ட் ஒருவாறு இணங்கி, ஸத்யாக்ரஹப்போரை காங்கிரஸ் நிறுத்தினாலும், காங்கிரஸ் யுத்தத்திற்கு எவ்வித ஸஹாயமும் செய்யமுடியாது, என்பது காந்திஜீயின் கருத்து. இதைக்கொண்டு, காங்கிரஸுடன் கவர்ன்மெண்டு ஸமாதானத்திற்கு முயல்வது வ்யர்த்தம்தான், என்று "டைம்ஸ் ஆப் இந்தியா" பத்திரிகை கூறுகிறது.

மத்திய கவர்ன்மெண்டில் தேசீயத் தலைவர்களுக்கு யுத்த வரவு செலவு, தேசப்பாதுகாப்பு முதலிய எல்லா சிகரமான விஷயங்களிலும் ஆதிக்யமும் ஆளுகையும் கொடுத்தால், யுத்தத்திற்கு இந்தியர்களுடைய பூர்ணஸஹாயம் வாங்கித் தருவதாக காங்கிரஸ் காரியக்கமிட்டி சில மாதங்களுக்கு முன் பூனாவில் தீர்மானம் பண்ணிற்று. நுட்பபுத்திமானான ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியாரின் உறுதியினாலும் சாதுர்யத்தாலும் அந்த யோஜனை பூனாவில் நிறைவேறியது. அது தமது மூலக் கொள்கையான அஹிம்சைக்கு விரோதமாயிருக்கிறதாகச் சொல்லி, அதினின்றும் காந்திஜீ தம்மை விலக்கிக்கொண்டார். பின்னால் பாம்பேயில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியால் அந்த தீர்மானம் உறுதியாக்கப்பட்டது. காங்கிரஸ் கேட்டிருந்தபடி கவர்ன்மெண்டு நடக்கவில்லை. அதனால், காந்திஜியை திருப்திப்படுத்துவதற்காக, மேற்கண்ட பூனா, பம்பாய் தீர்மானங்களை மாற்றி, காங்கிரஸ் கார்யக் கமிட்டி இப்போது ஊர்ஜிதத்தில் இருக்கும் தீர்மானத்தை வார்தாவில் நிறைவேற்றினார்கள். அந்த வார்தா தீர்மானத்தில், தமது அஹிம்ஸைக் கொள்கை பூர்ணமாய் பிரதிபலிக்கும்படி காந்திஜீ அமைத்திருக்கிறார். அதாவது, வெளிநாட்டார் இந்தியாவின் மீது படையெடுத்தாலும், அல்லது உள்நாட்டில் கலஹம் கொள்ளை முதலியன நடந்தாலும், எந்த விதமான ஆபத்து விபத்துக்களையும் போக்குவதற்கு, அஹிம்ஸை ஒன்றையே இந்திய ஜனங்கள் கைக்கொள்ளவேண்டும், என்ற தாத்பர்யத்துடன் காந்திஜீ அந்த தீர்மானத்தை வரைந்திருக்கிறார். இவ்விதம் தமது கொள்கையை காந்திஜி மறுபடியும் நிலை நிறுத்தினபின், காங்கிரஸின் முதல் தலைமையை மறுபடியும் ஏற்று, ஸர்வாதிகாரப் பொறுப்புடன் இப்போது ஸத்யாக்ரஹ போரை நடத்தி வருகிறார்.

ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியாரின் தூண்டுதலால் பூனாத் தீர்மானம் ஏற்படும்படிவிட்டது தமது புத்தி தௌர்பல்யத்தால்தான் என்று காந்திஜீ சொல்கிறார். ஆனால், இப்போது முன்னைக் காட்டிலும் உறுதியாக அஹிம்ஸா தத்வத்தில் காங்கிரஸ் பிரதிஷ்டை அடைந்திருப்பதாக காந்திஜி வற்புறுத்துகிறார். அப்படி அஹிம்ஸா ஸ்ரூபமாய் மாறியிருக்கிற காங்கிரஸ், எந்த காரணத்தைக் கொண்டும், ப்ரிட்டிஷார்கள் ரொம்பவும் இணங்கி சுயாஆட்சியே கொடுத்துவிட்டாலும், யுத்தத்திற்கு காங்கிரஸ் ஸஹாயம் செய்வது முடியாது எபன்தை காந்திஜி விளக்கியிருக்கிறார்.

காங்கிரஸினால் யுத்தத்திற்கு ஸஹாயம் கிடைக்ககூடியதேயில்லை என்ற காந்திஜீ சொன்ன வார்த்தையை எடுத்துக்கொண்டு, காங்கிரஸை திருப்திபண்ண நினைப்பது வீண் சிரமம் என்று "டைம்ஸ் ஆப் இந்தியா" கூறுவதை கேட்க, நமது ஹிந்து பத்திரிகைக்கு ஸஹிக்கவில்லை. "டைம்ஸ் ஆப் இந்தியா"வின தாக்கம் வெறும் சமத்கார வார்த்தையேயல்லாது சரியான கட்சியல்ல என்று தள்ளிவிட்டு, 'ஹிந்து' பத்திரிகை 18—2—41 தேதி தலையங்கத்தில் இந்த விஷயத்தை ஆதியோடந்தமாக மேற்கோள்களுடன் சர்ச்சை செய்திருக்கிறது.

ஆனால், ஹிந்து பத்திரிகையும், முடிவில் டைம்ஸ் ஆப் இந்தியா சொன்ன வார்த்தையையே ஆதரிக்கிறது. காங்கிரஸ் அஹிம்ஸா தத்வத்தையே சரணமாய்க்கொண்டு விட்டதாக காந்திஜீ சொல்வதை 'ஹிந்து' பத்திரிகை உறுதியாய்க் கண்டிக்கிறது. அஹிம்ஸையை எப்போதும் எல்லா இடத்திலும் உண்மையான ஒரு மத கொள்கைபோல் காந்திஜீ நினைப்பவராய் இருந்தாலும், காங்கிரஸ் ஸ்தாபனமோ, பெரும்பான்மையான காங்கிரஸ்காரர்களோ, அவ்விதமே அதில் ஈடுபட்டிருப்பதாக சொல்லக்கூடாது, என்று ஹிந்து வாதிக்கிறது. வார்தா தீர்மானத்தின்படிகூட இதே ஸ்திதி தான் என்றும், அஹிம்ஸை என்பது காங்கிரஸ் ஸ்தாபனம் ஸம்பந்தப்பட்டமட்டில் ஒரு உபாயமாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறதேயன்றி, ஒரு தத்வமாகவோ, மதக் கொள்கையாகவோ அல்லவென்று பல காரணங்கள் சொல்லி, வார்தா தீர்மானத்திலுள்ள வாசகங்களையும் இதற்கு ஆதாரமாக எடுத்துக் காட்டி இருக்கிறது. இதுதான் யுக்தமென்றும் 'ஹிந்து' ஹிந்து பத்திரிகை நினைக்கிறது. அதாவது, காங்கிரஸ் ஸ்தாபனமானது இந்திய ஜனங்களின் அரசியல் முன்னேற்றத்திற்காக ஏற்படுத்தப்பட்ட மகா ஜன ஸ்தாபனமேயல்லது, உலகத்தில் எல்லாத் தேசத்தாரும் படைகளையும் ஆயுதங்களையும் விட்டு விடுவதற்கும், இந்திய ஜனங்கள் இகலோக லாபமாகிய சுயாட்சி போன்ற லக்ஷியத்தை விட்டு, அஹிம்ஸை என்ற புதிதான உயர்ந்த மதக்கொள்கையை அனுஷ்டித்து கிருதார்த்தர்கள் ஆகச் செய்வதற்காகவும் காங்கிரஸ் ஸ்தாபனம் ஏற்பட்டதல்லவென்று சொல்லி 'ஹிந்து' ஷை தலையங்கத்தை முடித்திருக்கிறது.

தலைவிதியால் இழுக்கப்பட்டவர்கள் போல, காந்திஜீயின் கட்டளையால் இப்போது ஸத்யாக்ரஹம் என்கிற வார்த்தையை வாயால் சொல்லிக்கொண்டு ஜெயிலுக்குப் போனவர்களும், போகப்போகிறவர்களுமாகிய பலதரப்பட்ட காங்கிரஸ்காரர்களில், எவர்கள் அரசியல் லக்ஷ்யத்துக்காகப் போகிறார்கள், எவர்கள் காந்திஜியின் மதக்கொள்கையை ஸ்தாபிக்கப் பாடுபடுகிறார்கள் என்பது வ்யக்தமாய்த் தெரியும்படி இருந்தால் தேச க்ஷேமத்துக்கு அநுகூலமாயிருக்கும். இந்த ஸந்தர்ப்பத்தில் பொறுப்புள்ள தலைவர்களும், ஸங்கங்களும், காங்கிர்ஸ் மதஸ்தாபனமா, அரசியல் ஸ்தாபனமா, என்ற விவாதத்தில் தம்தம் கருத்தை விளக்கி வெளியிடவேண்டியதும் மிகவும் அவசியமாகும்.

பசு மாம்ஸம் சாப்பிடவும் : : : : நிர்ப்பந்தமேற்படலாம்.

திருவாதி காலேஜில் ஒரு பந்தி போஜனத்தை நிர்ப்பந்திக்க ஏற்பட்டுள்ள தீர்மானத்தை தஞ்சை ஜில்லா போர்டின் உபதலைவர் ஆதரித்து ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார். திருவலஞ்சுழியில் ஒரு கூ[illegible]டத்தில் பேசியுமிருக்கிறார். ஜாதிமத[illegible]யாசங்களை ஒழித்துவிடவேணு மெ[illegible] போர்டு மெம்பர்களின் [illegible]மென்பது வெளியாகும்படி பேசியிருக்கிறார். காங்கிரஸ்காரர்களைத்தவிர வேறு எவர்களும் இப்படிப்பட்ட செய்கைகளைச் செய்ய தைர்யம் கொள்ளமாட்டார்கள். போர்டாரின் தீர்மானத்தின் முன்னுரையில் கூறியிருக்கும் காரணம் தெளிவாக இருக்கிறது. ஜாதிமத வித்தியாசத்தை ஒழிப்பது அதன் நோக்கமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இதிலிருந்து ஹிந்து, முஸ்லீம், கிறிஸ்தவர் போன்ற ஜாதிகள்கூட ஒரு பந்தி போஜனம் செய்யவேண்டியது அவச்ய மென்பதும் ஜில்லா போர்டு காங்கிரஸ்காரரின் அபிப்பிராயமாக ஏற்படுகிறது. ப்ராம்மணர் அல்லாதாரும், துருக்கர்களும் அல்லது கிறுஸ்தவர்களும்கூட சேர்ந்து சாப்பிடவேணுமென்றும் அந்த உத்திரவில் அர்த்தமிருக்கிறது. உபதலைவர் ஸ்ரீமான் வாண்டையார் ஆஸ்திகர்களை அறைகூவி அழைக்கிறார். ஒரு பந்தி போஜனம் பொதுஜன ஸம்மதமுடையதுஎன்கிறார். இவ்விஷயத்தை முக்ய பிரச்னையாக வைத்து வோட்டர்களிடம் தாம் வெற்றிபெற முடியுமென்றும் அவர் பந்தயம் கூறுகிறார். அவருடைய பந்தயத்தைபற்றி நாம் கவனிக்கப்போவதில்லை.

ஆனால் மெஜாரிடிபலம் கிடைத்தவர்கள் அதை உபயோகப்படுத்தி தங்கள் இஷ்டப்படி யாரையும் எவ்விதமாயும் ஆட்டி அடக்கி உபத்ரவிக்கலா மென்பதுதான் ஜனநாயகமா? மெஜாரிட்டிபலம் கிடைத்தவர்களின் இஷ்டப்படியே எதையும் செய்வது நியாயமாகுமென்றால் பஞ்சாபிலும் வங்காளத்திலும்மஹம்மதியர் மெஜாரிடியாயிருப்பதால், அவர்கள் எதையும் செய்துவிடலாமா? உடை உணவு போன்ற உரிமைகளில் கூட மெஜாரிடியார் பிரவேசிப்பது என்ன நீதி? நாளை ஜின்னு கக்ஷியார் மெஜாரிடியாயிருக்குமிடங்களில் எல்லாரும் கோமாம்ஸம்

உ

த்யானமும் ஞானமும்

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் அருளிய உபந்யாஸம்

(காலேஜ் லெக்சரர் S. சங்கரநாராயணய்யர் எழுதியது.)

காஞ்சீ காமகோடி பீடாதிபதிகளான நம் ஆச்சாரியாள் 26—1—1941 ஞாயிற்றுக்கிழமை இரவு அனுக்ரஹித்த உபந்யாஸத்தில் பின் பாகத்தால் த்யானமும் ஞானமும் என்பதைப் பற்றி கீழ்க்கண்டவாறு உபதேசித்தார்கள்:—

(13—2—41 தொடர்ச்சி.)

இந்த தீபம் இருக்கிறது. இதை ஒருவன் இரண்டாள் புருஷன் உயரம் என்கிறான். (ஒரு நீலத்துணியைக்காட்டி) இது வெள்ளை என்கிறான் என்று வைத்துக்கொள்வோம். இப்படி ஒருவன் சொன்னால் அவன் தெரியாதவன் என்போம். ஏனென்றால் அவன் உள்ளதை உள்ளபடி சொல்லாமல் வேறு விதமாகச்சொல்லுகிறான். ஆனால், இந்த தீபம் மூன்று அடி உயரம், இந்த வஸ்திரம் வெள்ளை யென்றால் அது சரி, உண்மை என்கிறோம். அப்படிச்சொன்னால் சரியாக அறிந்ததாகச் சொல்லுகிறோம். அதற்குத்தான் அறிவு என்கிறோம்.

உள்ளதை வேறு விதமாக நினைப்பது த்யானம். ஒரு வஸ்துவை உள்ளபடி அறிவது ஞானம். ப்ரபஞ்சத்தில் ஒரு வஸ்துவின் ஸ்வரூபத்தை ஸத்யமாய் அறிவது தான் ஞானம். அதை வேறுவிதமாய் நினைப்பது த்யானம். கடம் முதலிய பல வஸ்துக்களின் மூலகாரணங்களை விசாரித்துப்பார்த்தால் எல்லாவற்றிற்கும் முதற்காரணம் ஒன்று, அதுதான் எல்லாவற்றிலும் வாஸ்தவமான ஸ்வரூபம் என்று ஏற்படும். அதை அறிவது ஞானம். அதுதான் शान्तं என்றும் शिवं என்று अद्वैतं என்றும், ப்ரும்மம் என்றும் சொல்லப்படுவது.

ஞானத்தில் வேற்றுமையில்லை. பரதத்வம் ஒன்றுதான். அது வறு இல்லை. ஆனால் த்யானத்தில் வேற்றுமை உண்டு. நாலு கைகள், எட்டு கைகள், மூன்று முகம், ஆறுமுகம், இம்மாதிரி பலவிதமாய் பகவானை த்யானம் பண்ணுகிறோம். ஒன்றை வேறாய் நினைக்கும்பொழுது, அந்த த்யானத்திற்கு பல ரூபங்கள் விஷயமாகும். தவிர, த்யானத்தினால் உபாசனை என்பது ஏற்படுகிறது. த்யானிக்கப்படும் மூர்த்தி வேறு, த்யானிப்பவன் வேறு, த்யானம் வேறு என்று வித்யாஸங்கள் உண்டு. ஞானத்தில் இந்த வித்யாஸங்கள் இல்லை. த்யானத்தில் உபாசனா மூர்த்தி வேறு, த்யானிப்பவன் வேறு என்று உண்டு. அந்த மூர்த்தியை தியானிப்பதின் பலத்தினால் நாம் போய் அடைகிறோம். ஆனால் ஞானத்தில் போய் அடைவது என்பது இல்லை. ஞானத்தால் பரப்ரம்மத்தை ஸாக்ஷாத்கரிப்பதின் மூலம் பிரம்மம் நம்மை வந்து அடைகிறது. த்யானத்தாலும் உபாஸனையாலும் வைகுண்டாதி லோகாந்த்ர ப்ராப்தியால் முக்தி ஏற்படுகிறது. ஞானத்தால் இங்கேயே இந்த ஜன்மாவிலேயே முக்தி உண்டாகிறது.

முக்தியையடைய மூன்று மார்க்கங்கள் உண்டு. யோகம், பக்தி, ஆசார்ய உபதேஸம் ஞானம், இவைகளில் யோகமும், பக்தியும் அவ்வளவு சுலபமில்லை. ஸத் வித்வானான நல்ல ஆசாரியன் நமக்கு ப்ரத்யக்ஷமாய் நம்முன் உபதேசம் பண்ணுவது மூலம் ஞானம் அடைவது வெகு சுலபமென்று தோன்றும். ஆனால் சரியான ஸத்வித்வான் கிடைப்பது தான் துர்லபம். கிடைத்துவிட்டால் பிறகு சுலபந்தான். அப்படிக்கிடைப்பது சுகிருத விசேஷத்தால் ஏற்படவேண்டும்.

* * * *

த்வைதம், விசிஷ்டாத்வைதம், அத்வைதம் ஆகிய இவைகளின் வித்யாஸத்தை எடுத்துக்காட்டும் ஒரு ஸ்லோகமுண்டு.

देहबुध्या तु दासोऽस्मि जीवबुध्या तु त्वांशकः ।
ज्ञानबुध्या त्वमेवास्मि इति वेदान्त डिण्डिमः ॥

நாம் தேகம் என்று பார்க்கும்போது இந்தகாசரணாதிகளெல்லாம் கைங்கர்யம் பண்ணி பகவத் தாஸ்யத்திற்கு ஏற்பட்டவை என்று ஆகும். பகவான் ஸ்வாமி என்றும் நாம் தாஸர்கள் என்றும் த்வைத புத்தி ஏற்படும். நம்மை ஜீவன் என்று தெரிந்துகொண்டால், பரமாத்மாவின் அம்சம் ஜீவாத்மா, என்று शेषशेषी பாவத்தைக் குறிக்கும். விசிஷ்டாத்வைதம் தோன்றும். ஆனால் ஞானத்தால் பரமார்த்த ஸ்வரூபத்தை அறிந்தவர்களுக்கு त्वमेवास्मि என்ற அத்வைத ஞானம் உண்டாகும். ஒரு மரத்தை உதாரணமாய் எடுத்துக்கொண்டால், மரம் வேறு, இலை வேறு, பூ வேறு என்பது த்வைதம். இலையும் பூவும் வேறல்ல, மரத்தை சேர்ந்தவை. ஆனால் அவையவை மரமல்ல, மரத்தின் அம்சங்கள் என்பது விசிஷ்டாத்வைதம். மரம், கிளை, பூ, காய், பழம் எல்லாவற்றிலும் ஒரே தத்வந்தான். அவை வெவ்வேறல்ல. நாமரூபந்தான் வேறே தவிர, அவைகளின் ஸ்வரூபம் ஒன்றே என்பது அத்வைதம்.

சாப்பிடவேண்டுமென்ற நோக்கத்துடன் விதிகள் சட்டங்கள் செய்யலாமா? தஞ்சை ஜில்லா போர்டில் ஜின்னா கக்ஷியாரின் மெஜாரிடி ஏற்பட்டிருப்பதாக வைத்துக் கொள்ளுவோம் அப்போது காந்தி கதரும் குல்லாவும் அணிந்தவர்கள் போர்டு பள்ளி கூடங்களில் வாசிக்கக்கூடாது என்று ஒரு க்ஷணத்தில் தீர்மானம் பண்ணி விடமுடியாதா? அப்போது இந்தக் காங்கிரஸ் கக்ஷி எப்படி ஆக்ஷேபிக்கமுடியும? பொது ஸ்தாபனங்களில், தற்காலத்தில் அதிகாரம் வகிக்கும் மெஜாரிட்டி கட்சியார், பொது நீதியையும் தமது அதிகாரவரம்புகளையும் கவனிக்காமல் நடக்கலாம் என்று வந்துவிட்டால், எல்லாருடைய உரிமையும் நிலைமையும் எப்போதும் ஆபத்தில் தான் இருக்கும். ஜனநாயகம் எலெக்ஷன், என்ற புரட்டுக்கதைகளைப் பேசும் காலம் மலையேறிவிட்டது. எதெற்கும் எலெக்ஷன், வோட்டர் அபிப்பிராயமென்ற சூது நிறைந்த முறையைப்பேசுவது விவேகமாகாது. அதை ஒருவரும் அங்கீகரிக்க மாட்டார். மேற்றிசைகளில் ஜனநாயகம் செத்துவிட்டது. ஜர்மனி, ருஷ்யா, போன்றவை அதை புதைத்துவிட்டன. அமெரிக்க ஜனநாயகம் அர்த்தமற்றது. ரூஸ்வெல்டின் ஸர்வாதிகாரத்தன்மையே அது. இங்கிலாந்திலும் சேம்பர்லேன், சர்ச்சில் போன்றவர்களின் சர்வாதிக முறையிலேயே ஜனநாயகம் அடங்கிவிட்டது. அதிகமேன்? நமது காங்கிரஸ் ஜனநாயகம் காந்திஜியின் சர்வாதிகாரத்தில் அடங்கி கிடக்கிறது. ஜனநாயகம் என்பது பணக்காரர், செல்வாக்குள்ளவர் ஆகியவர்களுக்கே அநுகூலமானது. பணக்காரர்களே எலெக்ஷனில் வெற்றி பெறுகிறார்கள். அவர்களே ஜனங்களை ஆட்டிவைக்கிறார்கள். ஜனநாயக சரித்திரமென்பது இதுதான். வோட்டர்கள் அபிப்பிராயமென்பதுபொய். இந்த ஆபாச முறை காட்டி ஏமாற்றுவது இனி முடியாது.

திருவையாறு கல்யாண மஹால் காலேஜ்

ஜாதி, மத வித்யாஸத்தைப் போக்க டிஸ்ட்ரிக்ட்போர்டு தீர்மானம்.

1940-ஹு டிஸம்பர், 2உ தஞ்சாவூர் டிஸ்டிரிக்ட் போர்டு மீட்டிங் கூடிற்று. ஸ்ரீ வி. நாடிமுத்துபிள்ளை தலைமை வகித்தார். 36 மெம்பர்கள் வந்திருந்தார்கள்; 2 பிராமணர், 3 ஹர்ஜனங்கள் 2 மகமமதியர், ஒரு கிரிஸ்தவர், 31 பிராம்மணரல்லாதார்.

விஷய அட்டவணையில் 397 ஐட்டங்கள் ஆலோசனைக்கு வைக்கப்பட்டிருந்தன. அவைகளைப்பற்றின தீர்மானங்கள் 11—1—1941உ டிஸ்ட்ரிக்கெஜட்டில் 160 பக்கங்களில் அச்சிட்டிருக்கின்றன.

கடைசியாக அதாவது 398வது விஷயமாக, ஸ்ரீ நல்லமுத்து நாட்டார் ஒரு பிரேரபணை கொண்டு வந்தார். அது ஏற்கெனவே விஷய அட்டவணையில் (agenda) சேர்க்கப்பட்டிராத விஷயம். ஆனால், ஸ்ரீ நல்லமுத்து நாட்டார், ஷை பிரேரேபனையைக் கொண்டு வருவதற்கு மீட்டிங்கின் அனுமதியைக்கேட்டு, அனுமதி பெற்றுக் கொண்டு, பிறகு பிரேரேபித்தார், அதாவது

“தஞ்சை ஜில்லா போர்டின் ஆளுகைக்குள்பட்ட சாப்பாடு போடும் இடங்களில் ஜாதி அல்லது மதவித்யாஸங்கள் இருக்கக் கூடாது. இதை நிறைவேற்றுவதற்காக சமயல் பண்ணும் இடங்கள் பொதுவாக இருக்கவேண்டுமென்றும் எல்லா மாணாக்கர்களுக்கும் ஒரேமாதிரி ஒரே இடத்தில் சாப்பாடு போடவேண்டும் என்றும் இந்த போர்டு தீர்மானிக்கிறது”. ஸ்ரீ P. K. ரத்னஸாமி காலிங்கராயர் ஆமோதித்தார். R. M. கோவிந்தசாமி செட்டியார் “இந்த தீர்மானத்தை உடனே அமுலுக்குக் கொண்டுவர வேண்டு மென்றும் பிரஸிடெண்டைக் கேட்டுக்கொள்ளுகிறது” என்பதைச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று திருத்தம் கொண்டுவந்தார்.

ஸ்ரீ S ராமபத்ர உடையார் திருத்தத்தை ஆமோதித்தார்.

திருத்தத்தை மீட்டிங்கு ஏற்றுக்கொண்டது. பிறகு மேற்கண்டபடி (திருத்திய) பிரேரேபணை வோட்டுக்கு விடப்பட்டு நிறைவேறியது.

சட்டக்குறிப்புகள்

விவசாயக்கடன் நிவாரணச்சட்டம்

ஸ்திரீகளுக்கு வரவேண்டிய கடன்கள்

சென்னை வியவசாயக் கடன் நிவாரணச் சட்டத்தால் ஸ்திரீகளுக்கு வரவேண்டிய கடன் எவ்வகையில் பாதிக்கப்படுகிறதென்பதை இப்போது சற்று விசாரிப்போம்.

ஸ்திரீக்கு வரவேண்டிய கடன்கள் இரண்டுவிதமாக ஏற்பட்டிருக்கலாம். முதலாவது அவளுக்கு வரவேண்டிய ஜீவனும்சத்திற்காக ஏற்பட்ட கடனுக இருக்கலாம் இதை ஷை சட்டமானது எந்தவிதத்திலும் பாதிக்காது. அவளுக்கு வேறு ஐவேஜியும் வரவேண்டிய கடன்களும் இருந்தாலும் அவைகள் எவ்வளவு பொருமானமுள்ளவைகளாக இருந்தாலும் அக்கரை இல்லை. அவளுக்கு வரவேண்டிய ஜீவனும்சக்கடனை ஷை சட்டம் குறைக்காது.

ஜீவனும்சம் அன்றியில் ஷை யாளுக்கு 1-10-37 தேதியில் வரவேண்டிய வேறு கடனுக இருப்பது மற்றொருவிதம். இதை ஷைசட்டம் பாதிக்குமா அல்லவா என்பதை தெரிந்து கொள்வது சுலபமான விஷயமல்ல. அது தீர்மானம் செய்ய பல அம்சங்கள் கவனித்தாகவேண்டும்.

அந்தக்கடன் வியவசாயியால் கொடுபடவேண்டியதா அல்லவா என்பதை முதலில் பார்க்கவேண்டும். கடன்காரன் வியவசாயி அல்லாத பக்ஷத்தில் ஷை சட்டம் அந்தக் கடனை பாதிக்காது. அதைக்குறைக்கவேண்டியதில்லை.

கடன்காரன் வியவசாயியா யிருக்கிற பக்ஷத்தில் ஷை ஸ்திரீக்கு இந்தக்கடனைத் தனி வேறு வியவசாயிகளால் 1-10-37 தேதியில் கொடுபடவேண்டியதாக கடன்கள் இருக்கின்றனவா என்றுபார்க்கவேண்டும். அப்படிக்கடன்கள் இருதால் இந்த கடன் உள்பட ஷை கடன்கள் எல்லாவற்றிற்கும் மொத்தம் அசல் துகை எவ்வளவு என்று பார்க்கவேண்டும். மொத்தம் ரூ 3000த்திற்கு மேல் இருந்தால் அவைகள் எல்லாவற்றையும் ஷை சட்டம் பாதிக்கும். அவைகளை சட்டப்படி குறைக்கலாம்.

அவளுக்கு வியவசாயியிடமிருந்து வரவேண்டிய கடன்களின் அசல்துகை மொத்தம் ரூ 3000 த்திற்குக்குறைவாக இருப்பதாக வைத்துக்கொள்வோம. அப்போதும் அவளுக்கு ஷை சட்டத்தின் ஆபத்து நீங்கிவிட்டதென்று முடிவாகச்சொல்லமுடியாது ஷைகடன்களைத்தவிர அவளுக்கு வேறு ஒரு குழி நிலம் இருந்தாலும் ஒரு ரூபாய் ஐவேஜி இருந்தாலும் வியவசாயி அல்லாதவரிடமிருந்தாவது ஒரு ரூபாய் கடன் வரவேண்டியிருந்தாலும் ஷை சட்டமானது மேலேகண்டபடி அவளுக்கு வியவசாயிகளிடமிருந்து வரவேண்டிய கடன்களை பாதிக்கும்.

உதாரணமாக ஒரு ஸ்திரீக்கு A என்ற வியவசாயியிடமிருந்து ரூ 100ம் B என்ற மற்ற வியவசாயியிடமிருந்து ரூ 200ம் 3 ரூ பொரும்படியான ஒரு குழி நிலமும் இருக்கிறதென்று வைத்துக்கொள்வோம். அவளுக்கு வரவேண்டிய ரூ 300ன் வட்டிகளை ஷை சட்டப்படி குறைக்கப்படும். ஆனல் அவளுக்கு ரூ2000 Aயிடமிருந்தும் ரூ1000 Bஇடமிருந்தும் மாத்திரம் வரவேண்டியதாக இருக்கும் பக்ஷத்தில் ஷை 3000 ரூ கடன்களையும் ஷை சட்டம் பாதிக்காது. இது என்ன விபரீதம். ஐவேஜி குறைவாக உள்ளவளுக்கு ஷை சட்டம் பிரதிகூலம் செய்கிறது.

அவளைப்போல் சுமார் 10 மடங்கு ஐவேஜி உள்ளவளுக்கு அனுகூலம் செய்கிறது. இதே உதாரணத்தில் அவளுக்கு ரூ 1000 நகைகள் ஷை 3000 வரவேண்டிய கடன்களைத்தவிரயிருந்தாலும் ஷைசட்டம் அவளை பாதிக்காது. இந்த சட்டத்தின் விபரீதப் போக்குகளை 1940(2)MLJ 534 பக்கத்தில் காட்டப்பட்டிருக்கிறது. நியாயம் பொட்டையென்னும் பழமொழியை இச்சட்டம் நிரூபிப்பது போலும்.

(2-ம் பக்கத்தொடர்ச்சி)

இந்தியாவில் புகுந்து சூறையாடுவதோடு நிறுத்தாமல், ஸிந்துபிரதேசத்தையும் கங்கா பிரதேசத்தையும் முற்றிலும் வென்று காலிபாவுக்கு கப்பம் கட்டச்செய்தது.

ஸிந்துதேசத்து அரசனை முற்றிலும் வென்றது காலிபாவின் சேனைத்தலைவரான மஹமத்பின் காஸீம் அரசனையும் கொன்று நாட்டையும் கொள்ளையிட்டு அரசகுமாரிகளையும்கைது செய்துகொண்டான், ராஜகுமாரிகளை காணிக்கையாக காலிபாவுக்கு அனுப்பிவிட்டான் ஓர் ம்லேச்சனுல் தங்களுக்கு நேர்ந்ததை எண்ணி எண்ணி சிந்தை புழுங்கி, உணர்வும் அழிந்து செயலுமற்று அயர்ந்தனர். உதவுபவர் யாருமில்லை. தங்களைத்தாங்களேதான் காப்பாற்றிக் கொள்ளவேண்டியதாயிற்று. நகை உடை முகத்தராகி நாவால் இன்னுரை நல்கி, காலிபாவை வஞ்சிப்பபதும் பாபமாகாது எனத்துணிந்தனர். அடுத்த நாட்டையும் வெல்லச்சித்தமாகவிருந்த காஸீம் தங்களைக் கெடுத்துவிட்டதாக முறையிட்டனர் அதை நம்பி காலிபாவும் அவனைத் திருப்பியழைத்துவிட்டான். உண்மையை பிறகு அறிந்துகொண்ட உடனே இவர்களை ஓடும் குதிரைகளின் வாலோடு கட்டி தெருத்தெருவாக அடித்தான். அச்சித்திரவதையையும் இன்பமென ஏற்றுக்கொண்டு இழந்தனர்.

மேற்கூறியவ்வாறு பாப்பாராவுல் காலத்திலும் துருஷ்கர்கள் தொந்திரவு ஏற்பட்டது. அதற்கு முந்தியும் அதற்கு பிந்தியும் விடாது இருந்துகொண்டேவந்தது. ராஜபுத்ர வம்ச சரித்திரங்களில் அடிக்கடி, ம்லேச்சர்கள் அசுரர்கள் தைத்யர்கள் என்று காணப்படும் சொற்கள் பெரும்பாலும் அராபியா வழியாக் வந்த இத்துருஷ்களையே குறிக்கும்.

தொடரும்

கும்பகோணம்

ஸ்ரீமடத்தில் ஏகாதசி உபன்யாஸம்

23—1—41 வியாழக்கிழமை, ஏகாதசி தினத்தன்று, காமாக்ஷிஜோஸியர் தெரு, கல்யாணராமய்யர் தெரு, பாலுசெட்டித்தெரு முதலிய தெருக்கள் சேர்ந்த வார்டின் ஆதரவில், ஸ்ரீமடத்தில் ஷைவார்டிலுள்ள யாவற்றுஜனங்களையும் ஒருங்கே கூட்டி ராஜாபாடசாலை அத்யக்ஷகர் ஸ்ரீவாஞ்சியம் பிரும்மஸ்ரீ சாமா சாஸ்திரிகஇ அவர்களால் ஹரிபக்த சுதோதயத்தின் மூலத்தைவாசித்து தமிழில் தெளிவுபடுத்தி உபன்யஸிக்கப் பட்டது. பிறகு முத்திராதிகாரியின் கைங்கர்ய புஸ்தகத்திலுள்ள விஷயங்களையும் ஆக்ஞைகளையும் முத்திராதிகாரியால் சபையோர்களுக்கு அறிவிக்கப்பட்டது ஷை உபன்யாசத்துக்கு ஷை வார்டிலுள்ள எல்லா வித்வத் சிரோமணிகளும் உதகியோகஸ்தர்களும் கிருஹஸ்தர்களும் ஸ்திரீகளுள்பட மற்றுமுள்ள எல்லோரும் வந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

ஓ-கி.

மதிப்புரை

பாண்டவர்களின் சரித்திரம் அல்லது அர்ஜுனயோகி சரித்திரம்

ஸ்ரீ ராமாயண, பாரத பாகவத, கீதாதிகளை யோக சாஸ்திர முறைப்படி அர்த்தம் செய்து அனேக புஸ்தகங்கள் எழுதிப்புகழ் பெற்ற ரிடயர்ட் ஸப்மாஜிஸ்ட்ரேட் ஸ்ரீமான் அய்யாத்துரை அய்யரவர்களால் எழுதப்பட்டமேற்கண்ட புஸ்தகம் வரப் பெற்றோம். இப்புஸ்தகத்தில் அர்ஜுனன் ஒரு யோகியென்று பல ஆதாரங்களைக் கொண்டு ஆசிரியர் வெகு அழகாக நிரூபணம் செய்கிறார். திவான்பஹதூர் கே. எஸ். ஸ்ரீராமசாமி சாஸ்திரியாரவர்கள் இதற்கு ஆங்கிலத்தில் ஓர் முகவுரை எழுதியுள்ளார். இதன் விலை அணு 2 ஆசிரியரிடம் கிடைக்கும்.

ஷட்பஞ்சாசிகா

இப்பெயர் கொண்ட ஜோதிஷ கிரந்தம் நமக்கு கிடைத்திருக்கிறது. இது ஸ்ரீவராஹமிஹிரர்குமாரரான ஸ்ரீப்ருதுயசஸ் என்ற மஹானுல் இயற்றப்பட்டது. இப்புஸ்தகத்தில் ஹோராத்யாயம், கமாகமாத்யாயம், ஜயபராஜயாத்யாயம் சுபாசுப லக்ஷணுத்யாயம், ப்ரவாஸ சிந்தாத்யாயம், நஷ்டப்ராப்தி அத்யாயம், மிச்ரகாத்யாயம், முதலிய அனேக அத்யாயங்கள் அடங்கியுள்ளன. முக்யவிஷயங்களுக்கு அட்டவணையும் ச்லோக அனுக்ரமணியும் இதில் அடங்கியுள்ளன. மைசூர் கவர்ன்மெண்ட மாஜி அஸிஸ்டெண்ட் காரியதர்சியான பண்டித பூஷண [illegible] பிரம்மஸ்ரீ வி. ஸுப்ரமண்ய சாஸ்தி[illegible] பி. ஏ. அவர்களால், பிரஹத்ஜாதகம் [illegible] பாரி ஜாதம், பல தீபிகை முதலிய கிரந்தங்களின் உதவியைக்கொண்டு இங்கிலீஷ் தர்ஜுமாவும் செய்யப்பட்டிருப்பதுடன் ஒரு முகவுரையும் எழுதப்பட்டிருக்கிறது மூலம் நாகரியில் இருக்கிறது. புஸ்தகம் ரமணியமாக அச்சிடப்பட்டிருக்கிறது. ஜ்யோதிஷகாரர்களுக்கு இப்புஸ்தகம் மிக்க அவச்யமானது. விலை. ரூ. 1—0—0 மைசூரில் பதிப்பாசிரியரிடம் கிடைக்கும்.

ஸ்ரீலலிதாஸ்தவராஜம்

நல்லிச்சேரி அருணுசல சாஸ்திரிகளால் பதிப்பிக்கப்பெற்ற இச்சிறுநூலில் பிரும்மாண்டபுராணம் உத்திர காண்டம் ஹயக்ரீவ ஸம்வாதமென்ற 6வது அத்யாயத்திலுள்ள 37 ச்லோகங்களும். சுத்தமான கிரந்தலிபியில் அழகிய கருத்துரையுடன் அமைக்கப் பெற்றிருக்கிறது தேவீயின் மகிமையும், பல தத்வங்கள் இருக்கின்றன. தேவீ உபாஸகர்கள் இதை படித்து விஷயங்கள் அறிந்து கொள்வது அவச்யமாகும். கடைசியில் ஸ்ரீ பகவத்பாதாள் அருளிய தேவீமானஸிக பூஜையும் சேர்க்கப் படடிருக்கிறது. வழக்கபடியே ஸ்ரீ கச்சபேச்வர சாஸ்திரிகளின் அழகிய பொழிப்புரையுடன் கூடியது. பதிப்பாசிரியரின் முயற்சியை ஆஸ்திகர்கள் ஸபலமாக்குவதற்கு தனது கிருஹங்களிலுள்ள குழந்தைகளுக்கு வாங்கி பாடம் செய்து வைத்தால் சிறு குழந்தைகளுக்கு மதாபிமானம் உண்டாகுமென நம்புகிறோம்.

விலை 0—1—6 நல்லிச்சேரி அரு. ஜம்புநாத சாஸ்திரி நல்லிச்சேரி P. O. அய்யம் பேட்டை என்ற விலாசத்திலாவது குடந்தை ஜனார்த்தன அச்சுக்கூடம் லிமிடெடிலாவது பெறலாம்.

மேலக்காவேரி கே. ஆர். வைத்தியநாத சாஸ்திரி.

வைதிகர் கவனிக்க

(சடலங்குடி நடேசசாஸ்திரிகள்.)

வேதம் அனாதியென்பதையும், அதன் மூலமே நம்மனோர் இம்மையிலும், மறுமையிலும் பல நன்மைகளை யடைந்தனர் என்பதையும் சத்தியவாக்கான புராணேதிஹாஸங்கள் வாயிலாக நாம் நன்கறிந்திருக்கிறோம். முன்னொருக்கால் கடுஞ்சினங்கொண்ட விச்வாமித்ரர் தன்னிடமுள்ள அஸ்திர சஸ்திரங்களை வஸிஷ்டரிடம் பிரயோகித்த பொழுது அவ்வஸ்திர சஸ்திரங்கள் யாவற்றையும் அவர் தம்மிடமுள்ள ஒரு ப்ரம்ஹதண்டத்துக் கிரையாக்கவே, விச்வாமித்ரர் முடிவில் ப்ரம்ஹாஸ்திரத்தைப் பிரயோகிக்க அதையும் வஸிஷ்டர் வாயில் விழுங்கினதாக நாம் நன்கு கேட்டிருக்கிறோம். எத்தகைய வைதிக மந்திரப்ரபாவத்தால் வசிஷ்டருக்கு இத்துணை சக்தியேற்பட்டதோ அந்த வைதிக மந்திரங்களும், அம்மஹான்களின் வம்சத்தில் பிறப்பும் நம்மிடமிருந்தும் அத்தகைய சக்தியின் அணுக்கூடநம்மிடமில்லாமல்போவானேன் என நாம் யோசித்துப்பார்க்கவேண்டாமா. அவர்கள் காட்டிலிருந்து கடுந்தவம் புரிந்தனர். நாமோ வீட்டிலிருந்து சாக்கடைப் புழுவாய்த் தபிக்கிறோம். என்பது உண்மைதானாயினும், நம்மைக்காட்டுக்குப்போக வேண்டாமென்றும், கடுந்தவதம் புரிய வேண்டாமென்றும் எவர் தடுத்தார்.

அக்காலம் காட்டில் வசிப்பவருக்கு அரசனது உதவியிருந்தது. இப்பொழுது அஃதில்லையே எனலாம். அங்ஙனமாயின் நம் மதத்தலைவர்களான மடாதிபதிகளும், மதப்பற்[illegible]ள வைதிக பிரபுக்களும் ஒன்றுகூடி [illegible]க்கொப்பான புண்ணிய நதி தீரங்களில் [illegible] முறைப்படி வைதிக குருகுலம் ஒன்றையேற்படுத்தி அதில் சாஸ்திர விதிப்படி சில மாணாக்கர்களையேனும் தயார் செய்து, அதர்வவேதம், தந்திர நூல்களிற் சொல்லிய முக்யமான மந்திரங்கள் இவற்றை நியமப்படி அப்யசிக்கச்செய்து அவ்வழியில் நம்முனோற்கிருந்த சக்தியை என் விருத்தி செய்யாதிருக்கவேண்டும்? இவ்வழியில் பாடுபட்டு ஸ்வல்ப சக்தியையாவது நம் ஸ்ந்ததிகள் தேடிக்கொள்ளாவிடில், ஜாதிக் கட்டுப்பாடடையொழிக்க சத்யாக்கிரஹம் செய்யப்போவதாக கங்கணம் கட்டிக் கொள்பவரும், போலியான ஸம்ஸ்காரத்தினால் பறையனையும் ப்ராம்ஹணனாக்கிவிடலாமெனக் கர்ஜிப்பவரும், முக்கியமாகவோ அமுக்கியமாவோ உள்ள காரணத்தால் வெகு காலமாகத்தான் வசித்து வந்த பிம்பத்திலிருந்து ஒரு தைவம் வெளிப்பட்டுவிட்டதாகச் சொல்லிக் கொண்டு அத்தைவத்துக்கு அபயம் கொடுத்து அதைத் தமது வீட்டுக் கொல்லையில் இருக்கும்படி செய்து முன்னர் ஆலயத்தில் செய்த வழிபாடுகளை இங்கேயே செய்து அத்தைவத்தின் அருளைப் பெறலாமெனச் சொல்லும் மஹான்களும், ப்ராம்ஹணர்களுக்கென தனியாய் நம்மனோர்களால் ஏறபடுத்தப்பட்ட தர்ம சொத்துக்களை சூறையாடவெண்ணங்கொண்டு ப்ராம்ஹணனும் சூத்திரனும் சேர்ந்து ஒரே பங்க்தியில் சாப்பிட வேண்டும்'' என உத்திரவுவிட்டால் ப்ராம்ஹணன் அவ்விதஞ்செய்ய முன்வரமாட்டான், ஆகவே எளிதில் அந்தச் சொத்தை சூறையாடலாம் என கங்கணங்கட்டி கொள்பவரும், மஹருஷிவம்சத்திற் பிறந்துங்கூட சற்றும் வேத சாஸ்திர நம்பிக்கையின்றி "குதிரை தூக்கிப்போட்டதுமன்றி முதுகில்பரித்ததாம்'' என்பதற்கேற்பபுராணங்களோ, மந்திர சாஸ்திரங்களோ முற்றிலும் பொய்யானவைகளே எனக் கூசாது கூறிக்கொண்டு பெரிய பெரிய அதிகார பதவிகளிலிருந்து நம்மை ஆள்பவருமான ஏனைய போலிப் பிராமணர்களும் மலிந்துவரும் இந்நாளில், வைதிக மடாதிபதிகளும், வைதிகர்களான பிரபுக்களும், நல்ல பலனளிக்கும் அத்தர்ம வேதத்தையும், மந்திர சாஸ்திரங்களையும் முன்னுக்குக் கொண்டுவந்து நமது வைதிக மதத்தைக் காக்க முன்வராவிடில் பிற தேசங்களில் யூதர்கள் படும்பாட்டை நமது வைதிக ப்ராம்ஹண சந்ததிகள் அடைய வேண்டியே வருமென்பதில் யாதுமையமில்லை.

ஆகவே வெள்ளம் வரும் முன்னரே அணை கோலுவது அவசியமாதலால் இவ்வழியில் வைதிக மடாதிகளும், வைதிக ப்ராம்ஹண ப்ரபுக்களும் முன்வர வேண்டுவது அவசியமில்லையா?

மாகஸ்நானம்

(பத்ம புராணம்)

(மேலக்காவேரி சிரோமணி கே. ஆர். வைத்தியநாத சாஸ்திரிகள் எழுதியது)

ஸூர்யவம்சத்திலுதித்த திலீப சக்ரவர்த்தி ஒரு சமயம் கானகங்சென்று வேட்டையாடித்திரும்பும்போது விருத்த ஹாரீதர் என்ற மகரிஷி அரசனைக்கண்டு அரசே! தகுந்த சமயமிது. மாகஸ்நானம் செய்து திரும்பலாமே என்றார். அரசரும் அப்படியே என. விதிப்படி ஸ்நானம்செய்து தனது குலகுருவான வஸிஷ்டரை வணங்கி மாகஸ்நான மகிமையைக் கூறும்படி வேண்ட அவர் கூறினதாவது:- முன்பு பூமியில் 12 வருஷம்மழையில்லாமல் பஞ்சமுண்டானது பார்கவரென்ற ரிஷி தனது பரிவாரங்களுடன் மணிகூட மலைக்குச்சென்றார் அங்கு ஓர் வித்யாதரன் புலி முகத்துடன் அவரை வணங்கி தனது புலிமுகமகன்று முன்முகம் வரும்படி அருளவேண்டினான். அவர் அதற்கு நீ முன் பிறவியில் ஏகாதசி உபவாசமிருந்து த்வாதசியன்று எண்ணை தேய்த்துக்கொண்டாய், உபவாசத்தால் வித்யாதர சரீரமும் எண்ணை தேய்த்துக்கொண்டதால் வியாக்ரமுகமும் பெற்றாய். மாகஸ்நானம் செய்து மாதவனை பூஜைசெய். உனதிஷ்டம் நிறைவேறுமென்றார். அவனும் அவ்விதமே பக்தியுடன் பூஜித்து தன் உருவத்தை அடைந்தான்.

வத்ஸனென்றும் முனிகுமாரன் மாகஸ்நானபுண்யத்தால் விஷ்ணு பக்தியைப்பெற்றான். ஏகாக்ர சித்தனாய் மதுவனத்தில் சென்று மாதவனை த்யானம் செய்தான். அசையாமல்கட்டைபோலிருந்ததால் இவன் சரீரத்தில் மிருகங்கள் கொம்பைத்தீட்டுவது வழக்கம். இதனால் இவர் மிருகசிருங்கர் எனப்பெயர் பெற்றார். பகவான் அவருக்கு ப்ரத்யக்ஷமாகி ருபு என்ற பிராம்மணனாக நீ அடுத்த பிறவி பெற்று ஜீவன் முக்தனாகி என்னடி பெறுவாய்என வரமளித்து மறைந்தார்.

வத்ஸன் காட்டின் வழியாக வருங்கால் மாகஸ்நானம் செய்ய வந்த 3 பெண்கள் பாழுங் கிணற்றில் விழுந்து இறக்கவே அவர்களின் தாய் அலறி அழுவதைக்கண்டான். தாயின் அலறுதலைக்கண்டு மனமிறங்கின வத்ஸன் அன்னையே உனது பெண்களை பிழைப்பிக்கிறேன் எனச்சொல்லி கழுத்தளவு ஜலத்தில் இறங்கி த்யானம் செய்ய ஆரம்பித்தான். இந்த சமயத்தில் ஜலத்தில் மதங்கொண்ட யானை அவனைக்கொல்ல வந்தது. அந்த சமயத்தையறிந்த வத்ஸன் அதனிடமிருந்து தன்னைக்காற்க 8 நாள் மாகஸ்நான புண்யத்தை அதற்களித்தான். உடனே அது திவ்யதேஹம் பெற்று தனது முற்பிறவியைக்கூறிற்று, நிஷத தேசத்தில் தர்மகுப்தன் என்னும் ஓர் வைச்யனாக நான் இருந்தேன். ஓர் ரசவாதியிடம் பேராசையால் எனது தனம் எல்லாவற்றையும் ஸ்வர்ணமாக்கித் தரும்படி கொடுத்தேன். அவர் அதை அபஹரித்துச்சென்றார். பிழைக்கவழியில்லாமல் தர்மத்திற்காக எனதுதந்தை வைத்திருந்த பொருளைவிற்றுஜீவனம் செய்தேன் அப்பாபத்தால் யானை ஜன்மம் பெற்றேன். உமது மாகஸ்நான பலத்தால் தேவனாக ஆனேன் என்று கூறிவிட்டு ஸ்வர்கம் சென்றான்.

நந்திக்ராமத்தில் புஷ்கரன் என்ற விப்ரன் இருந்தார் நித்யகர்மானுஷ்டான நிரதரான இவர் திடீரென்று இறக்க, யமன் தூதர்களைப்பார்த்து இந்த பெயர்கொண்ட வேறு ஒருவனை அல்லவா அழைத்து வரச்சொன்னேன் மாகஸ்நானம் செய்து நீண்ட ஆயுள் பெற்ற இவரை என் அழைத்து வந்தீர்கள் உடனே இவரை பூமியில் கொண்டுபோய் விடும் என்றார் புஷ்கரன் யமனை வணங்கி யாதநாசரீரத்துடன் துன்பத்தை அனுபவிக்கும் ஜீவராசிகளைக்கண்டு பரிதபித்து பகவந்நாமாவைக்கூறி அவர்களுக்கு இன்பமளித்து பூலோகம் வந்தார் (தொடரும்)

சோழவந்தான் அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கம்

ஷை ஸங்கத்தின் சார்பாக 8—2—41 சனிக்கிழமை இரவு 8 மணிக்கு சோழவந்தானில் வைகைநதிக்கரையில் ஸ்ரீஸந்தான கோபாலக்ருஷ்ணஸ்வாமி ஸந்நிதியில் ஓர் மாபெருங்கூட்டம் நடை பெற்றது. ப்ரம்மஸ்ரீ சங்கர சாஸ்த்ரிகளவர்கள் அக்ராசனம் வஹித்தனர். வக்கீல் பிரம்மஸ்ரீ வேங்கடாசலய்யரவர்கள் அதே தினத்தில் அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கத்தின் கல்கத்தா மஹா நாட்டில் அக்ராசனாதிபதி ப்ரம்மஸ்ரீ ராவ்சாஹிப் ந. நடேசய்யரவர்கள் செய்த ப்ரசங்கத்தைத் தமிழில் சபையோர்களுக்கு எடுத்துரைத்தார். பிறகு முள்ளிப்பள்ளம் பிரம்மஸ்ரீ யக்ஞதீக்ஷிதரவர்கள் அக்ராசனாதிபதி ப்ரம்மஸ்ரீ என். நடேசய்யரவர்களின் பரஸங்கத்தை சிலாகித்தும் பேசினார்கள் தீண்டாதார் ஆலயப்ரவேசத்தால் ராஜாக்களுக்கும் பிரஜைகளுக்கும் எற்படக்கூடிய மஹா ஆபத்துக்களையெல்லாம் ஆகம சாஸ்திரங்களிலும் தர்ம சாஸ்த்ரங்களிலும் உள்ளவாறு அய்யரவர்கள் தெளிவாய்ப் பராமர்சம் செய்து கூறியிருப்பதை நாம் இப்பொழுது நமது அனுபவத்திலேயே நிதர்சனமாப் பார்க்கிறோமென்று சொன்னார்.

அக்ராஸனாதிபதி ப்ரம்மஸ்ரீ சங்கரசாஸ்த்ரிகளவர்கள் முடிவுரையில் அதார்மிக சட்டங்களை நிவர்த்திப்பதற்கு முக்ய ஸாதனமாக நாமெல்லோரும் நமது ஆசாரங்களை ஒழுங்கு செய்துகொள்ள வேண்டும்; நாம் ஸனாதனிகள் என்று சொல்லிக்கொள்வதற்கே லஜ்ஜைப் படாமல் நமது பெரியோர்களின் தொன்று தொட்டு வந்திருக்கும் பழக்க வழக்கங்களில் கௌரவ புத்தியுடன் அவைகளை அப்யஸிக்க வேண்டும் என்று போதித்தார்கள்.

ப்ரம்மஸ்ரீ ராமக்ருஷ்ணய்யரவர்கள் அக்ராஸனாதிபதி யவர்களுக்கு வந்தனோபசாரம் கூறி ஸ்ரீ ஸந்தானகோபாலக்ருஷ்ணஸ்வாமி ஸந்நிதியில் நாம் செய்யும் ப்ரார்த்தனைகள் வீண்போகாதென்றும் நமது தலைவர் ஜயம் பெறுவது நிச்சயமென்றும் பேசினார். 9½ மணிக்கு சபை இனிது கலைந்தது. (ந.நி)

போலிகள் ஜாக்கிரதை!

அமிர்தாஞ்சனம்

எல்லா வலிகளுக்கும் துன்பங்களுக்கும்
கைகண்ட இந்தியா மருந்து
இதுவே.
ஆயிரக்கணக்கானவர்கள் விற்கிறுர்கள்

* * *

அமிர்தாஞ்சன் லிமிடெட்,

படை மருந்து

தேம்பல், படை முதலிய வியாதிகளேத் தீர்க்கும்

வர்ணுஸ்ரம சுயராஜ்ய சங்கம்

கோட்டையூர்

பொதுக்கூட்டம்

8—2—41 தேதி மாலே 2 மணிக்கு ஸனுதன தர்ம வித்யாலயத்தில் ஸபா அத்யக்ஷகர் கே வி எஸ் வி அழகப்ப செட்டியார் அவர்களுக்கு அ இ வ ஸ் சங்கக் காரியதரிசியால் அனுப்பப்பட்ட வேண்டுகோளின் படி பொதுக்கூட்டம் ஆரம்பமாகியது. கே வி எஸ் வி அழகப்ப செட்டியாரவர்கள் கோவிலூர் அ இ வ ஸ் சங்கத்தலேவர் பிர்ம ஸ்ரீ வி வி ரெங்கனுத சாஸ்திரிகள் அவர்களே தலேவராக பிரேரணே செய்ததை சபையோர்கள் ஆமோதித்தார்கள்.

பின்னர் தலேவர் முன்னுரையில் சங்கத்தின் நோக்கங்களே விளக்கி நீண்டநேரம் சொற்பொழிவாற்றினுர்கள். பின்னர் ஜே சுவாமிநாத அய்யர் அவர்கள், வேத பாடசாலே பண்டிதர் ஜீ சுப்பிரமணிய கனபாடிகள் தர்மத்தின் மேன்மையை விளக்கியும், ஸத் வித்தியாலய மாணவன் அழகப்பன் வர்ணுச்ரம சங்கம் பிரதி கிராமத்தில் நிறுவவேண்டிய அவசியத்தையும் மெம்பர்கள் சேர்க்கவேண்டிய கடமையை விளக்கியும், வித்யாலய மாணவி பத்மாஸனி மெஜாரிட்டி என்பதைப்பற்றி மிகவும் அழகாக பல உதாரணங்களுடனும், கோவிலூர் அ இ வ ஸ் சங்க காரியதரிசி கே எ ராமசாமி ஆலயபிரவேச சட்டம் எவ்வளவு அடாதசெய்கை என்பதைப்பற்றியும் அதை நிவர்த்திக்க சங்கங்கள் அவசியம் என்றும் ஆகவே தாமதியாமல் ஒவ்வொரு ஊரிலும் அ இ வர்ணுச்ரம சுயராஜ்ய சங்கம், தார்மீக வாலிபர் சங்கம். தார்மீக பாலிகா சங்கம் ஆஸ்திக இந்துமாதர் சங்கம், சனுதன தர்ம வித்யாலயங்கள், நிறுவி அவை பலப்படுத்த அனேவரும் ஒத்துழைக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டும் உபன்யாசம் செய்தார்கள்.

அ. இ. வ, சு. மகாநாட்டில் தலேமை வகிக்கும் ராவ்சாஹிப் என் நடேச அய்யர் அவர்களின் முகவுரை பிரசங்கத்தை தமிழில் மொழிபெயர்த்து கோவிலூர் அ இ வ சு சங்க கமிட்டி மெம்பர் உபவே பி சேஷாத்திரி அய்யங்கார் சுவாமி பி எ அவர்கள் விளக்கி எடுத்துரைத்தார்கள்

பிறகு தலேவர் முடிவுரை ஆற்றியபின் யாவருக்கும் சபைகாரியதரிசியின் சார்பாக வந்தனேபசாரம் கூற கூட்டம் இனிது நிறைவேறியது. ந. நி.

சனுதனதர்ம வித்தியாலய மாணவர் மாணவிகள் ஊர்வலம்

9—2—41உ காலே 9 மணிக்கு ஷை ஊர்வலம் சனுதன தர்ம வித்தியாலயத்திலிருந்து ஆரம்பமாகி போஸ்டாபீசு வீதி வழியாயே ஊர்வலமாக வந்து 11 மணிக்கு வித்யாலயத்தை அடைந்தனர். ஊர்வலற்தில் சனுதன தர்மத்துக்கு ஜே! வர்ணுச்ரம சுயராஜ்ய சங்கத்துக்கு ஜே! என்ற ஜே! கோஷம் வானேப்பிளந்தது! சிவாலயத்திற்கு போய் அர்ச்சனே செய்துகொண்டு பிரசாதத்தை வாங்கிக்கொண்டு வந்துசேர்ந்தனர்.

குறிப்பு.-இவ்வூர்வலம் வர்ணுச்ரம சுயராஜ்ய சங்ககல்கத்தா மகாநாடு வெற்றியுடன் நடைபெறுகற்காக ஆரம்பிக்கப்பெற்றது.

பொன்மலே

உபந்நியாஸம் பொன்மலேயில் சென்ற ஞாயிற்றுக்கிழமை சேங்காலிபுரம் ஸ்ரீ அனந்தராம தீக்ஷிதரின் ஸஹோதரரான பிரம்ஸ்ரீ நாராயண தீக்ஷிதர் "கிருஷ்ணதூது" என்ற விஷயத்தைப்பற்றி உபந்நியஸித்தார். ஏராளமான ஜனங்கள் வந்து கேட்டுக்கொண்டாடினுர்கள்.

திங்கள்கிழமை ஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர் அவர்களால் ஸ்ரீ சங்கர விஜயம் உபந்நியஸிக்கப்பட்டது. செவ்வாய்க்கிழமையன்று ஸ்ரீ நாராயண தீக்ஷிதரால் பாதுகாபட்டாபிஷேக உபந்நியாஸம் நடத்தப்பட்டது. ந நி

ஆத்தங்குடி

ஸநாதன தர்மக்கூட்டம்

உள்ளூர் அகில இந்திய வர்ணுச்ரம சுயராஜ்ய சங்கச்சார்பில் கும்பாபிஷேகத்தன்று பிற்பகல் 2 மணி முதல் 5 மணி வரை கண்டனூர் ப்ரும்மஸ்ரீ இராமனுதசிவாசார்யரவர்கள் தலேமையில், கண்டனூர் ப்ரும்மஸ்ரீ A. V. சுப்ரமணிய சாஸ்திரிகள் தர்ம விமர்சனத்தையும் T. P. ஜெகதீசய்யர், சங்கத்தின் சட்ட திட்டங்களேயும் இனி செய்யவேண்டிய வேலேயையும் ஜோதிட வித்வான் மணவாளய்யங்கார் ஆலயப்பிரவேச சட்ட அநீதிபற்றியும், திருவாடானே ஸ்ரீ டி. முத்துஸ்வாமி சிவாச்சாரியார் சபையை சிலாகித்தும், கோவிலூர் பாலசுப்ரமணியன் தார்மிக யுவர் சங்க மஹாநாடு நடத்த வேண்டியதினவச்யத்தைக் குறித்தும் சொற்பொழிவாற்ற, தலேவரவர்கள் சங்கம் எங்கும் அமைக்கப்பட்டு கட்டுப்பாடுடன் தீவிரப்ரசாரம் செய்யவேண்டியது முதல் வேலேஎன வற்புறுத்தி விரிவுரைபகர, சபையின் நிரந்தர தலேவர் ஜோதிஷ வித்வான் பிரும்மஸ்ரீ முத்துசாமி அய்யங்காரவர்கள் வந்தனேபசாரம் கூற சபை இனிது நிறைவெய்தியது. ந. நி

வைகானஸ சபை

மேல்படி சபையின் ஆதரவில் மாதாந்திர 3வது கூட்டம் சைதாப்பேட்டை ஸ்ரீராமானுஜ விஜய விலாஸமண்டபத்தில் நடந்தது அச்சமயம் கொன்னூர் ராமகிருஷ்ண பட்டாசாரியசுவாமி அக்கிராஸனம் வஹித்தார் பெருமாள் ஸன்னதியில் இருந்து ஊர்வலவாய் நாங்கல் மண்டபத்திற்கு வந்து சபை துஜத்தை சென்னே டாக்டர் ஸ்ரீமான் உ. வே, டி. ரங்காசர்லு எம். எஸி. ஏற்றி வைத்தார் தலேவர் ஸ்ரீவைகானசபை சமூகத்திர்க்கு மிகவும் முக்கியமானது என்று விரிவாக பேசினுர் பிர[illegible] எழும்பூர் ஸ்ரீனுவாஸபட்டர் ஸ்ரீ[illegible] [illegible] விஷயத்தை குறித்து மிகவும் உருக்கமாய் பேசினுர். சேஷபட்டாசாரியர் குமாரர் ஸ்ரீமான் உ, வே. ராகவபட்டாசாரியர் சென்னேயில் கூடிய சீக்கிரம் சபையின் ஆதரவில் ஓர் பாடசாலே ஏற்படுத்தும்படி கேட்டதற்கு காரியகமிட்டியை யோஜனே செய்து நடத்துவதாகப் ஒப்புக்கொள்ளப்பட்டு பி. வி. சேஷாத்திரியால் (சபை உப காரியதரிசி) வந்தோபசாரம் சொல்லகூட்டம் இனிதாக நடந்தது. ந. நி

சென்னே

ஸ்ரீ ஹிந்து தர்ம ஸித்தார்த்த ஸபை

இந்த சபையின் ஆதரவில் நடந்துவரும் ஸ்ரீமத் ராமாயணத்தில் சென்ற தைமீ 27 தேதி ஞாயிற்றுக்கிழமை தினம் பகல் ஸ்ரீ சீதாகல்யாண கட்டம் மிகவும் ரம்மியமாய் ஸ்ரீ உ. வே. வித்வான் கான்டூர் ராமானுஜாசாரியஸ்வாமியால் சென்னே புது உடயவர் ஸன்னிதியில் உபன்யஸிக்கப் பட்டது. அச்சமயம் ஏராளமாய் ஸ்திரீ புருஷர்களும் வந்து இருந்து ச்ரவணம் செய்ததுபாராட்டதகுந்தது.

ஸ்ரீ பிரஹ்மவித்யா விமர்சனீ ஸபை பிரசுரங்கள்.

ஸ்ரீ நகர விமர்சமும் ஸ்ரீ லலிதாஸ்தவ ரத்னமும்	0—12—0
ஸ்ரீ குரு தத்வ விமர்சம்	0—5—0
ஸ்ரீ வரிவஸ்யா ரஹஸ்யம்	1—0—0
ஸ்ரீ வித்யா ஸபர்யா பத்ததி	2—0—0
ஸ்ரீ வித்யா ஸபர்யா வாஸனே	3—0—0
ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய தத்வம்	1—8—0

கிடைக்குமிடம்:- ஸ்ரீ ஜனுர்தன அச்சுக்கூடம் லிமிடேட், கும்பகோணம்.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar and S. Kalyanasundaram.

75

ஆரியதர்மம்

13.2.1941

பு ஸ

26 6

215368

1123

REGD. No. M. 2913.

ஆர்யதர்மம்

சந்தா விபரம்.
[தபால் சிலவுள்பட]

ஜீவிய சந்தா ...	ரூ. 50
ஒரு வருஷ சந்தா ...	ரூ. $2\frac{1}{4}$
ஆறுமாத சந்தா ...	ரூ. $1\frac{1}{4}$

தனிப்பிரதி முக்காலணு
மாதிரிப்பிரதிக்கு எழுதவும்

வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

விளம்பர விகிதம்.

ஒரு முழுப்பக்கம் ஒரு தடவை	ரூ. 20
அரைப்பக்கம் ஒரு தடவை	ரூ. 12
ஒருபத்தி ஒரு தடவை	ரூ. 8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு ஒரு தடவை	அணு 8

நீண்டகால விளம்பரங்களுக்கு
தனி சார்ஜ்.

பு-26 | கும்பகோணம் விக்ரம-ஸ்ரீ மாசி-மீ 2உ 1941-ஸ்ரீ பிப்ரவரி-மீ 13உ | ஸ- 6

வாரக் குறிப்புகள்

ஸ்ரீவத்ஸ வே. ஸோ. சர்மா

தர்மமே காக்கும்!! தற்கால தேசஸ்திதி எவ்வகையிலும் நாளுக்கு நாள் நன்ருக இல்லை. வால் நக்ஷத்திரம், 24 கால்களுடன் திருவள்ளுருக்கருகில் ஓர் ஆடு பிறந்தது போன்றவைகளும் பல ஆபத்தைக் காண்பிக்கின்றன. ஆதலால் அனைவரும் ஸ்வதர்மத்தை நன்கு அனுஷ்டித்து க்ஷேமமடைவோமாக!!

என்ன அக்ரமம் மிது? பெங்களூரில் இந்துக்கள் ஓர் உத்ஸவத்தை நடத்தும் போது சில துருஷ்கர்கள் உள்ளே புகுந்து பல கெடுதல்களை விளைவித்தனர். காந்திஜியும் அரசாங்கமும் அவர்களுக்கு சலுகை காட்டா திருந்தால் இத்தகையன தோன்ருது!!

தார்மிகர் ஐக்யத்தால் ஜயம்!! தூத்துக்குடி நகரஸபை விநாயகர் கோவிலை இடிக்க இரவில் தக்க போலீஷ் பலத்துடன் வந்ததும் ஆஸ்திகர் ஒன்று கூடி அதை இடிக்காதபடி பலவகையான முயற்சிகளைச் செய்து ஜயித்தனர்.

பெயரை மாற்றிக்கோள்க!! சென்னை தமிழ் நல்வழிக்கழகமெனும் ஓர் சங்கம் விவாஹரத்து முதலிய கற்பைக்கெடுக்கும் சட்டங்களை ஆதரித்து டில்லிபொறுக்கு சபைக்குத் தெரிவித்திருக்கிறது! இதோ நல்வழி?

நாம் ஊதர சங்கை ஊதுவோம்? இப்படி பலர் செய்யும் வேலைகளைத் தனக்கு ஸாதகமாகக் காட்டி ஷை மசோதாவைச் சட்டமாக்க முயற்சிப்பார். நாம் பலதடவைகளில் கண்டனக் கூட்டம் போட்டும் மகஜர் அனுப்பியும் பயனிற்றி வெறுப்படைந்திருக்கிருேமென்ருலும் இப்போதும் செய்யத்தான் வேண்டும்.

ஓர் பண்டிதரின் மறைவு!! ராவ்பஹதூர் பண்டித பத்பநாப சாஸ்திரிகள் பாலகாட்டில் பிறந்து சிதம்பரம், சென்னை ஸம்ஸ்கிருத கலாசாலைகளில் தர்க்கவேதாந்தம் படித்து பிரஸிடென்ஸி கலாசாலையிலும் மைலை ஸம்ஸ்கிருதகலாசாலையிலும் பண்டிதராக இருந்து திடீரென மாரடைப்பால் மறைந்தார். போதனுசக்தி நிறைந்த இத்தகையவர் மறைவு கல்வி, உலகத்திற்கு கஷ்டம்.!

நீதி நெறிபோதா! மதப்படிப்பு தேவை!, என திருநெல்வேலி ஜில்லா, உபாத்யாயர் சங்கத்தில் ஓர் கிருஸ்தவர் கூறுகிருர். தற்கால அரசாங்க கல்விப்பாட முறை எவ்வகையிலும் பயன்படவில்லை! பொதுவாக மதாபிமான மூட்டும் பாடங்களைக் கற்பிப்பது அவசியம்.

அரசியலிலும் தர்பாரா? காந்திஜி மதத்தில் தான் விஷயமறியாமல் ஸர்வக்ஞனுக நினைத்து பேசுகிருரென நினைத்தோம்! சென்னை நகரஸபையில் 4 தேசீய அங்கத்தினர் வராததால் 10 ஆயிரம் ரூ. சண்டைக்கு அளிக்கப்பட்டது! வராதவரன்ருே குற்றவாளி? வந்தவர்கள் ராஜீநாமா செய்யவேண்டுமென்று உத்திரவிடுகிருர்.! என்ன தீர்ப்பு! விந்தை!!

நஷ்டமும் கஷ்டமுமே!! தேர்த்தல் மிக செலவுள்ளது! அரசாங்கத்திற்கும், நிற்பவருக்கும் பெருஞ்செலவு!! இது தேசத்தையே ஏழைமக்களையே தாக்கும்!! ஏற்கனவே சண்டையால் பொருள்விலை ஏறிவிட்டது!! இச்சமயம் காங்ரஸ்காரர் தேர்த்தலுக்கு நிற்பதும், உள்ள ஸ்தானத்தைக் காலி செய்வதும் அறிவுள்ளவர் உசிதமா என கவனிக்கவேண்டும்.

ஸ்ரீ சண்டீயாகம்

பிரும்ம வித்யாவிமர்சினீ ஸபை அங்கத்திநரான ஸ்ரீமான் டி. எஸ். நாராயணஸ்வாமி அய்யரவர்கள் தர்ம விருத்தியின் பொருட்டும் லோகக்ஷேமத்தின் பொருட்டும் ஷை யாகத்தை ஏராளமான தனச் செலவுடன் தனது பங்களாவில் 9-உ காலை நடத்தினர். நூற்றுக்கணக்கான ரித்விக்கள் ஸப்த சதீ பாராயணம் செய்து ஹோமம் பூஜை பிராமண ஸந்தர்பணை முதலியவைகளைச்செய்து முடித்தனர். மாலையில் பிரும்மஸ்ரீ ஸோமதேவ சர்மா யாகத்தின் சிறப்பையும் ஸ்வரூபத்தையும் வர்ணித்தார். பிறகு பிரும்மஸ்ரீ மந்திர மூர்த்தி கிருஷ்ணசாஸ்திரிகள் இதை ஸத்ரயாகத்திற்கு ஒப்பிட்டு பேசினுர்கள்! பிரும்மஸ்ரீ ஸபை தலைவர் அபிநவபாஸ்கர சுப்ரமண்ய அய்யர் ஸப்த சதீதத்வார்த்தத்தை உபன்யஸிக்சார்கள், ஸபையோருக்கு சந்தந தாம்பூலம் வழங்க இரவு ஸபை கலைந்தது. ந. கி.

ஜாதிக்கலப்பு சாப்பாடு.
உத்திரவை மாற்றமுடியாதாம்!

காங்கிரஸ் கக்ஷியின்
விபரீதம்

திருவாதி ஸம்ஸ்கிருத கலாசாலையில் ஜாதி வித்யாஸமின்றி ஸமபங்க்தி சாப்பாடு விஷயமாக தஞ்ஜை போர்டார் செய்த உத்திரவைப்பற்றி எங்கும் பலத்த கண்டனம் ஏற்பட்டிருக்கிறது.

ஜில்லா போர்ட் காங்கிரஸ் கக்ஷியார் தங்கள் கூட்டத்தில் இதைபற்றி ஆலோசித்தார்களாம். இந்த உத்திரவைப் புனராலோசனை செய்ய வேண்டியதில்லை யென்று முடிவு செய்தார்களாம். பிராம்மணமாணவர்கள் வெளியிடங்களில் சாப்பிட்டுக்கொண்டு பாடத்திற்கு மட்டும் கலாசாலைக்கு வருவதை ஆக்ஷேபிக்க வேண்டியதில்லை யென்றும் தீர்மானிக்கப் பட்டதாம். 45 பிராம்மண மாணவர்கள் சாப்பாட்டிற்குப் போகாமல் வெளியே சாப்பிட்டு வருகிருர்கள்,

மாவையும் கண்டபாலையும் போட்டி
குழந்தையின் குடலைக்கெடுக்காதீர்.
தாய்ப் பால்தான்
குழந்தைக்குச் சரியான உணவு.

பயஸ்யா (Regd)
தாய்ப்பாலை விசேஷமாய்வளர்க்கும்
திவ்ய ரஸாயனம்
விலை ரூ. 2—4—0
(Packing & Postge extra)

Address:—
"ஆத்ரேய"
ஆயுர்வேதிக் ஒர்க்ஸ் தென்னூர்,
ரோடு, திருச்சிருப்பள்ளி.
ப்ரோப்ரைடர்: V. B. நடராஜசாஸ்திரீ
ஆயுர்வேதாசார்யா

ஸம்ஸ்கிருதக் கல்வியின் அவசியம்.

(வி. பஞ்சாபகேசய்யர், சேங்காலிபுரம்)

உலகத்தில் தற்காலம் நாகரீகமாயிருப்பதாகக் கருதப்படும் தேசங்களெல்லாம் ஹீனஸ்திதியிலிருந்தபோது நம் தேசம் மஹோன்னத ஸ்திதியிலிருந்தது. அதை உணரும் தற்கால தேசபக்தர்கள் அந்தப் பெருமையை திருப்பியடைய வேண்டி என்னென்னமோ முயற்சிகளும் செய்கிறார்கள். ஆனால் அதன் உண்மைக் காரணத்தைக் கண்டு கொள்ளாமல் சிரமப்படுகிறார்கள். உண்மைக்காரணம் ஸம்ஸ்கிருதக் கல்வியின் வியாபகம்தான். கி. மு. மூன்ருவது நூற்ருண்டு வரை இந்தியாவில் சம்ஸ்கிருதம் பேசும் பாஷையாயிருந்ததாக மேல்நாட்டு ஆராய்ச்சியாளரான ப்ரொபஸர் மாக்ஸ்முல்லர் சொல்லியிருக்கிறார். அதிலில்லாதது ஒன்றுமில்லை. வித்தை என்ற பதத்தின் பொருள் அதுதான். சம்ஸ்கிருதக்கல்வி குறைவுபடவே, பொய் நாகரிகத் தோற்றங்களில் நாகரீகப் பிரமையும் அதர்மங்களில் தர்மப்பிரமையும் தோன்றத் தலைப்பட்டுவிட்டது.

இந்தியாவில் உத்தியோகம் பார்க்க வரும் சிவில் சர்விஸ்காரர்களுக்கு கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலை ஆதிக்கத்தில் செய்த உபந்நியாஸங்களில் ப்ரொபஸர் மாக்ஸ்முல்லர் சம்ஸ்கிருதத்தைப்பற்றி பின்வருமாறு சொல்லியிருப்பது கவனிக்கத்தக்கது.

"நமது சொந்த பாஷையின் உத்பத்தி, நமது சொந்த மனோபாவங்களின் உத்பத்தி நாகரீகம் என்பதின் பெயரால் எண்ணப்படும் எல்லாவற்றினுடையவும் உண்மையானதும் இயற்கையானதுமான மூலைகள், இவைகளெல்லாவற்றையும் பற்றி மற்றெதுவும் போதிக்க முடியாததான படிப்பினைகளை சம்ஸ்கிருதம் நமக்கு போதிக்கிறது.

சம்ஸ்கிருத படிப்பும், முக்கியமாய் வேதத்தின் அறிவும், எவ்வளவு தூரம் மனிதமனங்களிலுள்ள இருளைப்போக்கி பிரகாசிக்கச் செய்திருக்கிறதென்பதை அறியாமலிருப்பது ஒரு துரதிருஷ்டமேயாகும். அல்லது பூமி, சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், இவைகளைப் பற்றி கொஞ்சங்கூட தெரிந்து கொள்ளாமல் பூமியில் பிறந்து இறப்பதால் ஏற்படும் நஷ்டத்தைப் போலொத்த நஷ்டமேயாகும்."

இம்மாதிரி ஒரு மேல் நாட்டார் தன் தேசத்தவர்களுக்கு உபதேசம் செய்திருப்பதிலிருந்தாவது நாமே நம் முன்னோர்களின் அந்த வித்தையை புறக்கணித்திருப்பதால் ஏற்பட்டிருக்கும் நஷ்டத்தை உணர்ந்துக் கொள்ளவேண்டாமா?

சம்ஸ்கிருதம் ஒரு மதம் அல்லது ஜாதியைச் சேர்ந்த பாஷையல்ல. அது உலகத்திலுள்ள பாஷைகளுக்கெல்லாம் தாய் பாஷை. சங்கீதம் எப்படி எல்லோருக்கும் பொதுவோ அதேமாதிரி தான் சம்ஸ்கிருதமும். அந்த பாஷையில் ஹிந்துமத கிரந்தங்களிருக்கின்றன. அதற்காக அது ஹிந்து மதத்தைச்சேர்ந்த பாஷையென்று நினைப்பதுதவறு. கர்நாடகசங்கீத கீர்த்தனைகளெல்லாம் ஹிந்து மத தெய்வங்களைப்பற்றியேயிருக்கிறது என்பதற்காக சங்கீதத்தை மகமதியர்களும் கிருஸ்துவர்களும் புறக்கணிக்கிறார்களா? சம்ஸ்கிருதத்தை சிலர்கற்கக் கூடாதென்றாவது அல்லது முடியாதென்றாவது நினைப்பதும் தவறேயாகும்.

சென்ற 1924ம் வருஷத்தில் தாலுகா போர்டு மெம்பராயிருந்த போது எல்லா ஆரம் பள்ளிக்கூடங்களிலும் நாகர அட்சரங்கள் கற்பிக்கப்பட வேண்டு மென்று தீவிர முயற்சி செய்தேன். முன் சொன்ன மாதிரியான பல ஆட்சேபனைகள் தோன்றின. தெரியாத உபாத்தியாயர்களையெல்லாம் ஒரு மாதத்தில் நானே கற்றுக்கொள்ளும்படி செய்து விடுவதாக ஒப்புக் கொண்டேன். மெஜாரிட்டி பலத்தால் என் யோஜனை முற்றும் அங்கீகரிக்கப்படவில்லை. ஆனல் நான்கு பள்ளிக்கூடங்களில் கற்பிக்கும்படி தீர்மானிக்கப்பட்டது. சில மாதங்கள் கழித்து அவைகளுள் ஒரு பள்ளிக்கூடத்தை பார்வையிட்டபோது எல்லோரைக் காட்டிலும் ஒரு மகமதிய பையன் அந்த அட்சரங்களை நன்கு கற்றிருந்தான். அதிகாரிகளின் இயற்கையான ஆதரவின்மையாலும் என் மெம்பர் பதவி முடிவுற்றதாலும் அந்த முயற்சி அத்துடன் நின்று விட்டது.

இப்போது தேசத்தில் காங்கிரஸ் கட்சியை நடத்தும் காந்திஜியவர்களும் நம் தேசத்தின் புராதனப் பெருமையை புனருத்தாரணம் செய்ய வேண்டு மென்றே பாடுபடுகிறார். ஆனல், பாவம்! அவருக்கு சம்ஸ்கிருதக் கல்வியின் பெருமையை யறிந்து கொள்ள வழியில்லாதலால் அதுதான் காரணம் என்பதை அவர் உணர்ந்து கொள்ளவில்லை. அதனலேயே அவர் முயற்சிகளில் பல இடைஞ்சல்களும் தொல்லைகளும் விளைகின்றன. அவரின் முக்கிய பக்தரான ஸ்ரீமான் ராஜகோபாலாசாரியார் சம்ஸ்கிருதத்தின் பெருமையை சமீபகாலமாய் உணரத் தலைப்பட்டிருப்பதாக அவருடைய சில பிரசங்கங்களிலிருந்து தெரிகிறது. ஆயினும் தேசத்தின் முன்னேற்றத்துக்கு சமஸ்கிருதக் கல்வியபிவிருத்திதான் முக்கியம் என்பதை அவர் உணர்ந்ததாய் தெரியவில்லை. அவரும் உணர்ந்து காந்திஜியையும் உணரும்படி செய்வாரேயானல் தேசத்துக்கு நல்காலம் பிறக்கும்.

நவீன நாகரீக வலைகளிலெல்லாம் சிக்காமல் மீண்டிருக்கும் அறிஞர்கள் இவ்வளவு கஷ்டங்களுக்கிடையே பிராசீன தர்மங்களை காப்பாற்றப் பாடுபடுகிறார்கள். ஒன்றன்பின் ஒன்ருக வெளிப்பட்டுக்கொண்டேயிருக்குப தர்மவிகாத இயக்கங்களை ஆட்சேபிக்க உடல்பொருள் ஆவி அனைத்தையும் செலவிடுகிறார்கள். ஒன்று போனல் மற்ருென்று வந்து விடுகிறது. இம்மாதிரி ஒவ்வொன்ருய் ஆட்சேபிப்பது, அஜீர்ணத்தால் உண்டான தலைவலியைப் போக்க தலைவலிக்கு மருந்து போடுவதை ஒத்திருப்பதாக எனக்குத் தோன்றுகிறது. மூலகாரணமான அஜீர்ணத்தைப் போக்காவிட்டால் தற்காலம் போனலும் பிறகு அதிகப்படியான தலைவலி வந்து விடும்

அதே போல் இதற்கெல்லாம் மூலகாரணத்தை கண்டு பிடித்து அதை நிவர்த்திக்க வழிதேடவேண்டும். மாக்ஸ்முல்லர் சொன்னது போல் சமஸ்கிருதக்கல்வி குறைவுபடவே மனிதமனங்களில் வெளிச்சம் மங்கி இருள்வந்து மூடிவிட்டது. அதனலேயே நல்லது கெட்டது இன்னதென்று தெரியாமல் தட்டுத்தடுமாற வேண்டியிருக்கிறது. தேசம் ஒற்றுமைப்படவும் தேசமக்கள் தர்மங்களின் நுணுக்கமான உண்மைகளையறிந்து செவ்வனே வாழ்வதற்கும் சம்ஸ்கிருதக்கல்வியை விருத்தி செய்வது தான் முதல்தரமான வழி. சநாதநதர்மிகளும், முக்கியமாய் அதைக்காப்பதற்காக ஏற்பட்டமடாதிபதிகளும் சம்ஸ்கிருதக்கல்வியை விருத்திசெய்வதே முக்கியகடமை என்பதை யுணர்ந்து அதிலேயே தங்கள் முழு முயற்சியையும் செலுத்தவேண்டுமென்பது என் தாழ்மையான அபிப்ராயம். சம்ஸ்கிருதவித்தியை விருத்தியடைந்தால், இந்த தலைமுறையிலில்லாவிட்டாலும் அடுத்தத்தலைமுறையிலாவது, இப்போது ஏற்பட்டுக்கொண்டிருக்கும் அனர்த்தங்களையெல்லாம் அறிந்து விலக்கிக்கொண்டு தர்ம நெறியை கடைபிடித்து ஒற்றுமையுடன் வாழ்ந்து இப்போதைய உலகிலும் நம்தேசம் பிரகாசிக்கும்படி செய்ய ஹேதுவாகும்.

ராஜபுத்ரக் கதைகள்

(முன் தொடர்ச்சி)

வெகு காலம் சித்தூரிலிருந்து அரசு புரிந்துவிட்டு பப்பாராவல் பாரஸீகம் சென்று அங்கும் ம்லேச்ச ஸ்திரீகளை மணம் செய்துகொண்டு வாழ்ந்தார் நீண்டகாலம் என்று சொன்னேமல்லவா? அது உண்மையாக இருக்கக் கூடுமா என்று சற்று விசாரிப்போம்.

பப்பா ராவல் ஹிந்து சூரியன் எனவிளங்கினவர். ஹிந்து தர்மத்தை தலைநிமிர்ந்து நிற்கச் செய்தவர். உதிக்கும் சூரியன் அமைந்த சிகப்புக் கொடியையும் ஸ்ரீராம சந்திரனின் மரபில் தோன்றினேம் என்ற ஆத்மாபிமானத்தையும் ராஜபுதனத்துக்கு அளித்த உத்தமர். அவர் புண்ணிய கதைகளை மனதில் கொள்வதாலேயே இவ்வளவு காலமும் ராஜபுத்ர அரசர்களான மேவார் மன்னர்கள் வணங்காமுடி வள்ளல்களாக வாழ்ந்து வருகிறார்கள். அத்தகைய தர்ம வீரரா ம்லேச்ச ஸம்ஸர்கத்தை நாடியிருப்பார்?

அவர் அன்யர்களை மணந்து கொண்டார் என்று விசாரிக்காமலேயே முடிவுகட்டிக் கொண்டு அதன் மீது வேறு கல்பனைகளையும் கட்டத்துணிந்து விட்டனர் நமது ஆராய்ச்சியாளர்கள். ராஜபுத்ரர்களே அனார்யர்கள்தானே என்கின்றனர். கலியுகத்தில் க்ஷத்ரிய ஜாதியே அழிந்து விட்டது என்று புராணங்களே கூறுகின்றனவே என்கின்றனர். ஆகையால் புதிதாகத் தலையெடுத்த இவ்விராஜபுத்திரர்கள் க்ஷத்திரிய ஜாதியில் பிறந்தவர்கள் அல்லர். அரசர்களுக்கு முறைதவறிப் பிறந்த பிள்ளைகளாக இருக்கலாம், அல்லது ஆதிவாஸிகளான குஜர்களாக இருக்கலாம், அல்லது ஸங்கர ஜாதியினரான உக்ரர்களோ, பிராம்மணர்களால் தங்கள் நன்மையைக் கருதி உண்டாக்கப்பட்ட அக்னிகுலத்தைச் சேர்ந்த ஹூண யவன ம்லேச்சர்களோ அல்லது தங்கள் தர்மம் தவறிய பிராம்மணர்களாகவோ இருக்கலாமே ஒழிய ஆரிய மதத்தைச் சேர்ந்தவரல்லர் என்கின்றார்கள். இவர்கள் க்ஷத்ரிய வம்சபரம்பரை மன்னர்கள் என்று ஒப்புக்கொள்ள நமது ஆராய்ச்சியார்களுக்கு விருப்பம் இல்லை.

உண்மை யென்னவென்றல் பௌத்த மதப்பிரசாரத்தாலும் பௌத்த மன்னர்களின் முயற்சியாலும் ஒரு சமயம் ஆர்ய தர்மம் அனேகமாக அழிந்தது. வட இந்தியாவின் பெரும்பான்மை பிரதேசங்களிலும் க்ஷத்திரியர்களே அற்றுவிட்டனர். பிராம்மணர் பிராம்மணரல்லாதார் என்ற இரண்டு வகுப்புக்களே நின்றன.

அச்சமயத்திலும் சிலர், அரசபரம்பரையிலே உதித்தவரும் வேறு சிலரும் பௌத்த பிரசாரத்தை மீறி அந்நாடுகளை விட்டு விலகி

(தொடர்ச்சி 3ம்பக்கம் பார்க்க)

திருவையாற்றில் தர்ம நிலை,

தஞ்சாவூர் மகாராஜாக்களால் வெகு வருஷங்களாக தங்கள் குடும்பசொத்தைக் கொண்டு ஸ்தாபிக்கப்பட்டதாகவும் இப்பொழுதுள்ள கவர்மெண்டாரால் இதே விதமாக நடத்தப்பட வேண்டுமென்றும். கவர்மெண்டாராலும் அதன் பிரகாரமே நடத்தப்பட்டும் வந்ததுமான, திருவையாறு சம்ஸ்கிருத காலேஜானது கவர்மெண்டாரிட மிருந்து போர்டாரவர்கள் நிர்வாகத்திற்கு வந்தது முதல் கிரமமாக சம்ஸ்கிருத லோபத்திற்கும் தமிழ் வளர்ச்சிக்கும் காரணமாகி தற்காலம் ஆஸ்திக தர்மஹானிக்கும் வழிகாட்டியாக ஆக எத்தனிக்கிறது.

வெகு காலமாக சம்ஸ்கிருத காலேஜ் என்றபெயரைமாற்றி. Raja's College of Sanskrit and Tamil Studies, Tiruvadi என்ற பெயரை அடைந்தது.

வகுப்பிற்குத் தகுந்த பையன்களைப் பொறுக்கி போர்டர் (Boarder) ஆக்கும் பொறுப்பு பிரின்ஸிபாலிட மிருந்து எடுக்கப்பட்டது.

நான்கு, சிரோமணி வகுப்பிற்கும், குறைவாக வித்யார்த்திகளைச் சேர்ப்பது, வித்வான் வகுப்பிற்கு அதிகப்பையன்களைச் சேர்ப்பதென்ற வழக்கம் வந்தது.

செலவைக்குறைக்க நேர்ந்தகாலத்தில் சம்ஸ்கிருதபாகத்தை எடுக்க ஆதிக்கம் ஏற்பட்டது.

இப்பொழுது சமபந்தி போஜனம் என்ற உத்திரவால் சம்ஸகிருதத்தையே ஒழிக்க வழி தேடி விட்டது.

இந்த சமபந்தி போஜன உத்திரவு சென்ற தை அமாவாசை முதல் அமுலுக்கு வந்தது, இந்த உத்திரவை பிராம்மண வித்யார்த்திகள் ஒத்துக்கொள்ளாமல் ஆஸ்திகர்களை சரணடைந்தார்கள்.

ஆஸ்திகர்கள் அபயமளித்து அன்னமளிக்க ஆஸ்திகமணி வக்கீல் ஸ்ரீமான் வி. சுப்பிரமணிய அய்யர் அவர்களை தலைவராக்கி ஒவ்வொருவரும் ஒவ்வொரு நாளாக தங்கள் கிருகத்தில் மூன்று வேளையும் போஜனத்திற்கு வசதி செய்து வருகிறார்கள்.

இவ்வாறு நடந்து வருவது:— காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஆசார்ய பாதாளவர்கள் ஆக்ஞையினாலும், அபிமானத்தினாலும் தான் என்பது சொல்ல வேண்டியதில்லை.

ஸ்ரீ. ஆசார்யாள் இதை ஒரே இடத்தில் தங்கள் செலவில் நடத்த ஆக்ஞையிட்டும் இவ் வூர் க்ஷேத்திரவாஸிகள் ஒவ்வொருவரும் முன் ஏற்பாடு செய்து கொண்டபடி ஒரு வாரம் போஜனம் அளித்த பிறகு ஸ்ரீ ஆசார்ய பாதாளவர்கள் ஆக்ஞைப்படி நடத்த சித்தமாக ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகிறது.

மகாராஜாவின் தர்மஸ்தாபனத்திற்கு விரோதமான சமபந்தி போஜனத்தை நிவர்திக்கவும் ஆஸ்திக தர்மத்தை ரக்ஷிக்கவும், தற்காலம் இதையே பிரதானமாகக் கொண்டு நடக்கும் வர்ணாச்சிரம ஸ்வராஜ்ய சங்கத்தின் கிளைச்சங்கத்தை ஏற்படுத்தி அங்கத்தினர்களைச் சேர்த்தும், மதுரையில் நடக்கும் தேவஸ்தான பாடசாலையை மதுரைமகா ஜனங்கள் உத்தாரணம் செய்தது போல் இந்த கலாசாலையையும் கவர்மெண்டு மூலம் உத்தாரணம் செய்யவேண்டியும் தஞ்சை, ஸ்ரீமான் தர்மரக்ஷகர் ரத்னமய்யர் அவர்கள் போல் ஆஸ்திகர்கள் அனைவரும் சந்துஷ்டியுடன் பலவிதத்திலும் இதற்கு வேண்டிய சகல காரியங்களையும் செய்ய முன் வரவேண்டும்.

ஸ்ரீ ஆசார்யபாதாளாக்ஞையைத் தாங்கி கணபதி அக்கிரகாரம் ஸ்ரீ எஸ். குப்புஸாமி சாஸ்திரிகள் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட கமிட்டிக்கு உபகரிக்கவேண்டுமென்றும், ஸ்ரீ தர்மஸம்வர்த்தனீ அம்பாள் ஸமேத பிரணதார்த்திஹர பகவான் கிருபை செய்யவேண்டி அனுதினமும் பிரார்த்திக்கும் ஆஸ்திகன். சேஷராம சாஸ்திரீ

திருவாதி ஸமபங்க்தி போஜன உத்திரவு

குடந்தையில் கண்டனம்

தஞ்ஜை ஜில்லா போர்டார் திருவாதி ஸம்ஸ்கிருத கலாசாலையில் மாணவர்கள் ஜாதி பேதமின்றி ஸமபங்க்தியில் சாப்பிடவேணுமென்று செய்துள்ள உத்திரவைக் கண்டிப்பதற்காக 11உ செவ்வாய்க்கிழமை மாலை 6½ மணிக்கு கும்பகோணம் ஸ்ரீ சாரங்கபாணிஸ்வாமி கோவிலில் ஒரு பொதுக்கூட்டம், வ, ஸ், சங்கத்தின் ஆதரவில் நடைபெற்றது. அனேக வித்வான்களும் லௌகிக பிரமுகர்களும் பொது ஜனங்களும் கூடியிருந்தனர்.

அட்வகேட் ஸ்ரீமான் எம், கே. வைத்யநாத அய்யர் அவர்கள் அக்கிராசனம் வஹித்து இக்கூட்டத்தின் நோக்கத்தை விளக்கினார். சமபங்க்தி போஜனத்தால் ஜாதி ஒற்றுமை ஏற்படு மென்ற வாதத்தை யுக்தி பூர்வமாகக் கண்டித்தார். மேலும் போர்டின் உத்திரவானது மூல புருஷனின் கொள்கைக்கு விரோதமான தென்றும், சட்டப்படி செல்லக்கூடியதல்ல வென்றும், ஷை காலேஜிலும் கும்பகோணம் ராஜா பாடசாலையிலும் சாஹித்ய கிளாசை ரத்து செய்தது அநீதி யென்றும் பேசினார்கள்.

பிறகு ஸ்ரீமான் என். ராஜகோபாலாசாரியர் பி. ஏ. பி. எல். அவர்கள் ஷை உத்திரவைக் கண்டித்து சாஸ்திரம் யுக்திவாதம் ஆகிய வழியில் பேசினார். குடந்தை வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கக் காரியதர்சியான ஸ்ரீமான் நடராஜ சாஸ்திரிகள் பேசுகையில், இத்தகைய உத்திரவிற்கு காங்கிரஸ் வாதிகளான ஜில்லா போர்ட் அங்கத்தினரே காரணமென்றும், காங்கிரஸும் காந்தியும், ஹிந்து சமூதாயத்திற்கு, குறிப்பாக சனாதநிகளுக்கு செய்துவரும் அநீதிகளைப்பற்றியும் வெகு ஆதாரங்களுடன் கண்டித்துப்பேசினார்.

பிரம்மஸ்ரீ எஸ். மஹாலிங்க அய்யரவர்கள் பி. ஏ. பி. எல். பிறகு ஒரு கண்டனத் தீர்மானத்தை பிரேரேபித்து அதன் கருத்தை விளக்கி உடை, உணவு, முதலியவைகளில் கூட மனித ஸ்வதந்திரியம் நசுக்கப்படுவதைப்பற்றி விவரமாகப் பேசினார்கள். ஸ்ரீ ராமனுஜ தாதாசாரியர் தீர்மானத்தை ஆதரித்துப் பேசுகையில் ஆசாரத் திருத்தத்தையும் முக்யமாக, காந்தி காங்கிரஸ் ஆகியவர்களால் நமது தேசமும் மதமும் பாழாக்கப்பட்டு வருவதையும் விஸ்தரித்துக்கூறினார். தீர்மானம் ஏகமனதாக அங்கீகரிக்கப் பட்டது. வந்தனோபசாரத்துடன் இரவு 9 மணிக்குக் கூட்டம் கலைந்தது.

ந. நி.

ஸ்ரீ வேங்கடேச்வர ஸம்ஸ்க்ருத கலாசாலை, திருப்பதி.

மேற்படி காலேஜ் மாணவர் சங்கம் திருவையாறு சம்ஸ்கிருதகாலேஜின் பழைய மாணவர் ஸ்ரீ வி எஸ் ரங்கநாதன் அவர்கள் தலைமையில் 8—2—41 இரவு 8 மணிக்கு கூடியது. அக்கூட்டத்தில் திருவாதி சம்ஸ்கிருத காலேஜில் எல்லா வகுப்பிற்கும் சமபந்தி போஜனமளிக்கவேண்டுமென்றும் தஞ்சை ஜில்லா போர்டார் தீர்மானித்திருப்பதைக் கண்டித்தும், இச்சமயத்தில் உதவி புரிய முன்வந்துள்ள ஜகத்குரு ஸ்ரீசங்கராச்சாரிய ஸ்வாமிகளுக்கும், மற்றும் இதர பிரமுகர்களுக்கும் தங்கள் வந்தனங்களைத் தெரிவித்துக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேறின.

சமீபத்தில் மறைந்துள்ள ஸ்ரீ சுபாஷ் சந்திரபோசு அவர்கள் க்ஷேமமாகத்திரும்பி வரவேண்டுமென்றும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஒ நி.

திருவாதி ஸமபந்தி போஜன அநீதி

ஆஸ்திகர்களின் ஆலோசனைக் கூட்டம்.

திருவாதி சம்ஸ்கிருத கலாசாலையைச் சேர்ந்த போஜன சாலையில் ஜாதி வித்யாசமின்றி சமபந்தி போஜனம் செய்யவேண்டுமென்ற நிர்பந்த தீர்மானத்தை அநுஸரித்து ஏற்பட்ட நிலைமையையும், அதன் காரணமாக கலாசாலையைச் சேர்ந்த போஜன சாலையிலிருந்து பிராம்மணமாணவர்கள் விலகியிருக்கும் நிலைமையையும் தீவரமாய் ஆலோசனை செய்ய திருவாதி, கணபதி அக்கிரகாரம் இந்த கிராமங்களில் சில பிரதிநிதிகள் 2—2—41-ல் கணபதி அக்கிரகாரத்தில் ஒரு சபை கூடினார்கள்.

சங்கியை, பெருக்கிக்கொள்ளும் அதிகாரத்துடன் கூடிய இதனடியிற்கண்ட கனவான்கள் அடங்கிய ஒரு காரிய சபை

(தொடர்ச்சி 6ம்பக்கம் பார்க்க.)

(2பக்கத்தொடர்ச்சி)

ராஜபுதனத்துக்குள் வந்து தங்கினார்கள். மலைகளும் காடுகளும் நிறைந்த இராஜபுதனம் அதிக வளப்பமில்லாது இருந்தபோதிலும், ஆதியில் கடலாக இருந்து பிறகு வற்றிய பொழுது அயோத்தி அரசனான துந்துமாரன் என்னும் குவலாச்வனால் குடி ஏறத் தக்கதாகச் செய்யப்பட்டும் ஸ்ரீ ராமபிரானது அனுக்ரஹத்தால் ஆடுமாடுகள் நிறைந்ததாகவும் ஸ்ரீ கிருஷ்ணபகவான் உத்தங்கருக்கு அருளிய வரத்தினால் அதிக மழையுள்ளதாகவும் வஸிஷ்டரால் வஸிக்கப்பட்டும் வந்தமையால் இவர்களுக்கு புண்யபூமியாக விளங்கிற்று. ஆகையால் இந்து மதத்தில் பற்றுதல் உள்ளவர்கள் இங்கு வந்து தங்கினார்கள்.

இச்சமயத்திலே குமாரிலரும் ஸ்ரீசங்கரரும் தோன்றினார்கள். பௌத்த மதத்தை கண்டித்து அதன் பக்கம் ஜனங்களுக்கு உண்டாயிருந்த பற்றை அழித்தனர். ஹிந்து மதத்துக்கு புற்றுயிர் அளித்து பாரதவர்ஷம் முழுவதும் ப்ரப்பினர். ஹிந்துதர்மக்கொடி புதிய பிரகாசத்துடன் பறக்கலுற்றது. அதை க்ஷத்ரிய அரசர்களே காப்பாற்ற முன் வந்தனர். அவர்களே இவ்விராஜ புத்திரர்கள் ஆவார்கள்.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்ய தர்மம்
விக்ரம-௵ மாசி-௴ 2௳

சீர்திருத்த ஸ்திரீகளின் கூட்டம்.

சென்னை சீர்திருத்த ஸ்திரீகளின் கூட்டமொன்று 8௳ யன்று நடந்தது. சென்ற டிசம்பரில் பெங்களூரில் நடைபெற்ற அகில இந்திய ஸ்திரீகள் மஹாநாட்டுத் தீர்மானங்களைப்பற்றியும் மற்றவைகளைப்பற்றியும் அக் கூட்டத்தில் பலர் பேசினார்கள். முக்யமாக விவாஹம், விவாஹரத்து, வர்ச்சுரிமை தீண்டாமை விலக்கு, ஆகிய விஷயங்களை [illegible] அமு லுக்குவர ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும், இதற்காக ஓர் சட்டமூலமான நிர்ப்பந்தம் ஏற்படுத்துவதுகூட அவச்யமென்றும் மேற்படி ஸ்திரீகள் பேசியிருக்கிறார்கள். புருஷர்களான சீர்திருத்தவாதிகளை விட ஸ்திரீ சீர்திருத்தவாதிகள் மிகுந்த புரட்சிகரமான கார்யங்களைச் செய்துவருவதைப் பார்க்கிறோம். மஹம்மதியர், கிறிஸ்தவர், ஹிந்துஎன்ற வித்யாசமில்லாமலே எல்லா ஜாதியினரும் ஒன்றுபட்டிருக்கவேணுமென்றும், அந்த முறையில் விவாகங்கள் நடக்கவேணுமென்றும் ஸ்திரீகள் மஹாநாட்டில் தீர்மானித்திருக்கிறார்கள்.

இந்தக் கனவு நிறைவேறக் கூடியதாவென்பதைக் கூட சீர்திருத்த மோஹம் கொண்ட ஸ்திரீகள் நினைத்துப் பார்ப்பதில்லை.

உலகத்தில் ஒவ்வொரு ஜனஸமூஹத்துக்கும், அதன் நாகரீகத்தையும், தனி ஸ்வரூபத்தையும் விளக்கும்படி ஏற்பட்டுள்ளது விவாஹம், சொத்து வார்ஸு விஷயம் போன்றவைகளேயாகும். மஹம்மதியருக்கும், கிறஸ்தவருக்கும், ஹிந்துக்களுக்கும், விவாஹமுறை வெவ்வேறானது. சொத்து வார்ஸுச் சட்டமும் வேறானது. இந்த ஆதாரத்தைக் கொண்டே மேற்படி ஜாதிகள் தனியாக விளங்கி வருகின்றன. அவரவர்களின் தனிச் சிறப்புக்கு ஆதாரமான விவாஹ முறையை அழித்துக் கலப்பு விவாஹம் வேண்டுமென்று இந்த அபலைகள் கேட்பது நிறைவேறக் கூடியதா? தனது மத நாகரிகாதிகளின் தனிச்சிறப்பில் பெருமைகொண்ட மஹம்மதியர்களோ, கிறிஸ்தவர்களோ, ஹிந்து சீர்திருத்த ஸ்திரீகள் விரும்புவது போன்ற அபத்தக் கொள்கைக்குச் செவி சாய்ப்பார்களென்பது கனவிலும் நினைக்கக் கூடியதல்ல.

ஆகவே இது கடைசியாக ஹிந்து சமூக நாச வேலையில்தான் முடியக் கூடியதாயிருக்கும். ஹிந்து சமூஹத்தில் கோடிக் கணக்கான ஸாத்விகள் குலதர்மத்தில் ஈடுபட்டு கிரஹங்களுக்குள்ளேயே கௌரவத்துடன் வாழ்ந்து கற்பரசிகளாக விளங்கி வருகிறார்கள். அந்த கிரஹதேவதைகளுக்கு, நிலைமாறின இந்த ஸ்திரீகள் எப்படி பிரதிநிதியானார்களென்பது விசித்திரமாயிருக்கிறது. குலஸ்திரீகளின் அபிப்பிராயத்தை அறிய வழியில்லாத இந்திய சீர்திருத்தக்காரிகள் அவர்கள் பெயரால் தீர்மானங்கள் செய்ய என்ன அதிகாரமுளது? பெங்களூரில் கூடிய 180 ஸ்திரீ பிரதிநிதிகள் தான் இந்திய முழுவதுமுள்ள கோடிக்கணக்கான குலமக்களுக்கு பிரதிநிதியென்று பகர்வதைவிட விபரீதமானதும் வஞ்சனையானதுமான விஷயம் வேறென்ன? இந்த 180ஸ்திரீகளும் எந்தெந்த ஊர்களிலிருந்து எவரெவர்களால் முறைப்படி பிரதிநிதியாகப்பொறுக்கப்பட்களென்பதை விசாரித்தால் வேடிக்கையாகவேயிருக்கும்.

இக்காலத்தில் சீர்திருத்தப்பேச்சுப் பேசுவது ஓர் அர்த்தமற்ற பெருமையாகிவிட்டது. பத்திரிகைகளில் பெயர் அடிபடவும் நாகரீகர்ளெனத்தம்மைத் தாமே நினைத்துத் தடுமாறிக் கொண்டிருப்பவர்களுடைய ஸ்துதியைப் பெறவும் இந்த ஸ்த்திரீகள் வேஷம் போடுகிறார்களேயல்லது உண்மையில் இவர்களால் சீர்திருத்தங்கள் செய்யுமுடியுமா? தங்களைப்பற்றிய வரையிலாவது அவைகளை ஆசரித்து வழிகாட்ட தைரியமுண்டா? பெங்களூரிலும் சென்னையிலும் ஜாதிக் கலப்பு விவாகம் வேண்டுமென்ற ஸ்திரீகள் தங்கள் வீடு திரும்பும்போது அந்த உறுதியுடன திரும்பினார்களா? ஜாதி பேதத்தை ஒழித்து மஹம்மதிய ஸ்திரீகள் ஹிந்துக்கள் வீட்டுக்கும் ஹிந்து ஸ்திரீகள் மஹம்மதிய அல்லது கிறிஸ்தவவர் வீட்டுக்குப் போய்விடமுடியுமா? மேடையில் வாய்நிறைய சீர்திருத்தப் பேச்சு நடத்திவிட்டு வீட்டுக்குத் திரும்பும்போது அதை மறந்து வேறு நிலைமையிலேயே இருக்கிறார்களென்பதை அறியாதாருண்டோ? எப்படியும் கிறிஸ்தவ மஹம்மதிய ஸ்திரீகளும் சீர்திருத்த இயக்கத்தில்சேருவதுபோல்தோன்றினும் அந்தசமூஹ மதவியவஸ்தைகளை அவர்கள் மீறி வெளியே வரமாட்டார்களென்பது திண்ணமானவிஷயம். மனஉறுதியும் மதசிரத்தையும் அற்று தன்னைத்தானே சிறுமைப்படுத்திக் கொள்ளும் புத்தி வாய்ந்த ஹிந்துஸ்திரீகள் சிலர்கள் மட்டும் இந்தச் சீர்திருத்த துஷ்பிரசாரத்தில் சிக்கிக்கொண்டு வீணாகப்போகிறார்களேயல்லது வேறில்லை.

புண்ய பூமியாக இப்பாரததேசமும், அதன் உயர்ந்த தர்மங்களும், அதன் நாகரீகாதி மற்றச் சிறப்புகளும் கற்பரசிகளான குடும்ப ஸ்திரீகளையே பெரும்பாலும் பொறுத்துநிற்கின்றன. ஆகவே கலகப்ரியர்களான நமது எதிரிகள் நமது ஏற்றத்தைக் கண்டு ஸஹியாமல், நம்மைத்தாழ்த்தக் கருதி இச்சீர்திருத்தக்காரிகளை அதற்கு ஸாதனமாக உபயோகித்து வருகிறார்கள். ஆதலால் நமது ஸ்திரீகளோ, அல்லது சாஸ்திரத்தாலும் சட்டத்தாலும் அவர்களது உயர்ந்த பிரதிநிதிகளாக அமைக்கப்பட்ட புருஷர்களோ மேற்கண்ட சீர்திருத்தக்காரிகளுடைய விபரீதக்கூற்றுக்களையும், விபரீதச்செய்கைகளையும் கண்டித்து அவைகளில் நமக்கு எவ்வித சம்பந்தமுமில்லையென்பதை உலகமறிய அடிக்கடி வெளியிட்டுக் கொண்டிருப்பது அவச்யமாகும்.

கல்கத்தா

அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கம்.

கல்கத்தா (9—2—41)

மதுரையிலிருந்து ராவ்சாகேப் N. நடேசய்யர் அவர்கள் 7—2—41 காலை 10-40 கல்கத்தா மெயிலில் கல்கத்தா வந்து சேர்ந்தார். அவர்கள் கூட டெலிகேட்டாக மெட்ராஸ் K. S. வெங்கட்டரமணி அய்யர், கும்பகோணம் ஸ்ரீ மடம் ஆஸ்தான வித்வான் T. V. லெக்ஷ்மி நாராயண சாஸ்திரிகள் இவர்களும் வந்தார்கள், கல்கத்தா ஸ்டேஷனில் பத்யனாத் பஜோரியா S. M. பரேண்டு செகரெட்டரி A. I. V. S. சங்கம் மற்றும் பல வித்வான்களும் தலைவர்களும் வந்து நல்வரவு செய்தனர். ஸ்டேஷனில் சுமார் 100 பேர்கள் வந்திருந்தார்கள். வந்தவுடன் 11½ மணிக்கு ஊர்வலமாக சுமார் 3 மயில் விஸ்தீர்ணம் ஊர்வலம் வந்தார்கள். ஊர்கோலத்தில் சுமார் 2500 பேர்கள் கலந்துகொண்டனர்.

மறுநாள் (8—2—41) சனிக்கிழமை மத்தியானம் 2½ மணிக்கு கான்பரன்ஸ் ஆரம்பமாயிற்று. ராவ்சாகேப் என். நடேசய்யர் தலைமையின் கீழ் நடந்தது. கான்பரன்ஸ் கிரீஷ் பார்க் என்ற சிங்காரக்கொட்டகையில் நடந்தது கூட்டத்தில் சுமார் 20000 பேர்கள் குழுமியிருந்தனர். மாலை 7 மணிக்குக்கான்பரன்ஸ் வந்தனோபசாரத்துடன் நிறைவேறியது. அன்றிரவு 9-10 மணிக்கு கார்ய ஆலோசனைக்கமிட்டி மீட்டிங் நடந்தது. (9-2-41) மாலை 2½ மணிக்கு மறுபடியும் கான்பரன்ஸ் ஆரம்பமாகும்.

ஒ. நி.

திப்பிராஜபுரம்

பிரம்ம வித்யா ஸபையின் வருஷாந்திர விழா.

ஸ்ரீப்ரும்ம வித்யா ஸபாவின் மூன்றாவது வருஷ பூர்த்தி வைபவத்தை ஞாயிற்றுகிழமை தினம் மாசி 5௳ (16—2—41) கொண்டாட உத்தேசித்திருக்கிறது. ஆஸ்திகர்கள் யாவரும் திரளாக வந்தும் நடத்தும் உபந்யாஸங்களை கேட்டும் கிருதார்த்தர்களாக ப்ராத்திக்கப்படுகிறது. ந. நி.

திருக்கருகாவூர் ஸ்ரீ டி. எல். சுப்பய்யரவர்கள் முன்னிலையில் ஸம்ஸ்கிருதபாடசாலை பரிசளிப்பு நடக்கும். வரகூர் வித்வான் சுப்பிரமண்ய சாஸ்திரிகள் வரவேற்பு பிரஸங்கம் செய்வார்கள். ஸ்ரீ அக்னிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார் "நமது ஆசார ஸூக்ஷ்மங்கள்" என்பதைப் பற்றியும் ஸ்ரீ ராமானுஜதாதாசாயர் "வைதீகமதத்தின் தற்கால நிலைமை என்பதைப் பற்றியும் உபந்யஸிப்பார்கள் இதர வித்வான்களும் பேசுவார்கள்.

திருவிசநல்லூர

ஏகாதசி புராண ப்ரவசனம்.

ஸ்ரீ ஜகத்குரு மஹா ஸன்னிதான ஆக்ஞைப்படி, தை-௴ 26-௳ சனிக்கிழமை பீஷ்மைகாதசியன்று, ஸ்ரீதர வெங்கடேச அய்யாவாள் ஸன்னதியில் பிரும்மஸ்ரீ வித்வான் வைத்தினாத சாஸ்திரிகள் விபீஷண சரணாகதியைப்பற்றி உபன்யஸித்தார்.

வைத்யம் D. V. சுப்பிரமணிய அய்யர்,
ஸ்ரீ மடம் முத்ராதிகாரி,

உ

ஸ்ரீமடத்தின் பிரயோஜனம்.

ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கராசாரியாளவர்கள் அருளிய உபன்யாஸம்.

(P. சங்கரநாராயணன் கும்பகோணம் காலேஜ் லெக்சரரால் எழுதியது)

கும்பகோணம் ஸ்ரீ மடத்தில், 26—1—41 ஞாயிற்றுக்கிழமை இரவு ஸ்ரீ ஆசார்யாள் செய்த பிரஸங்கத்தின் ஸாரமாவது:—

உலகத்தில் ஜனங்களின் நன்மைக்காக பல கார்யங்கள் செய்யப்படுகின்றன. ஒருவன் அன்னசத்திரம் போடுகிறான். ஒரு பாங்கி வைக்கிறார்கள். காலேஜ் ஏற்படுத்துகிறார்கள். கோர்ட்டுகள். போலீஸ் ஸ்டேஷன்கள் இவைகள் ஸ்தாபிக்கப்படுகின்றன. இவைகள் ராஜாங்கத்தாரால் ஏற்படுத்தப்படுகின்றன. ராஜாங்கத்தார் செய்யாவிட்டால் ஜனங்களே ஒன்று சேர்ந்து இந்தமாதிரி ஸ்தாபனங்களை ஏற்படுத்துகிறார்கள்.

இந்த ஸ்தாபனங்களெல்லாம் எதற்காக? ஒவ்வொன்றும் ஒவ்வொருவிதமான துக்க சாந்திக்காக ஏற்பட்டது. அன்ன சத்திரத்தால் பசிக்கு சாந்தி உண்டாகிறது. பாங்கினால் தாரித்ரியத்திற்கு சாந்தி உண்டாகிறது. கோர்ட்டு முதலியவைகளால் ஜனங்களுக்குள் ஏற்படும் விவகாரங்களுக்கு பரிகாரம் உண்டாகிறது. இன்னும், சினிமா, நாடகக்கொட்டகைகளால் சிறிதளவு சுகமோ, துக்க நிவிருத்தியோ உண்டாகிறது. ஆனால் இந்த ஸ்தாபனங்களெல்லாம் தாத்காலிகமான சாந்தியைத்தான் கொடுக்கின்றன. பசி திரும்பித் திரும்பி வருகிறது. பாங்கிகள் தாரித்ரியத்தை அடியோடு போக்குவதில்லை. இவைகளெல்லாம் நிரந்தரமாய் சாந்தியை உண்டாக்கிவிட்டால், பிறகு அந்த ஸ்தாபனங்கள் இருக்கவேண்டிய அவசியமில்லை. ஆனால் அன்னசத்திரங்கள், பாங்கிகள், கோர்ட்டுகள், காலேஜிகள் இருந்து வருகின்றன. அவைகள் எடுபடவில்லை. அவைகள் நீடித்த, பரிபூர்ணமான சாந்தியைகொடுக்க சக்தியற்றவை. அவைகள் தாத்காலிகமான துக்க சமனத்துக்குத்தான் ப்ரயோஜனப்படுகின்றன. ஆத்யந்திகமாய் துக்க நிவிருத்தியை கொடுக்கக்கூடியவை அல்ல.

சாதாரணமாய் பசிக்கு அன்னம், தாரித்ரியத்திற்குப் பணம் இவைகளெல்லாம் ஒருவன் வேண்டும் என்கிறான். இவைகளை அடைந்தால், இன்னும் வேண்டும் என்றுதான் ஆசை உண்டாகிறது. லௌகீகமான வஸ்துக்களெல்லாம் நம் ஆசைகளை மேன்மேலும் அதிகரிக்கின்றன. இவைகளெல்லாம் பூர்ணமான சாந்தியையோ சுகத்தையோ கொடுக்கக்கூடியவை அல்ல. ஒன்றையடைந்தால் மற்றொன்று வேண்டுமென்று தோன்றுகிறது. ஆகையால் இவைகளெல்லாம் சாச்வதமான சுகத்தையோ சாந்தியையோ கொடுக்கக்கூடியவையல்ல.

பகவான் கீதையில்:—

यं लब्ध्वा चापरं लाभं मन्यते नाधिकं ततः ।
यस्मिन्स्थितो न दुःखेन गुरुणापि विचाल्यते ॥

என்று சொன்னபடி, எதை அடைந்தபிறகு, அதற்கு மேலானதாக ஒன்று இருப்பதாய் ஒருவன் நினைக்கிறதில்லையோ அதைத்தான் நாம் அடைய பிரயத்னம் பண்ணவேண்டும்.

यस्मिन्स्थितः எந்த நிலையிலிருக்கும் ஒரு புருஷன், गुरुणापि दुःखेन மிகவும்பெரிய துக்கத்தாலுங்கூட, न विचाल्यते அசைக்கப்படுகிறதில்லையோ? என்று சொல்லியிருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட ஸ்திதியை அடையவேண்டும். இந்த பரமலாபத்தை ஒருவன் அடைந்துவிட்டானானால் அவனுக்கு மற்ற லாபங்கள் அவசியமில்லை. இன்னும்வேண்டும், வேண்டும் என்கிற புத்தி ஏற்படாது.

இந்த பரமலாபத்தை அடைந்தால்தான் நம் ஜன்மம் ஸபலமாயிற்று என்று சொல்லப்படும். விருக்ஷங்களுக்கு பழம் கொடுக்குமநிலை கடைசிநிலை. கவி ஒருவர் ஆசார்யாளைப்பற்றி शङ्करपादपं नमामि என்று சொல்லியிருக்கிறார். पादपं என்று சொல்வானேன் என்று கேட்கலாம். அவர்களை மரத்துக்குச் சமானமாய் சொல்லலாமா? 'குறிப்பறியமாட்டாதவன் மரம்' என்றல்லவா சொல்லுகிறார்கள்? என்றால், இதில் ஒரு ஸ்வாரஸ்யமுண்டு. நமது ஆச்சாரியாள் நம் ஜன்மமாகிய விருக்ஷம் ஸபலமாவதற்கு மார்க்கத்தைக் காட்டியிருக்கிறார்கள். நமது ஆகாரங்களில் ஷட்ரசங்கள் இருப்பதுபோல், நமது சித்தத்திலும் நவரசங்கள் உண்டு. ஷட்ரசங்களில் மதுரரசம் உயர்ந்தது. அதைப்போல் நவரசங்களில் சாந்தரசம் மிகவும் சிரேஷ்டமானது.

ஒரு பழத்தில் மதுர ரஸம் ஏற்பட்டுவிட்டால் மற்ற ரஸங்களுக்கு அதில் இடமில்லை. ஆரம்பத்திலும், முடிவுக்கு முன்னாலும் மற்ற ரஸங்கள் இருந்தாலும், கடசியான பலாவஸ்தையில் மதுர ரஸம் பூர்ணமாய் இருக்கும்பொழுது மற்ற ரஸங்கள் இருக்கமாட்டா. அதுபோல், நம் மனதில் சாந்த ரஸம் குடிகொண்டு விட்டால், மற்ற மனோவிகாரங்கள் உண்டாகாது. காமத்தைக்கொடுக்கும் வஸ்துவைக் கண்டு ஆசையோ, பயங்கரமான புலி முதலியவையைக்கண்டு பயமோ, அல்லது க்ரோதமோ இவைகளெல்லாம் உண்டாகாது. ஆனந்த மயமான சாந்த ரஸம் பரிபூர்ணமாய் ஒருவன் மனதில் நிறைந்திருந்தால், வேறு ஒரு விகாரமும் அவன் மனதில் ஏற்படாது. இந்த மண்டபத்தில் ஜனங்கள் நிரம்பியிருக்கிறார்கள். வெளியிலிருந்து வேறு ஒருவரும் உள்ளேவர முடியாதல்லவா? அதேமாதிரி, நம் மனதில் சாந்த ரஸம் பூர்ணமாய் நிறைந்துவிட்டால் மற்ற ரஸங்களோ விகாரங்களோ உண்டாக முடியாது. இப்பேர்ப்பட்ட சாந்த ரஸத்தை அடைந்தவன் ஜன்மா தான் சபலமானதாகச் சொல்லப்படும். அவன் தான் முக்தன், மோக்ஷத்தை அடைந்தவன்.

மோக்ஷம் என்றால் விடுபடுவது என்று அர்த்தம். சம்சாரம் என்கிற பந்தத்திலிருந்து விடுபட்டவன் மோக்ஷத்தை அடைந்தவன். மோக்ஷ பலம் அடைவதில் இரண்டுவிதம். ஒருவிதம், மாம்பழத்தைப்போன்றது மற்றொன்று வெள்ளேரிப்பழத்தைப் போன்றது. மாம்பழம் பழுப்பதற்குமுன் சுலபமாய் கீழே விழாது. பழுத்துவிட்டதேயானால், கையால் தொட்டவுடன் கீழே விழும். அது கிளையிலிருந்து, அல்லது காம்பிலிருந்து வேறு இடமாகிய பூமியில் வந்து விழுகிறது. இது மோக்ஷத்தையடைந்தவன் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குப் போவதற்குச் சமானம். சுவர்க்கம், வைகுண்டம், கைலாசம் முதலிய இடங்களுக்குப் போவது மாம்பழம் பழுத்து காம்பிலிருந்து விடுபட்டு கீழே விழுவது போன்றது.

ஆனால் ஞானியொருவன் ப்ரும்மஞானத்தை யடைந்து மோக்ஷத்தை யடைவதைப்பற்றிச் சொல்லும்பொழுது उर्वारुकमिव बन्धनात् । என்று ச்ருதி சொல்லுகிறது. பழங்களுக்குள் மிகவும் மிருதுவானதும் அதிபக்வமடைவதும் வெள்ளேரிப்பழம். அது கொடியில் காய்த்துப் பழுக்கும். அது நன்றாய் பழுத்தபிறகு ஒரு காற்று அடித்தால் கொடி தானாக விலகிவிடும். வெள்ளேரிப் பழம் இருந்த இடத்திலேயே இருக்கும் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு போவதில்லை. கொடியாகிய பந்தத்திலிருந்து விடுபட்டு இருந்த இடத்திலேயே இருக்கிறது. அதுபோல ப்ரம்மஞானி மோக்ஷத்தை அடையும்பொழுது சம்சாரமாகிய பந்தம் அவனை விட்டு தானாக விலகிவிடும்.

நமது பரமாச்சாரியாள் இந்த மடத்தைஸ்தாபித்தது எதற்கு என்றால் ஜனங்களுக்கு இந்த தத்வங்களைச்சொல்லி தங்கள் ஜன்மத்தை சபலமாக்கும்படி ப்ரயத்னம் பண்ணும்படி செய்வதற்காக ஸ்ரீ பகவத்பாதாள் ஆஸேது ஹிமாசலம் சஞ்சாரம் பண்ணி முடிவில் ஸர்வக்ஞபீடாரோஹணம் பண்ணியபொழுது அவர்களுடைய சிஷ்யர்கள் ஆச்சாரியாளின் உபதேசங்களை சுருக்கமாய் சொல்லவேண்டுமென்று ப்ரார்த்தித்தபொழுது ஸோபான பஞ்சகம் கிரந்தத்தை 5 ச்லோகங்களாய் பண்ணினார்கள். ஸோபானம் என்றால் படிக்கட்டு என்று அர்த்தம். மோக்ஷநிலையை அடைய ஏற்பட்ட படிக்கட்டுகள். அதில் ஸ்ரீ பகவத்பாதாள் वेदोनित्यमधीयतां, शान्त्यादिः परिचीयतां, सद्विद्वानुपसृप्यतां, प्रतिदिनं तत्पादुके सेव्यतां, स्वाद्वन्नं नतुयाच्यतां, प्रारब्धंत्विह भुज्यतां, अथ परब्रह्मात्मनास्थियताम्, என்று இந்த மாதிரியான பல படிகளை உபதேசித்திருக்கிறார்கள். இவைகளில் ஒன்று सद्विद्वानुपसृप्यताम् என்பது. सद्विद्वान् என்றதால், உள்ளதை அறிந்தவன். எது ஸத் என்பதோ, அதை அறிந்தவன் सद्विद्वान्. அப்பேர்பட்ட குருவையடைந்து प्रतिदिनं तत्पादुके सेव्यतां என்றபடி அவருடைய பாதுகாசேவையை பண்ணி அந்தேவாஸியாயிருந்து ஸத் வித்யையை க்ரஹித்து மோக்ஷநிலையை அடையவேண்டும். இதற்கு மற்றபடிகள் चित्तनिरोधं முதலியவை. स्वाद्वन्नं नतुयाच्यतां நாம் சாப்பிடவேண்டியது வயிற்றிற்கே யொழிய நாக்குக்கல்ல.

'க்ஷுத்' அதாவது பசி என்கிற வியாதிக்காக "பிக்ஷௌஷதம் ஸேவ்யதாம்" பிக்ஷை என்னும் மருந்தை சாப்பிடவேண்டும். அதாவது பசிதீருவதற்கு வேண்டியமட்டில்தான் சாப்பிடவேண்டும். பணக்காரனாயிருக்கிறவன் கூட, வியாதிக்கு மருந்து சாப்பிடும்போது, வகுவாக வேண்டிய அளவுதான் சாப்பிடுவான். ஒரு அணா செலவில் சொஸ்தமாகக்கூடிய வியாதிக்கு, ஐந்து ரூபாய் கொடுத்து நிறைய. நிறைய சாப்பிடவேண்டுமென்று சாப்பிடமாட்டான். அதேமாதிரி பசி தீரவேண்டிய அளவுக்கு சாப்பிடவேண்டுமென்று தாத்பர்யம்.

இம்மாதிரியெல்லாம் மனதை வசப்படுத்தி ஏகாக்ரசித்தத்துடன் இருந்தால், शान्तं शिवं अद्वैतं என்ற आनन्द நிலையையடைந்து उर्वारुकमिव बन्धनात् ஸம்ஸாரமாகிய பந்தத்திலிருந்து விடுபட்டு முக்தர்களாகலாம். இதன் அவசியத்தையும் இதற்கு வேண்டிய மார்க்கங்களையும் ஜனங்களுக்கு எடுத்துச்சொல்லி அவர்களை ஸன்மார்க்கத்தில் திருப்பி நல்லகதியடையச் செய்யவே நமக்கு ஆச்சாரியாள் இந்தமாதிரி மடத்தை ஏற்படுத்தினார்கள்.

ஸ்ரீ காமாக்ஷியம்பாளின் விக்ரம வருஷத்திய மஹோத்ஸவம்

ஸ்ரீ மஹாமேரு சிகரத்தில் ஸாக்ஷாத் ஸ்ரீ புரவாஸினியாய்பஞ்சப்ருஹ்மாகார மஞ்சத்தில் ஸ்ரீ காமேச்வராங்க பரியங்கத்தில் வீற்றிருப்பவளாய் பிரபஞ்ச ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களைச் செய்கின்ற பிரம்ம விஷ்ணு ருத்ராதிகளுக்கு அவ்வித சக்தியை கொடுத்து ஆக்ஞை செய்யும் பஞ்சகிருத்திய பராயணியாயுமுள்ள பராசக்தியான ஸ்ரீலலிதாமஹாத்ரிபுரஸுந்தரி தேவியானவள் இப்புவியிலுள்ள ஆன்மகோடிகளுக்கு தர்மாதிசகலபுருஷார்த்தங்களையும் அனுக்ரஹிக்குமாறு அகில பூமண்டலாலங்காரமாயும் ஸ்ரீ ஹரி ஹராதி ஸமஸ்த தேவதைகளின் சான்னித்யம் பெற்றதும், த்ரயஸ்திரும்சத் கோடி தேவதா சேவிதமாயும் இப்பிரபஞ்சத்திலுள்ள ஸமஸ்த புண்ணிய க்ஷேத்திரங்களுக்கும் பிரதானமாயுமிருக்கின்ற ஸ்ரீ காஞ்சீ க்ஷேத்திரத்தில் ருத்ரகோடியில் ஸ்ரீ ஏகாம்பரநாதரென்று புகழப்பட்டு வருகின்ற ஸ்ரீ மஹாகாமேச்வரரூபிணியாயும், ஸ்ரீ புண்ணியகோடியில் ஸ்ரீ வரதராஜரென்று ஸ்துதிக்கப்பட்டுவருகிற ஸ்ரீமஹாவிஷ்ணு ஸ்வரூபிணியாயும், "ஸ்ரீகாமகோடியில்" பிலாகாசரூபிணியாயும், கன்னிகாரூபிணியாயும் விசேஷமாய் தன்னுடைய சமஸ்த ஆவரண சக்திகளுடன் யந்திரரூபிணியாயும் விளங்கா நிற்க,

மார்க்கண்டேய ஸம்ஹிதையில் சொல்லியிருக்கிறபடி ஜகத்குரு ஸ்ரீமத் சங்கர பகவத்பாதாசார்யரவர்களால் உத்தாரணம் செய்யப்பட்ட ஸ்ரீ காமகோடி ஸ்ரீ சக்ரத்தில் ஸான்னித்யமடைந்து விளங்கும் ஸ்ரீ காமாக்ஷி தேவிக்கு நாளது விக்ரமஹு மாசிமீ 19 உ க்கு 1941ஹு மார்ச்சுமீ 2௨ பானுவாரம் முதல் விசேஷமஹோத்ஸவம் வேதபாராயணாதி ஸந்தர்ப்பணை வைபவங்களோடு உபக்ரமித்து துவஜாரோஹணம் முதல் 11 நாள் உத்ஸவங்கள் நடந்தேறியபின்,

மார்க்கண்டேய புராணத்தில் ஸ்ரீ காமாக்ஷி விலாஸத்தில் சொல்லப்பட்டிருக்கிறபடி ஸ்ரீ ஜகன்மாதாவினால் தேவர்களுக்கு தந்தருளப்பட்ட திவ்ய ஸேவையாகிய விசுவரூப தரிசனமும் அன்றுமுதல் வழக்கம்போல் விடாயாற்றி உத்சவங்களும் நடக்கிறபடியால் அக்காலங்களில் ஆஸ்திகர்கள் அனைவரும் வந்திருந்து, ஸ்ரீ காமாக்ஷி திவ்யமங்கள மூர்த்தியை தரிசித்து ஐஹிகா முஷ்மிக பல புருஷார்த்தங்களையும் ஜன்மஸாபல்யத்தையும அடையுமாறு கோருகின்றனம்.

கே. குப்புஸாமி அய்யர்; ஸ்ரீமடம் ஏஜண்ட்

கும்ப பால்குன ஸங்க்ராந்தி விரத கல்பம்.

நல்லிச்சேரி
ஜம்புநாத சாஸ்திரிகளால்
வெளியிடப்பட்டது.

விலை அணா 1.

கிடைக்குமிடம் :—

ஸ்ரீ ஜனார்த்தன பிரிண்டிங் ஒர்க்ஸ்,
லிமிடெட்.
டவுன் ஹைஸ்கூல் ரோடு.
கும்பகோணம்.

இக்ஷ்வாகு வம்சத்து அரசர்களை பற்றிய சரித்திர சம்பந்தமான தஸ்தவேஜிகள்.

1936-37 வருஷத்திய கல்வெட்டுகள் பட்டய சாஸனங்களை பற்றிய ரிபோர்டில் சென்னை மாகாணத்தில் 283 கிராமங்களிலிருந்தும், பம்பாய் மாகாணம் கர்நாடக பிரதேசங்களில் 153 கிராமங்களிலிருந்தும் சேகரிக்கலான 471 கல்வெட்டுகள், 13 தாமரபட்டய சாஸனங்கள், மற்றும் கவனத்திற்குறிய பல விபரங்கள் விவரிக்கப்பட்டிருக்கிறது.

அந்த ரிப்போர்டில் ராமனாதபுரம் ஜில்லா பிள்ளையார்பட்டி குன்னக்குடி இவைகளில் உள்ள பாறைகளில் உள்பாகத்தில் செதுக்கப்பட்டவை உள்பட ஏறகுறைய 100 புகைப்படங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அவைகளில் சரித்திர காலத்திற்கு முற்பட்ட ஸ்தலங்களின் ஞாபக சின்னங்களும், மட்பாண்டங்களும் கிடைத்து, பரிசீலிக்கப் பட்டிருக்கின்றன.

அதில் கி. பி. மூன்றுவது நூற்றாண்டு சம்பந்தமான நான்கு வெட்டுகளைபற்றி சொல்லப்படுகிறது. அவை குண்டூர் ஜில்லாவில் புத்தர்களின் புராதன ஸ்தலங்களிலிருந்து கிடைத்தவை. அவைகளில் இரண்டு இக்ஷ்வாகு வம்சத்து வீரப்ரசி தாத்தர், எகுவுல சாந்த மூலர் இந்த மன்னர்களை பற்றியவை அவர்கள் கிருஷ்ணாநதி டெல்டா பிரதேசத்தில் அரசாண்டு வந்தார்கள். அவர்கள் நாகார்ஜுனி கொண்டாவில் காணப்படும் பௌத்த சம்பந்தமான சின்னங்களுக்கு காரண பூதர்கள்.

ஸ்ரீரங்கத்தில் காணப்படும் இரண்டு வெட்டுகள் பொதுவாக கவனத்திற்கு உரித்தானவை. கி. பி. 13வது நூற்றாண்டில் ஸ்ரீரங்கநாதர் கோவிலுக்கு சம்பந்தப்பட்ட சிகித்ஸை சாலையை ஏற்படுத்திய ஹொய்ஸலா சேனாதிபதியை குறிப்பிடுகிறது ஒரு வெட்டு. அவைகளில் மற்றொன்று ஹிந்து வைத்தியம் சம்பந்தமுள்ள தன்வந்திரியின் உருவத்தை ஸ்தாபனம் செய்த விபரங்களை சொல்லுகிறது.

Indian Information
Vol. 8. No. 67

பசுபந்தயாகம்

தண்டாங்கோரை

அனேக யாகங்களால் ஈச்வரனை ஆராதித்தவர்களான தண்டாங்கோரை பிரம்மஸ்ரீ ரகுநாத வாஜபேயயாஜீ என்கிற அப்பாத்துரை தீக்ஷிதர் நாளது விக்ரமஹு தை-மாஸம் 28-29௨ களில் பிரதி வருஷம் செய்ய வேண்டிய 40வது நிரூடபசுபந்தயாகத்தை திருக்கருகாவூர், பிரம்மஸ்ரீ சுப்பய்யர் அவர்கள், அட்வகேட் ஸ்ரீ டி. எம். கிருஷ்ணஸாமி அய்யரவர்கள் போன்ற ஆஸ்திக பிரபுக்களின் உதவியால் வெகு விமர்சையாக நடத்தினார்கள். அனேக ஆஹிதாக்னிகளும் வேறு ஆஸ்திகர்களும் வந்திருந்தார்கள். பிராம்மண போஜனமும் நடந்தது.

ந. நி

காலமானார்

கும்பகோணம் டவுன் ஸாது சேஷய்யா ஓரியண்டல் லைப்ரரியில் சுமார் 30 வருஷங்களாக லைபெரரியனாக இருந்துவந்த ராயசந்திர சாஸ்திரிகள் திடீரென 29-1-41 இல் காலம் சென்றார். அவர் சாந்தம் பொறுமை முதலிய நற்குணமுடையவர் லைபெரரியை வெகு ஜாக்கிரதையுடனும் சிரத்தையுடனும் இதுவரை அவர் பார்த்து வந்தார் அவரது பிரிவால் குடும்பத்தாருக்கு ஏற்பட்ட வருத்தத்துடன் பொதுஜனங்களின் மனதை புண்படுத்தக்கூடியதாக இருக்கிறது. இனி வருபவர்களையும் அவரைப்போல் இருப்பதற்கு ஈசனை பிரார்த்திப்போம்.

ஓ. கி.

திருவாதி ஸமபந்தி போஜன அநீதி

(3-ம் பக்க தொடர்ச்சி)

ஏற்படுத்துவதென்று தாற்காலீகமாக முடிவு செய்யப்பட்டிருக்கிறது:—

1. ஸ்ரீ V. V. சீனிவாசய்யங்கார், சென்னை.
2. ,, K. பாலசுப்பிரமணிய அய்யர், சென்னை.
3. ,, திவான்பகதூர் கே எஸ் ராமசாமி சாஸ்திரிகள்
4. ,, ராவ்சாகேப் என் நடேசய்யர், மதுரை.
5. ,, ஏ வீ கோபாலாச்சாரியார், திருச்சி.
6. ,, டி. கோதண்டராம அய்யங்கார் தஞ்சை.
7. ,, எம் கே வைத்தினாத அய்யர் கும்பகோணம்.
8. ,, டி. எல் சுப்பய்யர் திருக்கருகாவூர்.
9. ,, சுப்பிரமணிய அய்யர் குன்னம்
10. ,, மஹாமஹோபாத்தியாயர் எஸ் குப்புசாமி சாஸ்திரிகள்.
11. ,, ஆர் முத்துசாமிய்யர் (பென்ஷன் தார்) கணபதி அக்கிரஹாரம்.
12. ,, வி சுப்பிரமணிய அய்யர் திருவாதி.

அவசியமானால் ஸ்கீம் வியாஜ்யம்தொடருவதுள்பட அவசியமான எல்லா நடவடிக்கைகளையும் உடனே எடுத்துக்கொள்ளவும் தர்மத்திற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் நிதியின் விநியோகம் மாணவர்களின் போஜனம் இவைகள் சம்பந்தமாய் ராஜவம்சத்திய தர்மஸ்தாபகர்களின் அபிப்பிராயங்கள் கௌரவிக்கப்பட்டு அனுசரிக்கப்பட வேண்டிய வழியைத்தேடவும் மேற்கண்ட சபை பொறுப்பு ஏற்றுக்கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது சம்பந்தமாக தஞ்சாவூர் டிஸ்டிரிக்ட் போர்ட்டார் கட்டாய சமபந்தி போஜனத்தைக் கொணர்ந்தும் அடுத்த வருஷம் முதல் சாஹித்ய சிரோமணி படிப்பையும் நிறுத்தியும் செய்திருக்கும் தீர்மானங்களை அதிசீக்கிரத்தில் ரத்து செய்வதற்கான நடவடிக்கைகளைப்பற்றி ஊக்கமாக மேற்படி சபையார் உடனே கவனிக்கவேண்டியதாய் இருக்கும்.

ஷை சபைக்கு காரியதரிசியாக இருக்கும்படி கணபதி அக்கிரகாரம் ஸ்ரீமான் R. முத்துசாமி அய்யர் அவர்களையும் அதற்கு தலைவராக இருக்கும்படி சென்னை ஸ்ரீமான் V. V. சீனிவாசய்யங்கார் அவர்களையும் கேட்டுக்கொள்ள வேண்டுமென்றும் தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது.

மேலே ஆகவேண்டிய காரியங்களுக்கு வேண்டிய பொருளை சேகரம் செய்யும்படி ஸ்ரீமான் V. சுப்பிரமனிய அய்யர் அவர்களையும் இது சம்பந்தமான கடிதப்போக்கு வரத்துக்களை கவனித்துக் கொள்ளும்படி ஸ்ரீமான் R. முத்துசாமி அய்யர் அவர்களையும் கேட்டுக்கொண்டதின் பேரில் அவர்களும் அதற்கு உடன் பட்டிருக்கிறார்கள்.

சேஷாராம சாஸ்திரி

1941 வருஷத்தில் ஜனத்தொகை கணக்கு எடுப்பது.

ஸர்க்கார் அறிக்கை. ஒத்துழைக்க வேண்டுகோள்.

நாளது பிப்ரவரி மாதத்தில் இந்தியா முழுவதிலும் ஜனத்தொகை கணக்கு எடுக்கப்படும். இது ஒன்றும் புதிதல்ல; தற்போதைய யுத்தம் காரணமாகச் செய்யப்படும் பிரத்தியேகமான ஒரு ஏற்பாடுமல்ல. கடந்த 70 வருஷகாலமாகவே கிரமமாய்ப் பத்து வருஷத்துக்கொருமுறை ஜனத்தொகைக் கணக்கு எடுக்கப்பட்டு வந்திருக்கிறது.

ஜனத்தொகைக் கணக்கெடுக்கையில், நாங்கள் ஜனங்களை எண்ணுவதோடுமட்டும் நின்றுவிடுவதில்லை. ஒவ்வொருவரையும் அவருடைய வயது, சமூகம், மதம், பாஷை, தொழில், கல்வித்தேர்ச்சி முதலிய முக்கியமான விவரங்களுக்குச் சம்பந்தப்பட்ட கேள்விகளை வரிசையாகக் கேட்கிறோம். அவர் சொல்லும் பதில்களை இந்த மாகாணத்திலுள்ள ஒவ்வொரு பிரதேசத்துக்காகவும் ஒன்று சேர்க்கிறோம். இந்த நாட்டின் பரிபாலன விஷயமாய் ஏற்பாடு செய்யும் பொறுப்புடையவர்களுக்கு ஷை தகவல்கள் அவசியமாய் வேண்டியிருக்கின்றன. எங்கே ரஸ்தா போடுவது எங்கே குளம் வெட்டுவது ஆஸ்பத்திரியையோ பாடசாலையையோ எங்கே கட்டுவது ஜல சர்பராவுக்கும் பஞ்ச நிவாரணத்துக்கும் கொள்ளை நோய்களைத் தடுப்பதற்கும் என்ன ஏற்பாடு செய்வது முதலியவைகளைப் போன்ற விஷயங்களை கவர்ன்மெண்டார் நிச்சயிப்பதற்கு முன், ஒவ்வொரு பிரதேசத்திலும் எத்தனை பேர் இருக்கிறார்கள், அவர்கள் எப்படிப்பட்டவர்கள், அவர்கள் என்ன வேலை செய்கிறார்கள் முதலியவைகளை கவர்ன்மெண்டார் தெளிவாய்த் தெரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. இந்தத் தகவல்கள் கவர்ன்மெண்டாருக்கு மட்டும் வேண்டியிருக்கின்றனவென்று எண்ணவேண்டாம். சர்வகலாசாலைகளுக்கும் படிப்பாளிகளுக்கும் ஜனங்களுடைய க்ஷேமத்திலும் முன்னேற்றத்திலும் அக்கறை கொண்டுள்ள சகலவகையான நபர்களுக்கும் ஸ்தாபனங்களுக்குங்கூட ஷை தகவல்கள் வேண்டியிருக்கின்றன.

ஷை கேள்விகளுக்குக் கொடுக்கப்படும் பதில்களை அச்சிட்ட காகிதச் சீட்டுகளில் எழுதிக்கொள்வதற்குக் 'கணக்கெடுப்பது' என்று பெயர். அந்த வேலையைச் செய்யும் உத்தியோகஸ்தர்களுக்குக் 'கணக்கெடுப்பவர்கள்' என்று பெயர். ஆனால் இந்தக் கேள்விகளுக்கு உண்மையான பதில்களை ஜனங்கள் இஷ்டப்பட்டுச் சொன்னாலொழிய, ஷை உத்தியோகஸ்தர்கள் இவைகளைக் கேட்பதனால் எவ்விதப் பிரயோசனமும் ஏற்படாது; ஏனென்றால், எங்களுக்கு வேண்டிய தகவலை ஜனங்களேதான் தெரிவிக்கமுடியும். அது உண்மையாயிருந்தாலொழிய, அதைச் சேகரிப்பதனால் ஒருவித நன்மையும் ஏற்படாதல்லவா? ஜனத்தொகை கணக்கெடுப்பது சம்பந்தமான சகல நடவடிக்கைகளும் ஜனத்தொகைக் கணக்குச் சட்டப்படி சட்ட சம்மதமானவையாகும். அந்தச் சட்டத்தின்படி ஒவ்வோரும் ஜனத்தொகைக்கணக்கு எடுப்பதற்காகக் கேட்கப்படும் கேள்விகளுக்கு உண்மையாய்ப் பதில் சொல்லக் கடமைப்பட்டவராவார்; அப்படிச் சொல்லாவிட்டால், அவர் தண்டனைக்குள்ளாவார், ஆனால், தண்டனை விதிக்கப்படுமென்று பயமுறுத்தி ஷை தகவலை சேகரிக்க நாங்கள் சிறிதேனும் விரும்பவில்லை. ஒரு தேசத்தின் தலைவர்களுக்கு இதுபோன்றதகவல்கிடைத்தான் அந்த தேசஜனங்கள் முன்னேற்றத்துக்காகச் சிறந்த ஏற்பாடு செய்யமுடியுமென்பதையும், அந்தத் தகவல் சேகரிக்கப்படுவதனால் தாங்கள் இந்த தேசத்தின் ஜனங்கள் என்னும் முறைமையில் தங்களுக்குத்தான் உண்மையில்பெருத்த நன்மை விளையுமென்பதையும் எல்லாரும் தெரிந்துகொள்ளவேண்டுமென்பதே எங்களுடைய விருப்பமாகும். ஆகையால், பொதுஜனங்களைக் கேட்கப்படும் கேள்விகளுக்கு அவர்கள் ஒன்றையும் ஒளிக்காமலும் உண்மையாகவும் பதில் சொல்லி சம்பூர்ணமாய் ஒத்துழைக்கவேண்டுமென்று நாங்கள் அவர்களை முதன்முதல் கேட்டுக்கொள்ளுகிறோம்.

மேலும், இந்தக் கேள்விகளுக்கு பதில் சொல்வதில் எவ்வித அபாயமுமுல்லை. ஜனத்தொகைக் கணக்குச் சட்டப்படி, கவர்ன்மெண்டாரால் அனுமதிக்கப்பட்டிருக்கும் கேள்விகளை மாத்திரமே கணக்கெடுப்பவர் கேட்கவேண்டும். அவர் எவரிடமிருந்தாவது வேறு எந்தத் தகவலையாகிலும் கேட்டுத் தெரிந்துகொள்ள முயற்சித்தால் அவர் தண்டிக்கப்படுவார். அவர் எழுதிக்கொள்ளும் பதில்கள் தனிப்பட்ட வேறு எந்த நபருக்கும் காட்டப்படமாட்டா. அவைகளைப் பார்ப்பதற்கு எவருக்குமே பாத்திபதையில்லை. எந்த நீதிமன்றத்திலாகிலும் (கோர்ட்டிலாகிலும்) அவைகளைக் சாட்சியமாக உபயோகப்படுத்தவும் முடியாது. மேலும், சொத்துரிமை போன்ற எவ்வித உரிமைகளும் அவைகளால் பாதிக்கப்படமாட்டா. மெய்யாகவே ஜனத்தொகைக் கணக்கெடுக்கும் அதிகாரிகள் ஜனங்களின் பெயர்களைப்பற்றி கவலைப்படுவதேயில்லை. கணக்கெடுப்பவர் செய்த வேலையைச் சரிபார்ப்பதற்காகவும், எவரும் இரண்டு தடவை கணக்கெடுக்கப்படாதபடிப் பார்த்துக்கொள்வதற்காகவும் மாத்திரமே பெயர்கள் பதியப்படுகின்றன. ராமுண்ணியோ அச்சுதனோ வேறு எவரோ கலியாணமானவரென்பதைப்பற்றியும் அவருக்கு 40 வயது என்பதைப்பற்றியும் அவர் விவசாயத்தினால் ஜீவிக்கிறாரென்பதைப்பற்றியும்ஜனத்தொகை கணக்கெடுக்கும் அதிகாரிகளுக்கு அக்கறையில்லை. அவர்களுக்கு வேண்டியதெல்லாம் எதுவென்றால், கலியாணமானவர்களும் 40 வயது ஆனவர்களும் விவசாயத்தினால் ஜீவிப்பவர்களுமான மனிதர்கள் எத்தனை பேர் ஒவ்வோரிடத்திலும் இருக்கிறார்களென்று தெரிந்துகொள்வதேயாகும். ஆகவே, கணக்கெடுக்கும் வேலை முடிந்தவுடனே, ஜனங்களுடைய பெயர்களைப்பற்றிய சகல விஷயங்களையும் நாங்கள் மறந்துவிடுகிறோம்; அவர்களில் ஒவ்வொருவரையும் ஜனத்தொகையில் சேர்க்கப்பட்டிருப்பவராக மாத்திரமே கருதுகிறோம். மேலும், யாதொரு வரிவிதிப்பதற்காகவாவது பணம் வசூலிப்பதற்காகவாவது ஜனத்தொகை கணக்கு எடுக்கப்படவில்லை என்பதை முடிவாகச் சொல்ல விரும்புகிறோம்.

நாளது பெப்ரவரி மாதத்தில் எப்போதாகிலும் கணக்கெடுப்பவர் ஜனங்கள் வசிக்கும் ஒவ்வொரு வீட்டுக்கும் வந்து, அங்கே வசிப்பதாகத் தாம் காண்பவர்களைக் கணக்கெடுப்பார். ஜனத்தொகைக் கணக்கெடுப்பதற்காகக் கேட்கப்படும் கேள்விகளுக்குரிய பதில்கள் ஷை வீட்டிலுள்ள ஒவ்வொரு புருஷன், ஸ்திரீ, குழந்தையின் விஷயத்திலும் பதியப்படவேண்டும். ஆனால் சாத்தியமானவரையில் புருஷர்களைத்தான் வாஸ்தவத்தில் ஷை கேள்விகள் கேட்கப்படும். வசிப்பதற்கு வீடில்லாத ஏழைகளும் நாடோடிகளும் பெப்ரவரி௴ 28௳ இரவில் எந்த இடங்களிலே தூங்கிக்கொண்டிருக்கிறார்களோ அந்த இடங்களில் கணக்கெடுக்கப்படுவார்கள். ஆனால் மொத்த ஜனங்களையும் ஏககாலத்தில் ஏதாவது ஒரேவொரு இரவிலோ பகலிலோ கணக்கெடுக்க எவ்வித முயற்சியும் செய்யப்போவதில்லை. ஆகையால், ஒருவர் ஒரு தடவை கணக்கெடுப்பவர் இரண்டாமுறை தம்மைக்கணக்கெடுக்கவிடக்கூடாது. இது மிக முக்கியமான விஷயம். கணக்கெடுப்பவர்கள் எவரையாவது கணக்கெடுக்கும்போது, தாம் கணக்கெடுக்கப்பட்டிருப்பதாக அவர் தெரிந்துகொள்ளும்படிச் செய்ய வேண்டுமென்றும், அவர் பிரஸ்தாப காலத்தில் அங்கே இராவிட்டால் ஷை வீட்டைச் சேர்ந்த பொறுப்புள்ள ஒருவர் அவர் கணக்கெடுப்பட்டிருப்பதாக அவருக்குக் கூடிய சீக்கிரத்தில்சொல்லும்படிச்செய்யவேண்டுமென்றும் கணக்கெடுப்பவர்களெல்லாருக்கும் உத்தரவிடப்பட்டிருக்கிறது. மேலும் கணக்கெடுப்பவர்கள் எவரையாவது கணக்கெடுப்பதற்குமுன், வேறெங்கேயாகிலும் அவர் ஏற்கனவே கணக்கெடுக்கப்பட்டிருக்கிறாரவென்று அவரைக் கேட்கத் தவறக்கூடாதென்றும் அவர்களுக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, இரண்டாவதாக நாங்கள் பொதுஜனங்களைக் கேட்டுக்கொள்வது என்னவென்றால்:—'கணக்கெடுப்பது' என்றால் ஜனத்தொகைக் கணக்கெடுப்பதற்குரிய கேள்விகளுக்கு அவர்கள் சொல்லும் பதில்களை அச்சிட்ட காகிதச் சீட்டு களில் பதிவு செய்வது என்பதை அவர்கள் தெரிந்துகொள்ளவேண்டும்; தாங்கள் ஜாக்கிரதையாய்த் தெரிந்துவைத்துக்கொள்ளவேண்டும்; தாங்கள் ஒருமுறை கணக்கெடுக்கப்பட்டிருப்பதாகத் தங்களுக்குத் தெரிந்திருந்தால், வேறொருவரும் தங்களை மறுபடியும் கணக்கெடுக்காதபடி ஜாக்கிரதையாயிருக்கவேண்டும்.

ஆனால், ஒருவரை இரண்டு தடவை கணக்கெடுக்கக்கூடாதென்பது எவ்வளவு முக்கியமானதோ அவ்வளவு முக்கியமானது எவரையும் கணக்கெடுக்காமல் விட்டுவிடக்கூடாதென்பதும். ஆகவே, ஒவ்வொரு வீட்டின் தலைவரும் அந்த வீட்டில் வசிக்கும் சகல ஜனங்களைப்பற்றியும், அங்கே சாதாரணமாய் வசிக்கும் எவர்களாவது சிறிதுகாலம் அங்கே இராமலிருந்து மார்ச்சு௴ 1௳க்குள் அந்த வீட்டுக்குத் திரும்பி வந்துவிடுவார்களென்று எதிர்பார்க்கப்பட்டால் அவர்களைப்பற்றியுங்கூட கணக்கெடுப்பவரிடம் உண்மையாய்ச் சொல்லக் கடமைப்பட்டவராவார். பெப்ரவரி௴ கடைசி தினத்துக்குள் தாம் இன்னும் கணக்கெடுக்கப்படவில்லையென்று எவருக்காகிலும் தெரியவந்தால், அவர் அதைப்பற்றித் தமது கிராம உத்தியோகஸ்தர்களிடமாவது மியுனிஸிபல் உத்தியோகஸ்தர்களிடமாவது உடனே தெரிவிக்கவேண்டும். இந்த மூன்றாவது வழியிலும் பொதுஜனங்கள் எங்களுக்கு உதவி செய்யுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

வீடுகளின்மேல் வர்ணத்தால் எழுதப்பட்டிருக்கின்றன; எந்த வீட்டையும் விட்டுவிடாதபடிப் பார்த்துக்கொள்வதற்காக நாங்கள் இந்த நம்பர்களைத்தான் நம்பியிருக்கிறோம்.

சுருங்கச் சொல்லுமிடத்து, தனிப்பட்ட ஒவ்வொரு புருஷனையும் ஸ்திரீயையும் குழந்தையையும் பல தடவையல்லாமல் ஒரேவொரு தடவை கணக்கெடுப்பதும், தனிப்

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க.)

மதுரை நகர் ஆஸ்திக ஹிந்து மாதர்கள சங்கம்

சென்ற 4—2—41ம்-உ செவ்வாய்கிழமை மாலை 5-மணிக்கு ஷை சங்ககூட்டம் ஒன்று ஸ்ரீ ஸனாதனதர்ம வித்யாலய மண்டபத்தில் ஸ்ரீமதி யோகாம்பாள் நடேசய்யர் அவர்கள் தலைமையின் கீழ் நடைபெற்றது. அப்பொழுது கும்பகோணத்திலிருந்து மதுரைக்கு விஜயம் செய்திருந்த ஆஸ்திக ஸ்திரீ ரத்னம் ஸ்ரீமதி பவானி அம்மாள் அநேக அரிய பெரிய விஷயங்களை உபந்யாசித்தார்கள். அதாவது ஆஸ்திக ஹிந்து மாதர்கள் சங்கத்தின் நோக்கங்களையும் அதன் அவசியத்தையும் தற்காலத்தில் வேண்டியதையும் ஆஸ்திக மதம் ஓங்கி வளரவும் நாஸ்திகமதம் பூண்டற்று ஒழிவதற்கும், திருவயாற்றில் செய்துள்ள மகா பாபகரமான தீர்மானிக்கப்பட்டுள்ள சமபங்க்திபோஜனத்தை கண்டித்தும் அந்ததீர்மானத்தை அமுலிலிருந்து எடுத்துவிட கவர்மெண்டார் உதவிசெய்யவேணும் என்றும் ஆர்யதர்மம் பேப்பரின் அவசியத்தை பற்றியும் வெகு தெளிவாக எடுத்துரைத்தாள். சுமார் 1000 ஸ்திரீ ரத்னங்கள் குழுமியிருந்தார்கள். சுமார் 7-30-மணிக்கு கூட்டம் வந்தனோபசாரத்துடன் இனிதேறியது.

அதே போல் 5—2—41ம்-உ யும் ஷை சங்க கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் ஸ்ரீமதிகள் A. S. மீனாக்ஷி அம்மாள் சேஷலெக்ஷிமி அம்மாள் M குப்பம்மாள் இன்னும் அநேக ஸ்திரீ ரத்னங்கள் தற்காலிக விஷயம் நடந்தேறி வருகிற அநேக கக்ஷிகளின் விபரீத போக்குகளை கண்டித்துப் பேசினார்கள். கடைசியாக ஸ்ரீமதி பவானி அம்மாளும் தர்மம் தழைத்து ஓங்க ஆஸ்திக ஸ்திரீகள் என்னசெய்யவேண்டும் என்பதை பற்றி பேசினார்கள். அன்றய தினமும் ஏராளமாக ஸ்திரீகள் கூடியிருந்தார்கள். கூட்டம் நடக்கும் பொழுது ஸ்ரீ ஜகத்குரு பகவத்பாதாள் அவர்களுடைய படத்தை வைத்து தீபாராதனைகள் செய்து மங்களகரமாக கூட்டம் நிறைவேறியது.

சுந்தரராஜன்.

மதுரை அகில இந்திய வர்ணாச்ரம சுயராஜ்ய சங்கம்.

கல்கத்தாவில் நடைபெறும் அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கத்தின் 1940ம் வருஷத்திய மஹா ஸம்மேளனத்தின் தலைமை பதவிக்கு எல்லா ராஜதானிகளாலும் தெரிந்தெடுக்கப்பட்ட அத்யக்ஷகராகிய மதுரை ஸ்ரீமான் ராவ்சாகிப் N. நடேசய்யர் அவர்கள் 3—2—41ம் தேதி திங்கள்கிழமை மாலை திருவனந்தபுரம் எக்ஸ்ப்ரஸில் கல்கத்தாவுக்கு பயணமாகியபோது மதுரை ரயில்வேஸ்டேஷனில் ஏராளமான மதுரை நகர் அ. இ. வ. சு. சங்க சங்கத்தினர்களும் இன்னும் பல பெரியார்களும் கூடி, டவுன் சங்கத்திற்காக அதன் பிரஸிடெண்ட் ஸ்ரீமான் N. R. கிருஷ்ணசாமி அய்யங்காரவர்களும் ஆஸ்திக ஹிந்து மாதர்கள் சங்கத்திற்காக ஸ்ரீமான் K. கல்யாணசுந்தரமய்யர் அவர்களும் தார்மிக யுவக் சங்கத்திற்காக L. ராதாகிருஷ்ணனும் இன்னும் பலரும் ஸ்ரீமான் அய்யரவர்களுக்கு மாலையிட்டு வழி அனுப்பிவைத்தார்கள் ஸ்ரீமான் அய்யரவர்கள் அனுஷ்டானத்திற்காக மார்கத்தில் 2 ஊர்களில் தங்கி 7-2-41 கல்கத்தா போய் சேர்ந்தார்கள்.

S. சுந்தரராஜன்.

மதுரை டவுன்

அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கம்

சென்ற 8உ சனிக்கிழமை இரவு சுமார் 8 மணிக்கு ஷை சங்க ஆதரவில் மதுரை ஸ்ரீ ஸனாதன தர்ம வித்யாலய மண்டபத்தில் ஓர் மாபெரும் கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் மதுரை டவுன் பிரசிடெண்ட் ஸ்ரீமான் என். ஆர். கிருஷ்ணசாமி அய்யங்கார்ஸ்வாமிகள் இங்கு இவ்வளவு பெரிய கூட்டம் கூட்டப்பட்டதின் அவசியத்தையும் அதேபோல் சென்னைராஜதானியிலுள்ள கிராம சபைகளில் எல்லாவற்றிலும் கூட்டம் கூட ஏற்பாடு செய்திருப்பதின் அவசயத்தைப்பற்றியும் மிக தெளிவாக விளக்கிப் பேசினார்கள். பிறகு மதுரை டவுன் சங்கம் கல்கத்தாவில் நடைபெறுகிற மகாநாட்டுத் தலைவருக்கு தந்தி கொடுத்திருப்பதையும் அதேபோல் ஆஸ்திக மாதர்கள் சங்கம், தார்மிக யுவக் சங்கம் கொடுத்திருப்பதையும் படித்து காண்பித்தார்.

பிறகு ஸ்ரீமான் அய்யரவர்களிடமிருந்து வந்த தந்தியையும் படித்து காண்பித்தார்கள்.

பிறகு ஸ்ரீமான் ராவ்பகதூர் R. நரசிம்ம அய்யங்கார் அவர்கள் ஸ்ரீமான் அய்யர் அவர்களுடைய அத்யக்ஷர் பிரசங்கத்தை தமிழில் மொழி பெயர்த்துச்சொன்னார்கள். அநேகவிதமான சொற்பொழிவும் இன்னும் 9, 10 தேதிகளிலும் நடைபெற்றன.

மேல்மங்கலம்

8—2—41 மாலை 4½ மணிக்கு ஸ்ரீ அம்பி சுப்ரமணிய சாஸ்திரிகள் அவர்கள் கிருஹத்தில் ஸ்ரீ வி. எஸ். ராமசாமி சாஸ்திரிகள் பி. ஏ. பி. எல். (மாஜி பிரின்ஸ்பால் ராமேஸ்வரம் தேவஸ்தானம் சம்ஸ்கிருத கல்லூரி மதுரை) அவர்களின் தலைமையின் கீழ் ஓர் மஹாநாடு நடைபெற்றது.

அது சமயம் கல்கத்தா மஹாநாட்டின் (அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கம்) அத்யக்ஷர் ராவ்சாகிப் ஸ்ரீ நடேசய்யர் அவர்களின் அக்ராஸனப்ரசங்கம் ஆங்கிலத்திலிருப்பதை அத்யக்ஷர் V. S. R சாஸ்திரிகளவர்களால் தமிழில் மொழி பெயர்க்கப்பெற்று விவரிக்கப்பெற்றது.

கல்கத்தாவில் நடக்கும் மஹாநாடானது செவ்வனே நடைபெற்று இனிது முடிய வேண்டுமென்று இங்கு கூடிய மஹாஜனங்கள் எல்லோரும் ஏகமனதாக ஸர்வேச்ரனை பிரார்த்தித்தார்கள். வந்தனோபசாரத்துடன் கூட்டம் கலைந்தது.

தனுர்மாஸ உஷக்கால பஜனை

பாண்டிய நாட்டில் பாடல்பெற்ற பிரஸித்தமாய் விளங்கிவரும் திருக்கானப்பெயர் என்கிற திவ்விய க்ஷேத்திரத்தில் வழக்கம்போல் நடந்துவருகிற ஷை தனுர்மாஸ உஷக்கால பஜனை இவ்வருஷமும் மஹாஜனங்களினுடைய சிரத்தையினாலும் திருடதரபக்தி வைராக்கியத்தினாலும் வெகு விமரிசையுடன் நன்றாக கொண்டாடப்பட்டது. தினந்தோரும் ஒவ்வொருவரும் பக்திரஸத்தினால் பகவானுக்கு நிவேதனம் செய்து எதேஷ்டமாய் சந்தர்ப்பனையும் நன்றாய் வழங்கப்பெற்றது.

மாயவரம்.

மத்வநவமி உற்சவம்

5—2—1941 இந்நகர் காவேரிப்பாலத்திற்கடுத்த ஸ்ரீ ராமர் கோயிலில் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்திராவின் முயற்சியால் மத்வநவமியை முன்னிட்டு பகலில் பிராம்மண ஸமாராதனையும் மாலையில் குடந்தை டவுன்ஹைஸ்கூல் ஸ்ரீமான் எம். ராமராவ் பி. ஏ, அவர்களால் ஸ்ரீ மத்வாசாரியனின் மகிமையும் மத்வமதத்தின் பெருமையும் என்பதைப் பற்றி அரியதோர் உபந்யாஸம் செய்யப்பட்டது. (ந-நி)

அனுலோம விவாகங்கள் செல்லுபடியுள்ளதல்ல

சென்னை ஹைகோர்ட் தீர்ப்பு.

சென்னை ஹைகோர்ட்டில் கனம் ஜஸ்டிஸ்-பாண்டுரெங்கராவ், சோமய்யா இவர்கள் 5—2—41ல் அனுலோம விவாகங்கள் செல்லுபடியற்றதென்று செய்திருக்கும் தீர்மானம் ஆஸ்திகர்கள் யாவர்க்கும் மனதில் திருப்தியை கொடுக்கும் என்பதற்கு ஐயமில்லை.

நெல்லூரில் ஜனகீராமமூர்த்தி என்ற ஒரு பிராம்மணவக்கீல், வெங்கிடசுப்பம்மா என்கிற ஒரு சூத்திரஸ்திரீயை விவாகம்செய்து கொண்டு அவர்களுக்கு சில சந்ததிகள் பிறந்த பிறகு ஷை ஜனகீராமமூர்த்தி இறந்ததின்பேரில், ஷை சுப்பம்மாளால் ஷையார் எஸ்டேட்டிலிருந்து தனக்கும் தன்குழந்தைகளுக்கும் ஜீவனாம்சம் கிடைக்கவேண்டுமென்று தாவாசெய்ததில், நெல்லூர் டிஸ்ட்ரிக்ட்ஜட்ஜ் அவர்கள் அவள்சார்பாக தீர்ப்பு செய்தார்.

ஷை தீர்ப்பின்பேரில் சென்னை ஹைகோர்ட்டுக்கு செய்யப்பட்ட அப்பீலில் ஷை 2 ஜட்ஜிகளும் ஏகமனதாக அனுலோமவிவாகங்கள் வெகுகாலத்துக்குமுன் சிற்சில சமயங்களில் நேர்ந்ததாக தெரிகிற போதிலும் சென்ற 9 நூற்றாண்டுக்குப் பிறகு (சுமார் 1000க்கு மேலாக) அவ்விதமான வழக்கம், அனுஷ்டானத்தில் இல்லை என்றும், பஹிஷ்கரிக்கப்பட்டிருக்கிறதென்றும், புஸ்தகங்கள் மூலமாகவும், இந்தியாவுக்கு வந்திருக்கும் பிரயாணிகள் மூலமாகவும், வியக்தமாக ருஜுவாகிறதென்றும், கலியுகத்தில் இக்காலத்தில் அவ்விதம் வழக்கம் அனுஷ்டானத்தில் இல்லை என்று நிராகரிக்கப்பட்டிருக்கிறதென்றும், ஆகையால் ஷை விவாகம் செல்லாதென்றும் கண்டுபிடித்து ஷை ஸ்திரீயின் தாவாவை தள்ளிவிட்டார்கள். சீர்திருத்தம் இயக்கங்கள் தாண்டவமாடும் இக்காலத்தில் ஷை விஷயத்தில் ஹைகோர்ட்டார் அவர்கள் நியாயம் ஒன்றையே கருதி செய்திருக்கும் ஷை தீர்ப்பு மெச்சத்தக்கது.

(7ம் பக்கத்தொடர்ச்சி)

பட்ட ஒவ்வொருவர் விஷயத்திலும் ஜனத்தொகைக் கணக்கெடுப்பதற்கான கேள்விகளுக்குச் சொல்லப்படும் பதில்களைச் சரியாய்ப் பதிவுசெய்யும்படிப்பார்த்துக்கொள்வதுமே ஜனத்தொகைக் கணக்கின் நோக்கமாகும். பொதுஜனங்களின் கூட்டுறவினால் மாத்திரமே இந்த நோக்கம் எங்களுக்குக் கைகூடும். அவர்களுடைய கூட்டுறவினால்தான் கடந்த இந்த எழுபது வருஷங்களாக ஜனத்தொகைக் கணக்கெடுப்பதில் நாங்கள் சித்திபெற்றிருக்கிறோம். பெப்ரவரி மாதத்தில் இந்தக் கூட்டுறவு அதே அளவுக்கு அளிக்கப்படுமென்று ஜனத்தொகைக் கணக்கெடுக்கும் அதிகாரிகள் உறுதியாய் நம்புகிறார்கள்.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.